2012, December 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்


Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/165/News/2012



# எதை நோக்கி போகிறது இலங்கை?





- நல்லிணக்கம் பற்றி பிரட்மன்
- நீதித்துறைச் சுதந்திரத்தின் நிலை
- ரஜினிகாந்தும் அரசியலும்
- ஜெசிந்தாவின் மரணம்
- சித்தார் மேதை ரவிசங்கர்
- முன்னாள் பெண் போராளிகளின் நிலை
- ஒபாமா முன்னாள் உள்ள சவால்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# சர்வதேச தரத்தில்
# எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்
# வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...

KALAIKESARI
# கலைக்கேசரி

CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT

மாத இதழ்




சிறப்பு
விலை
125/-

உங்கள் பிரதிகளுக்கு அழையுங்கள்


சுரைனி : 0759 685658 / 0117 322741 சஹ்ரா : 0728 497720 / 0117 322731

**Purchase your digital copy at**

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை
தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை



எமது காலத்தில் எம்மால் காணக்கூடிய தாக இருக்கும் பெரிய பாவம் என்ன வென்றால், பெரும்பான்மையானவர் களின் மௌனமேயாகும். நியூயோர்க் துறை முகத்தில் நிற்கும் சுதந்திர சீமாட்டி சிலை பேசுமாக இருந்தால், அது எதிரிகளின் ஆயுதங்களைவிடவும் கூடுதலாக தன்னை வேதனைக்குள்ளாக் குவது நண்பர்களின் மௌனமேயென்று அழுதுகுளறியிருக்கும்.

மார்டின் லூதர் கிங்

# உள்ளடக்கம்


எமது விருந்தினர்
தேசமான்ய பிரட்மன் வீரக்கோன் 09

சட்டத்தின் ஆட்சியும்
நீதித்துறையின் சுதந்திரமும் 12
லால் விஜேநாயக்க

அரசியலமைப்பு ரீதியான
எதேச்சாதிகார ஆட்சியை நோக்கி... 15
குசல் பெரேரா

மாலைதீவு எங்கே போகிறது? 20
என்.சத்தியமூர்த்தி

சுயநிர்ணய உரிமை அரிச்சுவடி 23
குமார் டேவிட்

டில்லி டயரி 28
எம்.பி.வித்தியாதரன்

பரபரப்பை நாடும் ஊடக கலாசாரம்
பறிந்தெடுத்த அப்பாவியின் உயிர் 32

சென்னை மெயில் 37
எம்.காசிநாதன்

சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகும்
முன்னாள் பெண் போராளிகள் 43
துஷியந்தனி கனகசபாபதிப்பிள்ளை

காஸா நெருக்கடி 48
ஜயந்த தனபால

சித்தார் மேதை ரவிசங்கர் 50
கே.எஸ்.சிவகுமாரன்

சினிமா விமர்சனம் - நீர்ப்பறவை 55

பனுவல் பார்வை - மார்க்ஸின்
மூலதனத்திற்கு ஒரு வழிகாட்டி 58
கலாநிதி ந.இரவீந்திரன்

கடைசி பக்கம் 64
எம்.வாமதேவன்
















*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2012, டிசம்பர் 16-30



48



15



28



07



50



55



64

*Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# புலிப்பூச்சாண்டி

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் இரா ணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு மூன்றரை வருடங்க ளுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட போதிலும் கூட, சிங்கள மக்களுக்கு புலிப்பூச்சாண்டி காட்டி அவர்களின் கவனத்தை முக்கியமான நெருக்கடிகளில் இருந்து திசைதிருப்பும் பழக்கதோஷத்தை அரசாங்கத்தினால் கைவிடமுடியவில்லை. கைவிட முடியவில்லை என்று சொல்வதைவிட கைவிடத் தயாராயில்லை என்பதுதான் மிகவும் பொருத்தமானது.

இன்றையகட்டத்தில் தமிழ் மக்களுக்கு விடுதலைப்பு லிகள் மீண்டும் தேவைப்படுகிறார்களோ இல்லையோ அதுவேறு விடயம். ஆனால், நிச்சயமாக அரசாங்கத் துக்கு அவர்கள் தேவைப்படுகிறார்கள். அரசாங்கத்துக்கு எதிரான எந்தவொரு அரசியல் செயற்பாட்டையும் சர்வ தேச சதிமுயற்சியின் பின்னணியைக் கொண்டது என் றும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் எஞ்சியிருக் கக்கூடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தவரின் அரசியல் நிகழ்ச்சித்திட்டத்துக்கு துணைபோவது என்றும் அரசாங் கத்தரப்பினர் எப்போதுமே வர்ணிக்கத்தவறுவதில்லை.

சம்பள உயர்வு கோரி தொழிற்சங்கங்கள் மேற்கொள் கிற வேலை நிறுத்தப் போராட்டமாக இருந்தாலென்ன, சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு எதிராக சிவில் சமூக அமைப்புகள் வெளிப்படுத்துகிற ஆட்சேபங்களாக இருந் தாலென்ன, பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் நடத்துகிற ஜனநாயக ரீதியான போராட்டங்களாக இருந் தாலென்ன சகலதையுமே தேசவிரோதச் செயற்பாடு கள் என்றும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்குலக நாடுகளினால் தீட்டப்பட்டிருக்கும் திட்டங்களுக்கு வசதி செய்பவை என்றும் அரசாங்கத் தலைவர்கள் கூறிவந் திருக்கிறார்கள். தற்போது பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டிருக்கும் குற்றப்பிரேரணையை அடுத்து நாட்டில் தோன்றியிருக்கும் நெருக்கடியையும் கூட அவர்கள் அவ்வாறே வர்ணிக்க ஆரம்பித்திருப்ப தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

நீதித்துறையின் சுதந்திரத்தை யும் சட்டத்தின் ஆட்சி யையும் பாதுகாக்க நீதித்துறை மற்றும் சட்டத்துறை சமூகம் முன்னெடுத்திருக்கின்ற போராட்டங்களுக்கும் தேசவிரோத சாயம் பூசும் பிரசா ரங்கள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசபக்தி என்ற போர் வையில் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை மறைக் கும் இந்தக் கைங்கரியத்தை சிங்கள மக்கள் முறையாக விளங்கிக் கொள்ளக்கூடிய பயனுறுதியுடைய பிரசாரங் களை எதிரணிக்கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.













# கடிதங்கள்

## தப்பித்தலே வாழ்வா?

நவம்பர் 16-30 சமகாலத்தில் வெளிவந்த கடைசிப் பக்கக் கட்டுரையான பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனின், தப்பித்தலே வாழ்வாகி விட முடியுமா? என்ற கட்டுரை என்னை மிகவும் கவர்ந்திருந்தது. திசைமாறி அலைந்து செல்லும் இளைய சமூகத்தின் செயற்பாடுகள், அவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடு செல்வதில் காட்டும் அக்கறை பற்றி பேராசிரியர் குறிப்பிடும் விடயங்கள் யதார்த்தமானவை. விவசாயம், கைத்தொழில், கற்றலில் கவனம், சுயதொழில் முயற்சி என்பவை அற்ற சமுதாயமாக தமிழினத்தின் இளைய சமுதாயம் மாறிப்போய் விட்டால் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்பவும் யுத்தத்தால் சோர்ந்து போயுள்ள எம்மினத்தை தட்டி நிமிர்த்தவும் யார் தான் முன்வருவார். எமது இருப்பை விட்டு எல்லோரும் சென்றுவிட்டால் எம்மினத்தின் நிலை தான் என்னாவது! காலத்துக்கு அவசியமான கட்டுரை இளையவர்கள் இதனை கட்டாயம் படித்து உணர வேண்டும்.

**என்.தேவா, வெள்ளவத்தை.**

## தமிழ்பேசும் விருந்தினர்...?

சமகாலத்தின் ஒவ்வொரு இதழ்களிலும் விருந்தினர் பக்கத்தை அலங்கரிக்கும் முக்கியஸ்தர்கள் கனதியான கருத்துகளை வெளிப்படுத்திவருகின்றார்கள். அறிவுஜீவிகள் இன்றைய நெருக்கடிகள் குறித்து எத்தகைய அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு இது பெரிதும் உதவுகிறது. இது வரவேற்கத்தக்கது.

முதல் இதழில் இராஜதந்திரி கலாநிதி ஜெயந்த தனபால தொடங்கி இறுதி இதழில் தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளரான கலாநிதி ஜெகன் பெரேரா வரை சகலருமே பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களே விருந்தினர் பக்கத்தில் அபிப்பிராயங்களைக் கூறி வந்திருக்கிறார்கள். தமிழ்பேசும் சமூகங்களைச் சேர்ந்த ஒருவரும் கூட இதுவரை விருந்தினர் பக்கத்துக்காக ஏன் எழுத அழைக்கப்படவில்லை.

**ச.நிதர்சனன்**
**சங்கமித்த மாவத்தை, கொழும்பு 13**

## மு.பொ.வின் கருத்து

சமகாலத்தின் கடைசிப் பக்கத்திற்காக ஒவ்வொரு இதழிலும் சமூகத்தின் முன்னணிப் பிரஜைகளாக விளங்குபவர்களைத் தேடிப்பிடிக்கும் ஆசிரியருக்கு எனது பாராட்டுகள்

2012 டிசம்பர் 1-15 இதழின் கடைசிப் பக்கத்தில் இடம்பிடித்த மூத்த இலக்கியவாதி மு.பொன்னம்பலம் எடுத்துக் கொண்ட "மொழி பெயர்ப்பும் இலக்கிய துஷ்பிரயோகமும்" என்ற விடயத்தில் அவர் பல விடயங்களைக் கூறியிருக்கிறார். "மொழி பெயர்ப்பு என்பது மிகவும் அவசியம். ஆனால் அதற்காக பணம் இருக்கின்ற தென்பதற்காக கண்ட கண்ட குப்பைகளையும் மொழி பெயர்க்கச் செய்து நம்மவர்கள் பேணிவரும் தரத்தை சீர்குலைக்க முனையக் கூடாது" என்ற அவரின் கருத்துக்கு மறு பேச்சில்லை.

ஆனால், இன்றைய இலக்கிய உலகில் பணம் தான் பலதையும் செய்கின்றது. இன்று தினம் தோறும் இடம்பெறும் நூல்வெளியீட்டு விழாக்க

## மரணச் சடங்கும் செல்வாக்கும்

நவம்பர் மாதத்துக்கான இரண்டாவது இதழ் படிக்கக் கிடைத்தது ஒருவரது மரணத்தில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை வைத்து அவரின் மக்கள் செல்வாக்கினை அறிந்து கொள்ள முடியும் எனச் சொல்லப்பட்டு வருவதில் நம்பிக்கை கொண்டிருந்த நான் சிவசேனைத் தலைவர் பால் தாக்கரேயின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையைக் கண்டு அவர் பற்றி அபரிமிதமான எண்ணத்தைக் கொண்டிருந்தேன். ஆனால் எனது நம்பிக்கை "இறுதி ஊர்வலம் செல்வாக்கின் அளவுகோல்" தாக்காரே மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க மறுத்த நீதியரசர் ஆகிய அவர் தொடர்பான கட்டுரைகளைப் படித்ததும் தகர்ந்து போனது.

**எம்.நீருஜன், புதுக்குடியிருப்பு.**

ளைப் பார்த்தாலே இதனை இலகுவாகப்புரிந்து கொள்ள முடியும். எனவே பணம் இருக்கின்றதென்பதற்காக கண்ட கண்ட குப்பைகளையும் மொழிபெயர்க்கக்கூடாது என்பது போல் பணம் இருக்கின்றதென்பதற்காகவும் பகட்டுக்காகவும் கண்ட கண்ட குப்பைகளையும் நூல்களாக வெளியிடக்கூடாது. தமிழ் இலக்கியத்துறை பலம் பெற வேண்டும். ஆனால் தரம் குறைந்து விடலாகாது.

எனவே மு.பொன்னம்பலம் போன்றவர்கள் இது விடயத்திலும் கவனம் செலுத்தி தமிழ் இலக்கியத்துறையின் தார்மீகத்தையும் தரத்தையும் பாதுகாக்க தொடர்ந்தும் பாடுபட வேண்டுமென்பதே என்போன்ற தமிழ் இலக்கிய ஆர்வலர்களின் வேண்டுகோள்.

**எஸ். பாலசுப்பிரமணியம், கொழும்பு-4.**

## பொய்யறியும் சாதனங்கள்

டாக்டர் முருகானந்தனின் அறிவியல் களரியில் "பொய்யறியும் சாதனங்களின் மறை முகங்கள்" என்னும் தலைப்பிலான கட்டுரையில் தந்த விபரங்கள் அருமை. அந்தக் கட்டுரையைப் படிக்கத் தொடங்கிய போது இவ்வாறான முறை எமது நாட்டுக்கு கண்டிப்பாகத் தேவை. அத்துடன் இப்பரிசோதனைக்கு முதலில் எமது அரசியல் வாதிகளையே உட்படுத்த வேண்டுமென நினைத்தேன். ஆனால் இந்த பொய்யறியும் சோதனையை முறியடிக்க மாற்று வழிகளும் உண்டென டாக்டர் கூறியுள்ளமை என் எண்ணத்தில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டது. எமது அரசியல்வாதிகள் பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தவர்கள். அவர்களிடம் இந்த சோதனைகள் எல்லாம் எடுபடாது. எனினும் சிறந்ததொரு தகவலைத்தந்த டாக்டர் முருகானந்தனுக்கு எனது நன்றிகள்.

**வெற்றிவேலு ராணி, தெஹிவளை**

## ராதிகா பெற்ற விருது

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் இணைச் செயலாளர் நாயகமும், சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் விவகாரங்களுக்கான விசேட பிரதிநிதியுமான செல்வி ராதிகா குமாரசுவாமிக்கு விசேட ஜூரி விருது கிடைத்தமைக்கு இலங்கை மகளிர் சார்பாக வாழ்த்துகளை தெரிவிப்பதுடன், இதனைப் பிரசுரித்து, மக்கள் மத்தியில் அதிலும் பெண்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்திய "சமகால" சஞ்சிகைக்கு முதலில் நன்றிகள்.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலத்தில் எமது சமூகம், பெண்கள் என்றாலே குறிப்பிட்ட சில தொழில்கள், சமூக சேவைகளில் மாத்திரம் தான் ஈடுபட வேண்டும். அளவுகடந்து செய்யக்கூடாது என முட்டுக்கட்டை போடுவதாலேயே, குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்குள்ளேயே பெண்கள் செயல்படுகின்ற நிலை தோன்றியுள்ளது.

ஆயுத மோதல்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவி செய்ததுடன், சமூக உரிமைகளை பாதுகாப்பதற்கு தனது ஆற்றலையும், சக்தியையும் அர்ப்பணித்த துணிச்சல் மிகு பெண்மணி ராதிகா, பெண்கள் சமூகத்திற்கே முன்மாதிரி.

இவரைப் போன்று சேவையில் ஆர்வமுள்ள, துணிச்சல் மிகு பெண்கள், தமது இலக்கை குறிக்கோளாகக் கொண்டு முன்னேறுவதற்கு பெற்றோர் உதவ முன்வருவது காலத்தின் தேவையாகவுள்ளது.

**இஸட் ஷாறா, பேராதனை பல்கலைக்கழகம்.**




**இருவாரங்களுக்கு ஒருமுறை**

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 12

**2012, டிசம்பர் 16 - 30**


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்கள்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்
துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



நாம் வெறுக்கிறவர்களுடைய கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் எமக்கு நம்பிக்கையில்லை என்றால், எமக்கு கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரத்தில் அறவே நம்பிக்கையில்லை என்று தான் அர்த்தம்.

- நோம் ஷோம்ஸ்கி

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வரக்குமூலம்....

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழு சமர்ப்பித்த அறிக்கையை மேலும் ஆராய சுயாதீனமான குழுவொன்று நியமிக்கப்படும். எனது மனச்சாட்சியைத் திருப்திப்படுத்தவே நான் இவ்வாறு செய்கிறேன். நான் எனது மனச்சாட்சிக்கு மாத்திரமே பதில் கூறவேண்டியவன். ஏனென்றால், இறுதியில் அறிக்கையின் விளைவுகள் தொடர்பில் நான் திருப்திப்பட வேண்டும். அத்துடன் எனது பணியை நான் உகந்த முறையில் செய்திருப்பதாக நான் திருப்திப்பட வேண்டும்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கத்தில் பிரதமராக இருந்தபோது ரணசிங்க பிரேமதாச பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு வை எவ்வாறு நியாயப்படுத்தினார் என்பதை சஜித் பிரேமதாச வாசித்துப்பார்க்க வேண்டும். பொருத்தமான ஹன்சார்ட் பிரதிகளை என்னால் பெற்றுக்கொடுக்க முடியும். தந்தை என்ன சொன்னார் என்பது மகனுக்குத் தெரியவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்கது.

முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் மிகவும் வித்தியாசமான மனிதர் தனக்கெதிரான குற்றப்பிரேரணை விசாரணையின் போது தெரிவுக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி குற்றச்சாட்டுக்களை ஒத்துக் கொண்டார். அத்துடன் அந்த விடயம் அங்கேயே முடிந்துவிட்டது. அவர் மிகுந்த கண்ணியமான மனிதர்.
முதல் வாசல் ஊடாகவே அவர் பாராளுமன்ற கட்டிடத்திற்குள் வந்தார். அவர் சாதாரண ஒரு பிரஜை போன்றே பஸ்ஸில் ஏறி பாராளுமன்றம் வந்தார். அந்த விசாரணைக்கும் தற்போதைய பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரணைக்கும் இடையே நிறைய வித்தியாசம். சமரக்கோன் மிகவும் வித்தியாசமான ஆளுமை.



அமைச்சர் அநுரா பிரியதர்சன யாப்பா

பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை மீளாய்வு செய்வதற்கு சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பாராளுமன்றத்தின் முடிவின் ஆரம்பமாக அமையக்கூடும். பாராளுமன்றம் அதன் அதிகாரங்கள் சகலதையும் இழக்கப்போகிறது.



சரத்பொன்சேகா
முன்னாள் இராணுவத்தளபதி

விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கில் ஆட்சியை பிடிக்க ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள். ஜே.வி.பி.யினர் நாடு முழுவதும் ஆட்சியை பிடிக்க ஆயுதப் போராட்டம் நடத்தினார். இருதரப்பினருமே ஆட்சியைப் பிடிக்கத்தான் போராடினார்கள். அதனால் ஜே.வி.பி.யினர் தங்களது தியாகிகளை நினைவு கூருவதை மாத்திரம் ஜனாதிபதி சரியென்று கூறக் கூடாது.



மனோ கணேசன்

தெற்கில் 1987-89 கிளர்ச்சியின்போது இறந்தவர்களை ஜே.வி.பி. நினைவு கூருகிறது. யாருமே அதை எதிர்ப்பதில்லை. அதை விரும்பாதவர்கள் கூட எதையும் சொல்வதில்லை. அதைபோன்றே வடக்கிலுள்ளவர்களும் தங்களது இறந்தவர்களை நினைவு கூருவதற்கான உரிமையையும் சுதந்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும்.



பேராசிரியர் நிமல் ரஞ்சித் தேவசிறி

மிகவும் மோசமான குற்றவாளியை அப்புறப்படுத்தாவிட்டால் டில்லியில் ஒருபோதும் குற்றச் செயல்கள் குறையப் போவதில்லை. அவர் வேறு யாருமல்ல டில்லி பொலிஸ் ஆணையாளர்.



ராஜ்யசபாவில்
ராம் ஜேத்மலானா


செய்தி ஆய்வு


**அமெரிக்காவில் துப்பாக்கி மனிதர்களின் வெளியாட்டங்கள் அதிகரிப்பு**

# ஒபாமா முன்னால் உள்ள பெரிய சவால்

அமெரிக்காவின் கொனெக்ரிகட் மாநிலத்தின் நியூடவுண் பகுதியில் ஆரம்பப் பாடசாலையொன்றுக்குள் புகுந்து இளைஞன் ஒருவன் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலில் 20 சிறுவர்கள் உட்பட 28 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரச் சம்பவம் அமெரிக்காவில் மாத்திரமல்ல, உலகெங்குமே பெரும் அதிர்ச்சியையும் ஆவேசத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அடம் லான்சா என்ற 20 வயதான இளைஞன் வெறியாட்டத்தை நடத்திவிட்டு இறுதியில் தன்னைத்தானே சுட்டுக் கொன்றான்.





அமெரிக்கா அண்மைய தசாப்தங்களில் துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டங்களில் பெரும் எண்ணிக்கையானவர்களைப் பலிகொடுத்திருக்கிறது. கடந்த 30 வருடங்களில் இத்தகைய 60 சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

அமெரிக்கச் சரித்திரத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய படுமோசமான 12 துப்பாக்கி மனித வெறியாட்டச் சம்பவங்களில் 6 சம்பவங்கள் கடந்த ஐந்து வருடகால இடைவெளிக்குள் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு விசித்திரம் என்னவென்றால், அமெரிக்கா முழுவதும் ஒட்டுமொத்த வன்முறைக் குற்றச் செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகின்ற ஒரு தருணத்தில் துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

அமெரிக்கப் பிரஜைகள் துப்பாக்கிகளைச் சொந்தமாக வைத்திருப்பதற்கான உரிமையை உத்தரவாதம் செய்யும் (அரசியலமைப்புக்கான) இரண்டாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு 221 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு ஒரு நாள் முன்னதாக நியூடவுண் ஆரம்பப் பாடசாலைச் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 வருடங்களில் இடம்பெற்ற 60 துப்பாக்கி மனிதர் வெறியாட்டச் சம்பவங்களில் 31 சம்பவங்கள் பாடசாலைகளில் இடம்பெற்றிருக்கின்றன. இறுதியாக நடைபெற்ற படுகொலைகளையடுத்து மறுநாள் வெள்ளை மாளிகையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி பராக் ஒபாமா, "இந்த அனர்த்தங்களுக்கு ஒரு முடிவைக் கட்டுவதற்கு அர்த்த புஷ்டியான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கண்ணீர் வடித்துக் கொண்டே கூறினார்.

ஒபாமா கூறுகின்ற அத்தகைய நடவடிக்கை அமெரிக்காவில் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில் இருக்கின்ற சுதந்திரம் மீது கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதில் இருந்தே ஆரம்பமாக வேண்டும்.

அமெரிக்காவில் மிகவும் எளிதாக துப்பாக்கிகளை கொள்வனவு செய்து கொள்ள முடியும். ஒவ்வொரு 100 அமெரிக்கர்களுக்கும் 88.8 துப்பாக்கிகள் என்ற விகிதத்தில் துப்பாக்கிப் பயன்பாடு இருப்பதாக 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றில் இருந்து அறியக் கூடியதாக இருந்தது. 30 கோடி துப்பாக்கிகள் அமெரிக்க மக்கள் மத்தியில் புழக்கத்தில் இருக்கின்றன.

துப்பாக்கி கிடைக்கிறதோ இல்லையோ, கொலை செய்யவிரும்புகிற ஒருவர் அதைச் செய்வார் என்று அமெரிக்காவில் உள்ள துப்பாக்கி ஆதரவுக் குழுக்கள் (Gun Lobby) வாதிடுகின்றன. இது உண்மையென்றாலும் கூட, துப்பாக்கிகளை எளிதில் பெற முடியாமல் இருக்குமேயானால்தான் கொலையாளிகள் கத்திகள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள் என்ற பதில் வாதத்தில்




அதைவிடக் கூடுதல் உண்மை இருக்கிறது. துப்பாக்கிகளைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையானோரை ஒரு சில செக்கன்களில் முடித்துக்கட்டி விடலாம். அதே வேளை கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும்போது குறுகிய நேரத்தில் பெரும் எண்ணிக்கையானோரைக் காயப்படுத்தியோ, கொன்றுவிடவோ முடியாது.

அமெரிக்க அரசியலமைப்புக்கான 2ஆவது திருத்தம் ஆயுதங்களை வைத்திருப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. துப்பாக்கி நபர்களின் வெறியாட்டச் சம்பவங்கள் பெருவாரி இடம்பெற்று, பெரும் எண்ணிக்கையான அப்பாவிக்குடிமக்கள் படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றபோதிலும், அதனால் அமெரிக்கா பெரும் அனர்த்தங்களைச் சந்தித்திருக்கின்றபோதிலும், துப்பாக்கிகளை அமெரிக்கர்கள் பெறுவதற்கு வசதியாக இருக்கின்ற நடைமுறைகளை ஒழுங்கமைக்க (கட்டுப்படுத்த) அரசாங்கம் தயக்கம் காட்டிக் கொண்டே வந்திருக்கிறது.

இதற்குக் காரணம் மிகவும் செல்வாக்குடைய துப்பாக்கி ஆதரவு அமைப்புகள் குறிப்பாக, தேசிய ரைபிள் சங்கம் (National Rifle Association) போன்றவையேயாகும். இந்தச் சங்கம் குடியரசுக் கட்சியுடன் தொடர்புடையது.

துப்பாக்கிப் பயன்பாடு தொடர்பில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு தேசிய ரைபிள் சங்கம் பிரதான



முட்டுக் கட்டையாக இருக்கிறது. ஆயுதங்களை வைத்திருப்பதற்கான பிரஜைகளின் உரிமைக்கான மக்கள் ஆதரவும் மிகுதியானதாகவே இருக்கிறது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சட்டங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதென்பது சாத்தியமான காரியமாக இருக்கப்போவதில்லை என்றே பெரும்பாலானோர் நம்புகிறார்கள். தனது சுகாதாரப் பராமரிப்பு சீர்திருத்தங்களுக்கு (Health care Reforms) குடியரசுக் கட்சியினரிடமிருந்து வந்த எதிர்ப்பை வெற்றிகொள்ள ஒபாமாவினால் முடியுமாக இருந்தால், துப்பாக்கி சட்ட சீர்திருத்தங்கள் விடயத்திலும் அதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்க ஏன் அவரால் முடியாது என்ற கேள்வி இங்கு எழுகிறது.

கடந்த காலத்தில் துப்பாக்கிச் சட்டங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அக்கறை காட்டிய அமெரிக்க ஜனாதிபதிகள் தேசிய ரைபிள் சங்கத்துடன் நேரடியாகவே மோதிக் கொண்டார்கள். ஆனாலும் கூட முன்னேற்றத்தைக்காண முடியவில்லை. பொதுமக்களை தன்பக்கத்துக்குத் திரட்டிக் கொண்டு ஒபாமா தேசிய ரைபிள் சங்கம் போன்ற துப்பாக்கி ஆதரவு அமைப்புகளை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். சமுதாயத்திடமிருந்து நெருக்குதல்கள் வருமேயானால், அவற்றை எதிர்த்து நிற்பது துப்பாக்கி ஆதரவுக் குழுக்களுக்கு மிகவும் கஷ்டமானதாக இருக்கும்.


குறைந்த எண்ணிக்கையான துப்பாக்கிகள் புழக்கத்தில் இருந்தால், பாதுகாப்பான நிலைமையை கூடுதலான அளவுக்கு உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென்று (அண்மைய படுகொலைகளையடுத்து தோன்றியிருக்கும் வேதனை அலையைப் பயன்படுத்தி) அமெரிக்கர்களை நம்பவைப்பதற்கு ஒபாமா முயற்சிக்க வேண்டும்.

இது ஒபாமாவின் கடைசிப் பதவிக் காலம். துப்பாக்கிச் சட்டங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு ஒபாமாவினால் வெற்றிகரமாக முயற்சிக்க முடியுமானால், அமெரிக்கர்களுக்கு கூடுதல் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதி என்று அவர் வரலாற்றில் பொறிக்கப்படுவார். அவர் விட்டுச் செல்லக்கூடிய மிகவும் சக்திமிக்க ஒரு மரபாக இது இருக்க முடியும்.

## விருந்தினர் பக்கம்

# நல்லிணக்கத்தில் அரசாங்கத்தின் பங்கு

தேசமான்ய பிரட்மன் வீரக்கோன்



மூன்று தசாப்த காலப் போரின் முடிவுக்குப் பின்னரான நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் பங்கு நன்கு தெரிந்ததைப் போன்று மிகவும் பரந்ததும் பலமுனைகளிலானதும் சிக்கலானதுமாகும். மோதல்களின் பிரதான களமாகவிளங்கியதும் பெருமளவு சொத்து அழிவைச் சந்தித்ததுமான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, பாரபட்சமானவை என்று தமிழ்பேசும் மக்களினால் கருதப்பட்ட 1950களின் அரசகரும மொழிக்கொள்கை மற்றும் தொழில் வாய்ப்புக் கொள்கைகள் போன்று கொள்கைகளையும் நடைமுறைகளையும் படிப்படியாக இல்லாதொழித்தல், வடக்கு, கிழக்கில் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு தீர்மானங்களை மேற்கொள்வதில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதிகாரங்களை வழங்கக்கூடிய அரசியல் சீர்திருத்தங்கள் என்பவை இவற்றில் அடங்குகின்றன. இந்த மூன்று அடுக்கிலான பொருளாதார, சமுதாய மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தைத் தோற்றுவிப்பதற்கான குறைந்தபட்ச அத்திபாரமாகவும் சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையின்மையையும் விரக்தியையும் போக்குவதற்கு ஓரளவுக்கு நிவாரணத்தைத் தேடித் தரக்கூடிய ஏற்பாடாகவும் அமைய முடியும்.

இந்தச் சீர்திருத்தங்கள் குறைந்த பட்ச நிபந்தனைகளாக அமைகின்ற அதேவேளை, போரின் இறுதிக் கட்டங்களில் குறிப்பாக, வன்னிப்பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் தாக்கத்தைப் பெருமளவுக்கு அனுபவித்த தமிழ், முஸ்லிம், சிங்கள குடிமக்களின் வேதனைகளுக்கு விசேட நிவாரணங்களைத் தேடிக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். உண்மையான நல்லிணக்கத்தைச் சாதிக்க வேண்டுமானால், இதுவிடயத்தில் உடனடிக் கவனத்தைச் செலுத்தியேயாக வேண்டும்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒன்பது முன்னணி பிரஜைகளைக் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிதானமாகவும் அகஉணர்வுகளுக்கு அப்பால் நின்றும் நோக்கும் போது, மேற்கூறப்பட்ட விவகாரங்கள் பொதுப்படையாக கையாளப்பட்டிருப்பதை விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கும். 17 மாதங்களாக விசாரணைகளை நடத்திய ஆணைக்குழு 2011 இறுதியில் ஜனாதிபதியிடம் கையளித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள விதப்புரைகள் நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களினதும் அரசியல் சக்திகளினதும் இணக்கப்பாட்டுடன் நல்லிணக்கச்

செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்கக்கூடியதாக சகல அம்சங்களையும் உள்ளடக்கிய வழிகாட்டலை வழங்குகின்றன. ஆணைக் குழுவின் விதப்புரைகளின் அம்சங்களை இணங்கிக்கொள்ளாத கடும் போக்குச் சிந்தனைகொண்ட சிறு குழுக்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால், அவை சகலதுமே அரசியல் ரீதியாகவும் இனரீதியாகவும் உணர்ச்சிபூர்வமானவர்களாக விளங்கும் எமது சனத்தொகையின் மத்தியில் மிகவும் குறைந்தளவு பிரிவினரையே பிரதிநிதித்துவப்படுத்துபவையாக இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. முக்கியமானது என்னவென்றால், அரசாங்கம் ஆணைக்குழுவின் விதப்புரைகள் தொகுதியை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கென்று செயற்திட்டமொன்றையும் வகித்திருக்கிறது என்பதாகும்.

சிவில் சமூகம் குறிப்பாக, வடக்கு, கிழக்கில் உள்ள குழுக்கள் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதில் உதவமுடியும். நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டே ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2012 மார்ச்சில் அதன் தீர்மானத்தை வரைந்தது. எமது போரையும் அண்மைய வரலாற்றையும் உன்னிப்பாக அவதானித்துவந்த பெரும்பாலான நாடுகளும் உலகம் பூராகவுமுள்ள அரசியல் தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் எம்மால் நீண்டகாலமாக வசப்படுத்தமுடியாததாக விளங்கும் பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையிலான தீர்வொன்றைக் காண்பதற்கு பொருத்தமானவையாகவும் பயன்படக்கூடியவையாகவும் ஆணைக் குழுவின் விதப்புரைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதன் அடையாளமே இது என்பது எனது நம்பிக்கையாகும்.

2009 மேயில் போர் முடிவுக்கு வந்த உடனடியாகவே வெளிநாட்டு உதவிகளுடன் குறிப்பாக, இந்திய உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் அபிவிருத்தித் திட்டமொன்றை ஆரம்பித்தது. இத்திட்டம் இரு மாகாணங்களிலும் போரின்போது பெரும் பாதிப்புக்குள்ளான உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்து புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. பரவலாகக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் அவற்றை அகற்றவேண்டிய தேவையிருந்ததால் திட்டப்பணிகளை ஆரம்பிப்பதில் சுணக்கம் ஏற்பட்டபோதிலும், பராமரிப்பின்றிக் கிடந்த உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பிக்கும் விடயத்தில், பிரதானமாக ஏ-9 வீதி, வன்னியின் உள்வீதிகள், காங்கேசன்துறைத்துறைமுகம், நகரங்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் திருப்திகரமானமுறையில் முன்னெடுக்கப்பட்டன. விடுதலைப் புலிகளினால் முற்றுமுழுதாக அகற்றப்பட்ட காங்கேசன்துறை முதல் ஓமந்தை வரையிலான புகையிரதப்பாதையையும் புகையிரத நிலையங்கள் போன்ற புகையிரத சேவைக்கான ஏனைய வசதிகளையும் புதுப்பிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வடமாகாணத்தில், மீள்குடியமர்வு, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய பணிகளை முன்னெடுப்பதற்காக 19 உத்தியோகபூர்வ உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி செயலணிக்குழுவை ஜனாதிபதி 2009 மே முற்பகுதியிலேயே நியமித்திருந்தார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை (3 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள்) மீளக்குடியமர்த்துவதற்கான கேந்திரத் திட்டங்களைத் தயாரித்தல், சேதமடைந்த வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள், புகையிரதப் பாதைகள், துறைமுகங்களை புனருத்தாரணம் செய்தல், போக்குவரத்துச் சேவைகள், கைத்தொழில் துறை, விவசாயம், மீன்பிடித்துறை, வீடமைப்பு மற்றும் மத நிறுவனங்கள் போன்ற பொருளாதார மற்றும் சமூக உள்கட்டமைப்புகளை சீரமைத்தல் ஆகியவை தொடர்பான அதிகாரங்கள் இந்தச் செயலணிக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இந்தப் பணிகளைச் செய்வதில் செயலணிக்குழு அரசாங்கத்தின் பாதுகாப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படமுடியும். அத்துடன், செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பொது மற்றும் தனியார் துறையுடனும் சிவில் சமூக அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இச் செயலணிக் குழுவின் தலைவராக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் செயலாளராக எஸ்.பி.திவாரத்னவும் இருக்கின்ற அதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர், சம்பந்தப்பட்ட பணிகளுடன் தொடர்புடைய அமைச்சர்களின் செயலாளர்கள், ஆயுதப்படைகளினதும் பொலிஸினதும் தலைவர்கள் மற்றும் வடமாகாண இராணுவ இணைப்பாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்த உயர் மட்டக்குழுவில் சிவில் சமூகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வது(போர் முடிவுக்கு வந்த மூன்றரை வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்து விட்ட நிலையில்) பொருத்தமானதாக இருக்கும். அடுத்த வருட நடுப்பகுதியில் வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை செயற்படத் தொடங்கும் பட்சத்தில் இந்த ஜனாதிபதி செயலணிக் குழு இல்லாமற் போய்விடும் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இக்குழுவினால் பூர்த்திசெய்யப்பட்ட பணிகள் பற்றிய அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆனால், சம்பந்தப்பட்ட மாகாணங்களில் அறிக்கை பெரிதாகப் பிரசித்தமாகவில்லை. அதனால், செய்யப்பட்டிருக்கக்கூடிய பணிகளைப்பற்றி மக்களுக்கு உரிய முறையில் தகவல்கள் சென்றடையவில்லை.

மொழிக் கொள்கையுடன் தொடர்புடைய விவகாரங்களைக் கையாளவென்று இன்னொரு முக்கியமான செயலணிக்குழு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருந்தது.

2012 மேயில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட "மும்மொழி இலங்கை தொடர்பான செயலணிக்குழு" ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. லலித் வீரதுங்க அதன் தலைவர். உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாக பேராசிரியர் ஜே.பி.திசாநாயக்க, குமார் நடேசன், ஆர்.சி.கருணாகரன் மற்றும் மரினா முஹமட் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர். சிவில் சமூகத்தின் கருத்துகளை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்துவதற்கு நன்கு பிரபல்யமான இந்த நான்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களையும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். மூன்று பிரதான மொழிகளிலும் ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள மக்களை ஊக்குவிப்பதற்கான 10 வருட தேசிய செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஜனாதிபதியின் யோசனைகள் அமைச்சரவையினால் கடந்த வருடம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இவ்வருடம் மும்மொழி வருடம் என்றும் பிரகடனமும் செய்யப்பட்டது.

அதனால், ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விரிவான செயற்திட்டமொன்றுக்கான அத்திபாரத்தைப் போட்டிருந்தன என்று முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. அரசியல் தலைமைத்துவத்தினால் வகுக்கப்படக்கூடிய பரந்தளவிலான கொள்கை வழிகாட்டல்களின் பிரகாரமான விசேட செயற்பாடுகளை, வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவுடன் முன்னெடுக்க வேண்டியதே அடுத்த வேலையாகும்.

நல்லிணக்கத்தை நோக்கி முன்னெடுக்கப்படுகின்ற படிப்படியான செயற்பாடுகள் குறித்து அரசாங்கப் பேச்சாளர்களினால் காண்பிக்கப்படுகின்ற தோற்றப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குபவையாகவே வடக்கில் இருந்து அரசியல் தலைவர்களினால் நிகழ்த்தப்படுகின்ற பல்வேறு உரைகளும் சுயாதீன ஆய்வாளர்களினால் வெளியிடப்படுகின்ற அறிக்கைகளும் அமைந்திருக்கின்றன. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படுகின்ற அசட்டையை குறிப்பாக, விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அமைதி மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வருடங்கள் கடந்து விட்ட போதிலும், தொடர்ந்தும் இராணுவமயமாக்கலில் காட்டப்படுகின்ற அக்கறை பற்றியதாகவே இந்த விமர்சனங்கள் அமைகின்றன.

விவசாயம் செய்யக்கூடிய பெருமளவு நிலப்பரப்பை ஆக்கிரமித்து ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், குடிமக்களின் வீடுகள், நிலையங்களில் இராணுவ அதிகாரிகள் மேற்கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பு, பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தின் பிரசன்னம் ஆகியவையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரும் தடைகளாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் விசேட அம்சங்களாகும். அண்மையில் முடிவடைந்த வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் படையினர் இருப்பதாக ஒரு மதிப்பீட்டைத் தெரிவித்திருந்தார். அவரின் கூற்று மறுதலிக்கப்பட்டதாக இல்லை.

பெருமளவு நிலப்பரப்பில் படையினர் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதைப் பார்க்கின்ற தமிழ் மக்கள் மனதில் இந்தப் படையினர் அங்கேயே தொடர்ந்தும் தங்கிவிடப்போகிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார். இதுவெல்லாம் உண்மையானால், அவை ஜனாதிபதியின் நல்லிணக்க இலக்கின் பாதையில் தடைகளாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. மறுபுறத்திலே அவை உண்மையில்லையென்றால், மெய்யான புள்ளிவிபரங்களைச் சமர்ப்பித்து விரைவாகவே மறுதலிக்கப்பட வேண்டும்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக கருமேகங்களாக குவிந்திருப்பது அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தமாகும். இந்தத் திருத்தம் குறைபாடுகளைக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, தங்களுக்கு ஓரளவு உள்ளூர் சுயாட்சிக்கான வாய்ப்புகளைத் தருகின்றது என்று வடக்கு, கிழக்கு மக்கள் பொதுவில் நம்புகிறவர்கள். அடுத்தடுத்து நடைபெற்ற தேர்தல்களில் அவர்கள் வாக்களித்த பாணியை நோக்கும் போது இதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பெற்ற வாக்குகள் இதற்கு பிரகாசமான உதாரணமாகும். 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்தால் அச்செயலை வடக்கு, கிழக்கு மக்கள் உண்மையில் தங்கள் பாதையின் முடிவாகவே கருதுவர்.

இதுவிடயத்தில் ஜனாதிபதியிடமிருந்து வருகின்ற அறிவிப்புகள் உற்சாகம் தருபவையாக இருக்கின்றன. அவர் அந்தத் திருத்தத்தின் நிலையான ஒரு ஆதரவாளர். இந்திய அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது 13+ பற்றியும் கூட ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அடுத்த வருடம் மார்ச்சில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்திற்கான நாட்கள் நெருங்க நெருங்க, (நான் மேற்குறிப்பிட்ட) நல்லிணக்கத்தின் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்கள் தொடர்பில் உற்சாகம் தரக்கூடிய நகர்வுகளை எதிர்பார்க்கலாம்.

---

***தேசமான்ய பிரட்மன் வீரகோன் இலங்கையின் பிரபல்யமான சிரேஷ்ட சிவில்சேவை அதிகாரி. இவர் 1956 - 2004 காலக்கட்டத்தில் நாட்டின் ஏழு பிரதமர்களுக்கு செயலாளராகவும் மூன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளுக்கு சிரேஷ்ட ஆலோசகராகவும் பணிப்புரிந்தவர்.***

---

உள்நாட்டு அரசியல்

லால் விஜேநாயக்க



# சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுதந்திரமும்

சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுதந்திரமும் ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் இரு பிரதான தூண்கள். அண்மைக்காலமாக இவ்விரு தூண்கள் மீதும் வேதனைக்குரிய முறையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தாக்குதல்கள் பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றப் பிரேரணையில் உச்சத்தை அடைந்திருக்கின்றன.

அரசியலமைப்பின் 3ஆவது சரத்தின் கீழ் நாட்டின் இறைமை மக்களிடமே இருக்கிறது. அதை பராதீனப்படுத்த முடியாது. மக்களின் இறைமை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை அரசியலமைப்பின் 4 ஆவது சரத்து விளக்குகிறது. மக்களின் சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றத்தின் ஊடாகவும் மக்களின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியினாலும் மக்களின் நீதித்துறை அதிகாரம் சட்டத்தினால் நிறுத்தப்பட்ட நீதிமன்றங்கள், விசாரணை மன்றுகள் மற்றும் நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நீதித்துறை அதிகாரம் நேரடியாக பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரேயொரு விதிவிலக்கான அம்சம் சரத்து 4 (c)யின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளுடன் தொடர்புடைய விவகாரங்களே அவையாகும்.

அரசியலமைப்பின் 107 ஆவது சரத்தின் கீழ், உச்சநீதிமன்ற நீதிபதியொருவரை அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியொருவரை (தவறான நடத்தை அல்லது தகுதியின்மை நிரூபிக்கப்பட்டதை ஆதாரமாகக் கொண்டு) பெரும்பான்

**பிரதம நீதியரசர் குற்றப் பிரேரணை விசாரணைகளிலிருந்து வெளிநடப்புச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட தினத்தன்று தெரிவுக்குழு உறுப்பினர்களின் நடத்தைகள் நாட்டின் நீதி நிருவாகத்தில் ஒரு இருண்டநாள் ஆகும். அது ஜனநாயக ஆட்சி மீது ஒரு கரும் படலத்தை ஏற்படுத்தி விட்டது**

மையான பாராளுமன்ற உறுப்பினர்களினால் நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானம் ஒன்று கையளிக்கப்படும் பட்சத்தில் மாத்திரம் ஜனாதிபதியினால் பதவியில் இருந்து நீக்க முடியும். தவறான நடத்தை அல்லது தகுதியின்மை என்று கூறப்படுகின்றவற்றை விசாரணை செய்து நிரூபிப்பதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகளை சட்டத்தினால் அல்லது நிலையியற் கட்டளைகளினால் பாராளுமன்றம் வகுத்துக்கொள்ள முடியுமென்று அரசியலமைப்பின் சரத்து 107 (3) குறித்துரைக்கிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து எந்தவொரு சட்டமும் நிறைவேற்றப்படவில்லை. பதிலாக, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 78 (A) யின் மூலமாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றினால் விசாரணை மேற்கொள்ளும் செயன்முறையொன்று வகுக்கப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட நிலையியற் கட்டளையின் மூலமாக பாராளுமன்றம் நீதிபதியொருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் நீதித்துறை அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவானது. பாராளுமன்றம் அதன் சிறப்புரிமைகளுடன் தொடர்புடைய விவகாரங்களில் மாத்திரம் நீதித்துறைச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென்பதால், இது அரசியலமைப்பின் சரத்து 4(C) ஐ மீறுவதாகிறது. அதனால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமாக நீதிபதியொருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான செயன்முறையின் சட்டபூர்வத்தன்மை பற்றியதொரு அடிப்படைக் கேள்வி எழுகிறது.

அரசியலமைப்பின் சரத்து 125 இன் கீழ், அரசியலமைப்பை வியாக்கியானம் செய்வதற்கான தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உச்ச நீதிமன்றத்துக்கே இருக்கிறது. பாராளுமன்றத் தெரிவுக் குழுச் செயன்முறையின் சட்டபூர்வத்

தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் இப்போது உச்சநீதி மன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டி ருக்கின்றன. பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 78 (A) அர சியலமைப்புக்கு இசைவானதா, இல்லையா என்பது தொடர்பிலான வியாக்கியானத்தை உச்ச நீதிமன்றம் இப்போது செய்ய வேண்டியிருக் கிறது. இந்த வியாக்கியானத்தைச் செய்து தீர்மானமொன்றை அறிவிக் கும் வரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைகளை தாம திக்குமாறு உச்ச நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை சபாநாயகர் நிராகரித்து விட்டார்.




பாராளுமன்றத்தெரிவுக்குழு விசா ரணைக்கான நடைமுறையொன்றை வகுக்காமல், பிரதம நீதியரசருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகளை உள்ளடக்கி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் மீது விசாரணைகளை ஆரம்பிக்கத் தீர்மா னித்தது. எமது சட்டத்தின் கீழ் சிறிய தொரு குற்றச் செயலுக்காகக் கூட, ஒருவரை விசாரிப்பதற்கான நடைமு றைகள் குற்றவியல் சட்டக்கோவை யில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இங்கு ஏற்றுக்கொள்ளப்ப டக்கூடிய எந்தவொரு நடைமுறையு மேயில்லாமல் பாரதூரமான குற்றச் சாட்டுகள் தொடர்பில் பிரதம நீதியர சரை பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை செய்கிறது. அரசாங்க சேவையில் உள்ள ஒரு சிற்றூழி யர் கூட, தாபனக் கோவையின் கீழ் நியாயமான விசாரணையொன்று க்கு உரித்துடையவர். அழைக்கப்பட விருக்கும் சாட்சிகளையும் குற்றச் சாட்டுகளை நிரூபிப்பதற்கு சமர்ப் பிக்கப்படவிருக்கும் ஆவணங்க ளையும் தெரிந்துகொள்வதற்கான உரித்தையும் அந்த அரச சிற்றூழியர் கொண்டிருக்கிறார். எனவே, பிரதம நீதியரசருக்கு நேர்மையான விசார ணையொன்று மறுக்கப்பட்டிருக்கி றது என்பது தெளிவானது. அத்துடன் நாகரிகமான சமுதாயமொன்றிலே நடத்தப்படக்கூடிய விசாரணை யொன்றுக்கு இருக்கவேண்டிய சர்வ தேச தராதரங்களுக்கு இசைவான தாக இந்த விசாரணை அமைய வில்லை.

நேர்மையான விசாரணையொன்று பிரதம நீதியரசருக்கு மறுக்கப்பட் டது மாத்திரமல்ல, அவர் அவமதிக் கப்பட்டிருக்கிறார். படுமோசமாக நடத்தப்பட்டிருக்கிறார். பாராளு மன்றத் தெரிவுக்குழுவின் நடத்தை அதன் முழுச்செயன்முறைகளினதும் நியாயப்பாட்டை கேள்விக்குள்ளாக் கியிருக்கின்றது.

குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப் படுவதற்கு வழிவகுத்த நிகழ்வுகள் விசாரணை என்ற பெயரில் செய்யப் பட்டவற்றுடனும் சொல்லப்ப ட்டவற் றுடனும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அபகீர்த்திமிக்க அமைச்சர் ஒருவர் அரசாங்க ஊழியர் ஒருவரை பொலி ஸாரினதும் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் அதிகாரிகளினதும் முன் னிலையில் மரத்துடன் கட்டிவைத்த சம்பவம் முதல் அரசாங்க ஆதர வாளர்களுக்கு எதிரான கிரிமினல் வழக்குகள் மிகவும் மேலோட்டமான காரணங்களுக்காக சட்டமா அதிபரி னால் வாபஸ் பெறப்பட்ட சம்பவங் கள் வரை சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவுக்கு பெருவாரியான உதா ரணங்களை முன்வைக்க முடியும்.

கதிரியாராச்சி வழக்கு, அந்தக் கொலை வழக்கு தாக்கல் செய்யப் பட்டு 12 வருடங்களுக்குப் பிறகு விசாரணையின் இடைநடுவில் வாபஸ் பெறப்பட்டது. துமிந்த சில்வா எம்.பிக்கு எதிரான இரு பாலியல் வல்லுறவு வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. அமைச்சர் காதருக்கு எதிரான மோசடி வழக்கும்

வாபஸ் பெறப்பட்டது. பாரத லக்ஷ் மன் பிரேமச்சந்திர கொலை தொடர் பில் விசாரணைகள் நடத்தப்பட்ட முறை, ஆட்கடத்தல்கள், ஆட்கள் காணாமல் போதல் மற்றும் நீதிவிசார ணைக்கு புறம்பான கொலைகளுடன் சம்பந்தப்பட்ட வழக்குகளின் விசா ரணைகள் நடத்தப்படுகின்ற முறை எல்லாமே சட்டத்தின்ஆட்சியின் சீரழிவை அம்பலப்படுத்தி நிற்கின்ற ன. மன்னார் மாஜிஸ்திரேட் நீதிமன் றத்தின் மீதான தாக்குதலும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவினர் காட்டிய அசமந்தமும் மிகவும் பாரதூ ரமானதாகும்.

சட்டமா அதிபர் திணைக்களத்தை நீதியமைச்சிலிருந்து பிரித்தெடுத்து ஜனாதிபதியின் கீழ் கொண்டுவந் தமை கவலைக்குரிய இன்னொரு செயலாகும். இதெல்லாம் நடந்தும் கூட, நீதித்துறையை நிருவகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் வெறுமனே கைகட்டிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

அண்மைய கடந்த காலத்திலே உச்ச நீதிமன்றத்தினாலும் மேன்மு றையீட்டு நீதிமன்றத்தினாலும் அளிக் கப்பட்ட குறிப்பிட்ட சில தீர்ப்புகள் நிறைவேற்று அதிகார பீடத்தின் விருப்பத்துக்குரியவையாக இருக் கவில்லை. இஸட் புள்ளி தொடர் பான தீர்ப்பு, திவிநெகும சட்டமூலம் தொடர்பிலான இரு தீர்ப்புகள், ஒதுக் கீட்டுச் சட்டமூலம் மீதான தீர்ப்பு ஆகியவை இவற்றில் சிலவாகும். திவிநெகும சட்டமூலம் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்மானம் பாராளு மன்றத்தில் அறிவிக்கப்படவிருந்த போது அத்தீர்மானத்துக்கு எதிராக பாராளுமன்ற வளாகத்திற்குள் ஆர்ப் பாட்டம் ஒன்று இடம்பெற்றது. ஆர்ப் பாட்டக்காரர்களை சிரேஷ்ட அமைச் சர் ஒருவரும் பல எம்.பி.க்களும் வந்து பார்த்துச் சென்றனர்.

சிறிய நீதிமன்றங்களின் நீதிபதி கள் அளித்த தீர்ப்புகள் சிலவும் நீதிபதிகள் சுயாதீனமானவர்கள் என் பதையும் பொலிஸாரின் விருப்பு வெறுப்புகளுக்கு இசைவாகச் செயற்படத் தயாரில்லாதவர்கள் என்பதையும் உணர்த்தக்கூடியதாக அமைந்திருந்தன. திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங் கள், பேரணிகளை தடைசெய்வதற்கு பொலிஸாரினால் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களுடன் தொடர்புடை யனவே இத்தகைய தீர்ப்புகள். என வே, பிரதம நீதியரசரை வேட்டையா டுவதற்கு அரசாங்கம் முன்னெடுத்தி ருக்கும் நடவடிக்கை நீதித்துறையை வெருட்டி நிறைவேற்று அதிகார பீடத் துக்கு அடிபணிய வைக்கும் நோக் குடனானவை என்பதைப் புரிந்து கொள்வதில் எந்தச் சிரமமுமில்லை.

எது எவ்வாறிருந்தாலும், முழுச் செயன்முறைகளும் பிரதம நீதியரசர் விசாரணைகளில் இருந்து வெளி நடப்புச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட தினத்தன்று தெரிவுக்குழுவின் நடத் தையும் எமது நாட்டின் நீதி நிருவா கத்தில் ஒரு இருண்ட நாளாகும். அது நாட்டின் ஜனநாயக ஆட்சிமுறை மீது கரும் படலத்தை ஏற்படுத்திவிட்டது. அதை பல வருடங்கள் சென்றாலும் அழிப்பது கஷ்டமானதாகும். நாடு சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப் படக்கூடிய ஆபத்து மேலும் அதிக ரித்திருக்கிறது.

*லால் விஜேநாயக்க, ஜனநாயகத்திற் கான சட்டத்தரணிகள் அமைப்பின் அழைப் பாளர்களில் ஒருவர்.*

# பெண்கள் மீதான பாலியல் வன்முறையும் அடிப்படைவாதமும்


இந்திய தலைநகர் டில்லியில் சில தினங்களுக்கு முன்னர் 23 வயதான மருத்துவ மாணவி பஸ் ஒன்றுக்குள் வைத்து ஒரு கும்பலினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம் பவம் பற்றி கேள்வி பட்டிருப்பீர்கள் அல்லவா? அந்த பாலியல் வன்மு றைக்குக் காரணமானவர்களில் ஒரு நபர் இரவு 9 மணிக்கு மேல் இப்படி அலைந்ததற்காகத்தான் இப்படிச் செய்ததாகச் சொல்லியுள்ளதைப் பார்த்திருப்பீர்கள். சமீபத்தில் அசாம் தலைநகர் கவுஹாத்தியில்

'பாருக்கு' வந்த ஒரு பெண் இவ் வாறு வன்முறைக்கு உள்ளாக்கப் பட்ட செய்தியும் பத்திரிகையில் வெளிவந்தது.

சமீப காலங்களில் மத, சாதி அடிப் படைவாதங்கள் பெருகி வருவதன் பின்னணியில் வைத்தும் இதைப் பார்க்க வேண்டியுள்ளது. மத்தியப் பிரதேச அமைச்சர் ஒருவர் அந்தப் பெண் இப்படி அரைகுறையாக உடுத்தி வந்ததுதான் இப்படியான சம்பவங்களுக்குக் காரணம் என் றார். நமது தினமணி ஆசிரியர் வைத்தியநாதன் இதே தொனியில் தலையங்கம் எழுதினார். பெண்கள் ஆண்களுக்குச் சமமாகப் 'பாருக் கெல்லாம் போனால் இப்படித்தான் ஆகும் என்கிற ரீதியில் அந்தத் தலையங்கம் எழுதப்பட்டது.

இந்த அம்சத்தில் மத அடிப்படை வாதங்களுக்கிடையே வித்தியாசங் கள் கிடையாது. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ எல்லா மத அடிப்படை வாதிகளும் இப்படித்தான் சொல் கின்றனர். அவ்வளவு ஏன் மருத்து வர் இராமதாஸ் தாங்கள் ஆட்சி க்கு வந்தால் இரண்டாம் ஆட்டம் திரைப்படக் காட்சிகள் இருக்காது எனச் சொன்னதெல்லாம் இந்த ரகம்தானே. காலம், வெளி எல் லாமே இங்கு பாலியல் ரீதியாகவே கட்டமைக்கப்படுகின்றன. பொது வெளியும், இராக்காலங்களும் (குடும்பப்) பெண்களுக்குரியதல்ல, அவை ஆண்களுக்கே உரியன என்கிற மத்தியகால மனநிலை மீண் டும் புதுப்பிக்கப்படுவது வேதனை. காதலர்களைப் பிரித்து அடித்துத் துரத்தும் அடிப்படைவாதத்தின் கொடூர நீட்சிதான் இன்றைய டில்லி சம்பவம். எல்லாவிதமான ஒழுக்க வாதங்களும் பெண்களுக்கு எதிரா கவே அமையும் என்பதற்கு இது இன்னொரு சான்று.

*முகநூலில் பேராசிரியர் அ.மார்க்ஸ்*



குசல் பெரேரா

உள்நாட்டு அரசியல்

# அரசியலமைப்பு ரீதியான எதேச்சாதிகார ஆட்சியை நோக்கி..

ஜனாதிபதி ராஜபக்ஷவை இப்போது வெகுசிலரே நம்புவதற்கு விரும்புவார்கள் என்ற போதிலும் அவர் எல்லோரையுமே ஊகிக்க வைக்கிறார். பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணை கொண்டுவருவதற்கு தான் காரணம் அல்ல என்று நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தினருக்கும் தொழில்சார் நிபுணர்கள் சமூகத்திற்கும் கூறுவதற்கு கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் மேடையைப் பயன்படுத்தியிருந்தார்.

"இந்தப் பிரச்சினையெல்லாம் எவ்வாறு ஆரம்பித்தது? எதிர்க்கட்சியினர் இலஞ்ச ஊழல்ஆணையாளரிடம் சென்று முறைப்பாடொன்றை கையளித்தார்கள். எங்களுக்குக் கூட இது தெரியாது. கணவரை (தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் - பிரதீப் காமினி சுராஜ் காரியவசம்) தண்டிப்பது மாத்திரம் போதாது. ஏனென்றால் மனைவி (பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க) உயர்ந்த பதவியொன்றை வகிக்கிறார். எனவே நீதி கிடைக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சியினர் கூறினார்கள். இதெல்லாவற்றையும் செய்தவன் நானல்ல. சகல அரசாங்க எம்.பி.க்களும் இந்த விவகாரத்தில் முற்றுமுழுதுமாக மௌனம் சாதித்தார்கள். எதிர்க்கட்சியினர் தான் இலஞ்ச ஊழல் ஆணையாளரிடம் சென்ற போது ஊடகவியலாளர்களையும் சந்தித்து குற்றப்பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைப் செய்யப்போவதாக அறிவித்தார்கள்." (2012, டிசம்பர் 12 புதன்கிழமை டெய்லி மிரர் ஒன்லைன்) - இவ்வாறுதான் ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

ஆனால், அவர்கள் அதாவது எதிர்க்கட்சியினர் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டுவரவில்லை. அரசாங்கத்தின் 117 எம்.பி.க்கள் அவருக்கெதிரான குற்றப்பிரேரணையில் கைச்சாத்திட்டு சபாநாயகரிடம் அதைக் கையளித்தார்கள். அந்த குற்றப்பிரேரணையை உடனடியாக ஏற்றுக்கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை சபாநாயகர் நியமித்திருக்கத் தேவையில்லை. இதை நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். ஏனென்றால், பிரதம நீதியரசருக்கெதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டுவந்து








அவரை பதவி நீக்குவதற்கு ஜனாதிபதி விரும்பவில்லையானால், பாராளுமன்றத்தின் சபாநாயகரான தனது மூத்த சகோதரர் பிரேரணை மீது மேற்கொண்டு நடவடிக்கையில் இறங்குவதை நிறுத்தியிருக்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை.

பிரதம நீதியரசருக்கும் நிறைவேற்று அதிகார பீடத்திற்கும் இடையேயான தகராறு முழுவதுமே பகிரங்கமாக ஆரம்பித்தது. கடந்த செப்டெம்பரில் அந்தத் தகராறு ஊடகங்களின் முழுக் கவனத்தையும் பெற்றது. செப்டெம்பர் 18ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிக்கையொன்றை வெளியிட்டார். ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரில் ஊன்றிய கவனத்துடனான வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் பிரதம நீதியரசர் மீதும் நீதித்துறையின் மீதும் அரசாங்க உயர் மட்டத்தில் உள்ளவர்களினால் நெருக்குதல்கள் பிரயோகிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருந்தது. அது யாரைக் குறிப்பிடுகிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். செப்டெம்பர் 28 ஆம் திகதி அலரிமாளிகைக்கு பத்திரிகைகளின் ஆசிரியர்களை அழைத்து காலை விருந்தளித்து உரையாடிய ஜனாதிபதி, நீதித்துறையின் உயர் மட்டத்திலுள்ளவர்களுக்கு எதிராக அவதூறுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படக்கூடிய வாய்ப்பிருப்பதாக சூசகமாகக் கூறினார். அவ்வாறு அவதூறுப் பிரசாரங்கள் அதன்பின் அடுத்து இடம்பெற்றமை ஜனாதிபதியின் கூற்றை சரியென்று நிரூபித்தது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது பட்டப்பகலில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு நடந்தவை அண்மைக்கால சரித்திரம்.

பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணையைப் பொறுத்தவரையில் சகல செயற்பாடுகளும் தீர்மானங்களும் தங்களது விருப்பத்திற்கு இசைவான முறையில் முழுமையாக தங்களது கட்டுப்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படக்கூடியதாக உறுதிசெய்துகொண்டே ராஜபக்ஷ ஆட்சி அலுவல்களை ஆரம்பித்தது. அரசாங்க உறுப்பினர்கள் 7 பேரையும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் 4 பேரையும் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. எந்த சாட்சிகளுமோ ஆவணங்களுமோ இல்லாத நிலையிலேயே, குற்றப்பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருந்த 14 குற்றச்சாட்டுகளையும் தெரிவுக்குழு விசாரிக்க ஆரம்பித்தது. விசாரணைக்கென எந்தவிதமான இணக்கப்பாட்டுடனான நடைமுறையுமின்றி, பிரதம நீதியரசர் தரப்பிற்கு போதுமான கால அவகாசம் கொடுபடாத நிலையில் விசாரணைகள் தொடர்ந்தன. அவசர அவசரமாக விசாரணைகள் முடித்துவைக்கப்பட்டதை நாம் எல்லோரும் கண்டோம்.

இந்த ஆட்சியிடம் இதைவிட வேறு எதையும் கூடுதலாக எதிர்பார்க்க முடியாது. ராஜபக்ஷ குடும்ப ஆட்சியினால் கதைவசனம் எழுதப்பட்டு, இயக்கப்பட்ட ஒரு நாடகத்தின் காட்சிகளையே நாடு காணக்கூடியதாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன உட்பட பாராளுமன்ற எதிரணியினர் விக்கிரமசிங்கவின் வழியில் விட்டுக்கொடுப்பைச் செய்வதன் மூலம் இழைக்கப்பட்ட சகல விதமான அரசியல் பெருந்தவறுகளுக்கும் அப்பால், இந்த குற்றப் பிரேரணை அரசியலமைப்பிற்கான 18 ஆவது திருத்தத்தின் தர்க்கரீதியான அடுத்த நீட்சியை வரையறுப்பதாக இருந்தது.

பாராளுமன்றத்தின் மேலாண்மையும் இறைமையும் புனிதமானவை என்று விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட மட்டரகமான வாதம் அப்பட்டமான ஒரு பொய்யாகும். இப்போது பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரபீடத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற (தெரிவு செய்யப்பட்ட) ஆண்களையும் பெண் களையும் கொண்ட ஒரு அமைப்பேயாகும். அது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் கட்சிமாறியிருக்கிறார்கள். அமைச்



பாராளுமன்றத்தின் மேலாண்மையும் இறைமையும் புனிதமானவை என்று விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட மட்டுரகமான வாதம் அப்பட்டமான ஒரு பொய். பாராளுமன்றம் இப்பொழுது நிறைவேற்று அதிகார பீடத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆட்களைக் கொண்ட அமைப்பேயாகும். மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை



**பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப்பிரேரணையை கொண்டு வந்து அவரைப்பதவி நீக்குவதற்கு ஜனாதிபதி விரும்பவில்லையானால் பாராளுமன்றத்தின் சபாநாயகரான தனது மூத்த சகோதரர் பிரேரணை மீது மேற்கொண்டு நடவடிக்கையில் இறங்கியதை நிறுத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை**

சரவை பதவி ஆசை காட்டப்பட்டு விலைபோயிருக்கும் பெருவாரியான உறுப்பினர்களைக் கொண்டதே இந்த பாராளுமன்றமாகும்.

ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் 1978 அரசியலமைப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை அரசாங்கத்தின் தலைவராக்கியது மாத்திரமல்ல, அந்த அரசாங்கத் தலைவரை ஆளும் அரசியல் கட்சியின் எதேச்சாதிகார தலைவருமாக்கியிருக்கிறது. அதற்குப் பிறகு சட்டவாக்க சபையான பாராளுமன்றம் அதன் ஜனநாயக சாராம்சத்தையும் மேலாண்மையையும் இழந்துவிட்டது. சரத் என். சில்வா பிரதம நீதியரசராக இருந்த போது கட்சி மாறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் பாராளுமன்றத்தில் பெறுமதியற்ற தாக்கிவிட்டது. அதற்கு மக்களைப் பிரதிநிதி த்துவப்படுத்தும் ஒரு சபை என்ற நம்பகத்தன்மை இல்லை. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சபை அதே மக்களில் இருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொண்டு எந்தளவுக்கு உச்சபட்சமாகச் சீரழிய முடியும் என்பதற்கு எமது பாராளுமன்றம் ஒரு பிரகாசமான உதாரணம். "தெரிவு செய்யப்பட்ட" பாராளுமன்றத்திற்கும் மக்களின் "பிரதிநிதித்துவ" பாராளுமன்றத்திற்கும் இடையேயான கோட்பாட்டு ரீதியான வேறுபாடு மிகவும் அகலமானதும் ஒப்பீட்டு அடிப்படையில் முரண்பாடானதுமாகும்.

எனவே மக்களின் விருப்பமும் இறைமையும் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள், மறியல் போராட்டங்கள், வேலை நிறுத்தங்களின் வடிவில் பாராளுமன்றத்திற்கு வெளியே வெளிப்படுத்தப்படுகின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புத் தொடக்கம் சம்பள உயர்வுக் கோரிக்கை, அடாத்தான கைதுகள், ஆட்கள் காணாமல் போதல், தொடர்ச்சியான கொலைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், பாலியல் வல்லுறவுச் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு வரை சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கோரி மக்கள் வீதிகளில் இறங்கவேண்டியிருக்கிறது. அரசியலமைப்பிற்கு இசைவில்லாத சட்டமூலங்கள் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படுவதை எதிர்த்தும் மக்கள் ஆர்ப்பாட்டங்களைச் செய்கிறார்கள். தற்போதைய குற்றப்பிரேரணை விவகாரத்திலும் அதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. ஆட்சி முறைக்கு எதிராக பாராளுமன்றத்திற்கு வெளியே மக்கள் அணிதிரண்டு வெளிக்காட்டுகின்ற உணர்வுகளுக்கு உகந்த பிரதிபலிப்பாக நிலையியற் கட்டளைகளினூடாகவோ அல்லது சபைக்குள் சட்ட ரீதியான வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாகவோ முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் அமையப்போவதில்லை. ஏனென்றால் நிறைவேற்று அதிகாரபீடத்தின் ஆணைகளின் பிரகாரமே பாராளுமன்றச் செயற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதனால் பாராளுமன்றத்தின் மேலாண்மை தொடர்பிலான விக்கிரமசிங்கவின் வாதம் மக்களின் இறைமையின் பெயரில் இந்த நாட்டின் நீதித்துறையின் உயர்ந்த பதவியில் இருப்பவர் மீது தீர்ப்புக்கூறுவதற்கான உரிமையைக் கேடுகெட்ட பேர்வழிகளடங்கிய குழுவொன்றிற்கு வழங்குவதாக அமைகிறது. பாரபட்சமற்றதும் சுயாதீனமானதுமான அரசியலமைப்பு பொறிமுறையொன்றினூடாக விசாரணை நடத்தப்படும் பட்சத்தில் பிரதம நீதியரசர் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்று தீர்மானிக்கப்படுவது வேறு விடயம்.

விக்கிரமசிங்கவின் அடுத்தவாதம் முன்னதை விட அபத்தமானது. பிரதம நீதியரசருக்கெதிரான குற்றப்பிரேரணையை பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரித்து முடிப்பதற்கு அனுமதித்துவிட்டு அதற்குப்பிறகு பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படாவிட்டால் இல ங்கை பொதுநலவரசு நாடுகள் அமைப்பின் உறுப்புரிமையை இழக்கும் ஆபத்து ஏற்படும் என்று விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். இது பிரதம நீதியரசருக்கெதிராக குற்றப்பிரேரணையைக் கொண்டுவருவதற்கு தான் காரணமாக இருக்கவில்லை என்று ஜனாதிபதி கூறுவதைப்போன்றது. ஆனால், இந்தப் பிரச்சினைக்கும் பொதுநலவரசு உறுப்புரிமைக்கும் என்ன

சம்பந்தம்? இலங்கை அரசியலில் பொதுநலவரசு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. இனிமேலும் அப்படித்தான்.

போர்க்காலத்தில் பொதுநலவரசு எங்கே போனது? தேசிய இன நெருக்கடிக்கு ஜனநாயகப் பண்பு மிக்க முடிவொன்றைக் காண்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட பெருவாரியான சந்தர்ப்பங்களில் பொதுநலவரசு என்ன செய்தது? புலிப்பயங்கரவாதிகளுக்கு எதிரான தென்று கூறிக்கொண்டு முன்னெடுக் கப்பட்ட போரின் விளைவான மனித அவலங்களின் போது கூட பொது நலவரசு உதவிக்கு வரவில்லையே. இலங்கையில் 2013 நவம்பரில் பொதுநலவரசு அரசாங்கத் தலை வர்களின் உச்சி மகாநாட்டை நடத் துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் படவிருக்கும் இத்தருணத்தில் கூட இந்தப் பிரச்சினைகள் எதிலுமே அந்த அமைப்புக்கு அக்கறையில்லை. எனவே பெரும் பொருட் செலவில் இருவருடங்களில் ஒரு தடவை சொற்ப எண்ணிக்கையான உயர் மட்ட அரசியல் தலைவர்கள் பங்கேற் கிற சம்பிரதாயபூர்வமான இந்த மகாநாடு குறித்து எதற்காக கவலைப் படவேண்டும்? இறுதியாக 2011 ஆம் ஆண்டில் மேற்கு அவுஸ்திரேலி யாவின் பேர்த் நகரில் நடத்தப்பட்ட பொதுநலவரசு உச்சிமகாநாட்டிற்கு 69,449,169 அமெரிக்க டொலர்கள் செலவுசெய்யப்பட்டது என்பது கவ னிக்கத்தக்கது.

பொதுநலவரசு உறுப்புரிமையை விடவும் பிரதம நீதியரசருக்கெதி ரான இந்தக் குற்றப்பிரேரணையில் மிகவும் பாரதூரமான பிரச்சினைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அரசியல மைப்பிற்கான 17ஆவது திருத்த த்தை ரத்துச்செய்து 18ஆவது திருத் தம் நிறைவேற்றப்பட்ட போது ராஜ பக்ஷ அடுத்தடுத்து ஜனாதிபதித் தேர்தல்களில் தொடர்ச்சியாக போட் டியிடுவதற்கு வகை செய்யப்பட் டது. ஆனால் அவர் தொடர்ச்சியாக வெற்றிபெற வேண்டும். அல்லது அவர் விரும்பியவாறு தேர்தல்களில் போட்டியிட முடியாது. ஆனால், ஒன்று மட்டும் உண்மை, இறுக்கமாக பின்னிப்பிணைந்த ஒரு வம்சத்தவர் கள் என்ற வகையில் ராஜபக்ஷாக்கள் தொடர்ந்து அதிகாரத்திலிருப்பதை நோக்கியே செயற்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள். இத்தகைய குடும்ப ஆட்சி ஒருபோதுமே அதன் அதிகா ரத்தை கேள்விக்குள்ளாக்கும் எவ ரையும் அனுமதிக்காது. அதனால் அந்த ஆட்சிக்கு முற்று முழுதான அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. தங்களுக்கு சவால்விடுக்கக் கூடிய வர்களுக்கு இருக்கின்ற சிறியதொரு இடைவெளியைக் கூட இல்லாமல் செய்வதே ராஜபக்ஷாக்களின் நோக் கமாகும். கேள்விக்கிடமின்றி சகல அதிகாரங்களையும் தம்வசமாக்குவ தற்கு அவர்களுக்கு பெரும் சொத்து கள் தேவைப்படுகின்றன. பிரகடனப் படுத்தப்படாத வழிவகைகளினூடாக கணக்கு காட்டப்படாத சொத்துகளை அம்பாளிக்கும் செயற்பாடுகளில் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். அரசியலமைப்பு ஆட்சிமுறையை முற்றுமுழுதாக மாற்றியமைக்கும் கைங்கரியங்களில் அவர்கள் ஈடுபடு கிறார்கள். தங்களது ஆட்சிமுறைக்கு சவால் எதுவும் வராத வகையில் ஏற் பாடுகளைச் செய்வதில் அவர்கள் அக்கறைகாட்டுகிறார்கள்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்வது குறித்து அரசாங்கத் தலைவர்கள் பேசுவதை பிரிவினை கேட்டமைக்காக தமிழர் களைத் தண்டிக்கும் ஒரு காரியமாக சிங்களவர்கள் பார்க்கிறார்கள். சிங் களவர்களைப் பொறுத்தவரை தமிழர் களுடைய உரிமை மாத்திரமல்ல, தங் களுடைய அரசியல் ஜனநாயக உரி மைகளும் கூட நிராகரிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதை உணரத் தவறுகிறார்கள். தென்னிலங் கையும் உருப்படியான பொருளாதார அபிவிருத்தியை அடையமுடியாமல் இருக்கிறதென்பதை சிங்களவர்கள் 60 வருடங்களாக உணரவில்லை. ஜனநாயகம், சமூகமொன்று வறுமை யில்லாமல் நவீன வாழ்க்கை முறை களுடன் வாழ்வதற்கான வாய்ப்புகள் பெரும்பாலான சிங்களவர்களுக்கும் மறுக்கப்பட்டேயிருக்கிறது. கொழும் பில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட தால் மாகாணங்களில் கண்ணியமான எந்தவொரு அபிவிருத்தியும் சி ங்கள மக்களுக்கு கிட்டக்கூடியதாக வில்லை. பிரதம நீதியரசருக்கெதி ரான குற்றப்பிரேரணையை சூழ்ச்சி த்தனமாக முன்னெடுக்கின்ற அதே வேளை, அதிகாரப்பரவலாக்கலுக் கெதிரான பிரசாரத்தை இடையறாது முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளி யான விமல் வீரவன்சவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.


மத்தியில் மேலும் அதிகாரங்கள் குவிக்கப்படுவதை நியாயப்படுத்தும் பிரசாரங்களை விமல் வீரவன்ச மாத்திரம்தான் முன்னெடுக்கின்றார் என்று இல்லை. தெற்கில் வளர்த்தெ டுக்கப்பட்டிருக்கும் சிங்கள பௌத்த வெறியில் காலூன்றி உயிர்வாழும் இந்த அரசாங்கம் சட்டவிரோதமான வழியில் அதிகாரங்களை அபகரிப் பதற்கு "பொதுபலசேனா" என்ற வன்முறை அமைப்புகளினூடா கவும் பிரசாரங்களை முன்னெடுக் கிறது. காவியுடை தரித்தவர்களின் தலைமையிலான இந்த வன்முறைக் கும்பல் அரசாங்க குடும்ப சுகாதார நிலையங்களுக்குள்ளும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குள்ளும் ஏன் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும் கூட அத்துமீறிப்பிரவேசித்து சட் டத்தை தங்கள் கைகளில் எடுத்து அடாவடித்தனம் பண்ணுகிறார்கள். ஆனால் இவர்கள் ஒருபோதும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுவ தில்லை. சமாதானத்தையும் இனங் கள் மற்றும் மதங்களுக்கிடையிலான சமூக உறவுகளையும் சீர்குலைக்கும் இந்தக் கும்பல்களுக்கெதிராக பொலி ஸார் ஒருபோதும் நடவடிக்கை எடுப் பதில்லை. ஆனால், அடிப்படை மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் சிவில் அமைப்புகளுக்கு எதிராக உடனடியா கவே பொலிஸார் வன்முறையைப் பிரயோகிக்கத் தவறுவதில்லை. இந்த பௌத்த வன்முறைக்கும்பல்கள்

பொதுச்சொத்துகளை சூறையாடுவது பற்றி கவனத்திலெடுக்க ராஜபக்ஷ ஆட்சி தயாராய் இல்லை. தென்னிலங்கையை அச்சுறுத்தி வைத்திருப்பதற்கு "ஹிட்லரின் பிரவுன் சேட்ஸ்" பாணியிலான கும்பல்கள் ஆட்சியாளர்களுக்கு தேவைப்படுகின்றன. அப்போதுதான் அதிகாரங்களை தங்கள் வசப்படுத்தும் வேலையை இலகுவாக தொடர்ந்து செய்யக்கூடியதாக இருக்கும்.

அதேவேளை வடக்கு, கிழக்கிலும் இராணுவத்தினரின் உதவியுடன் இத்தகைய அச்சுறுத்தல் நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன. போரில்லாத போதிலும் கூட ஆட்கள் காணாமல் போகிறார்கள், அடாத்தாக கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுகிறார்கள்.

சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்தால் தற்போது அவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்கு முன்பாக 24 மணித்தியாலங்களே பொலிஸாரால் தடுத்துவைக்க முடியும். ஆனால், இந்தத் தடுப்புக் காவலை 48 மணி நேரமாக நீடிப்பதற்கு குற்றவியல் நடைமுறைக்கோவைக்கு திருத்தமொன்றைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. குற்றச்செயல்கள் கடுமையாக அதிகரித்திருப்பதால் இந்தத் தடுப்புக்காவல் நேர நீடிப்பு அவசியமானதென்று ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான விஜேயதாச ராஜபக்ஷ ஒத்துக்கொண்டிருக்கிறார். அவரின் இந்த நியாயப்படுத்தல் தவறானது. சட்டம் ஒழுங்கு முற்றுமுழுதாக சீர்குலைந்திருக்கின்ற நிலைமை தொடர்பில் அவரது வியாக்கியானம் ஏற்றுக்கொள்ள முடியாதது. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பைக் கொண்ட அமைப்புகள் மத்தியில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. உண்மை நிலை அவ்வாறிருக்க அரசியல் அராஜகத்திற்கு துணை போகக் கூடியதாக குற்றவியல் நடைமுறைக் கோவைக்கு திருத்தத்தைக் கொண்டுவருவதை சட்டத்தரணிகள்சங்கத் தலைவர் ஆதரித்திருப்பது பெரும் துரதிர்ஷ்டவசமானது.

இன்று எமது நாட்டில் நிறைவேற்று அதிகார பீடத்தின் ஆணைகளுக்கு கட்டுப்பட்டு செயற்படுகின்ற போது சட்டவாக்க சபையே இருக்கிறது. நீதித்துறைதான் எஞ்சியிருந்தது. அதிலும் தங்களது முழுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். சகலதையுமே சூறையாடும் ஒரு அரசியலமைப்பு ரீதியான எதேச்சாதிகார ஆட்சியை (Constitutional Kleptocracy) ஏற்படுத்துவதே ஆட்சியாளர்களின் இலக்காகும். ஆனால், எதிர்க்கட்சியினரின் நிலையோ பரிதாபகரமானதாக அமையும். பயந்தாங்கொள்ளித்தனமாக விட்டுக்கொடுத்துச் செயற்படுகின்ற போக்கை கைவிட்டு மக்களுக்கு துணிச்சலான தலைமைத்துவத்தை வழங்க எதிர்க்கட்சிகள் தயாராயில்லை. பிரச்சினைகளை விவாதித்து முன்னோக்கிச் செல்வதற்கான ஒருசெயற்திட்டத்தை வகுக்க வேண்டிய பொறுப்புக்கூட இப்போது பிரஜைகளின் அமைப்புகளிடமே விடப்பட்டிருக்கின்ற நிலை.



தெற்காசிய நிலைவரம்

என்.சத்திய மூர்த்தி




# மாலைதீவு எங்கே போகிறது?

**இலங்கையைப்போன்றே மாலைதீவும் சீனா இழுப்புக்கு ஆடுவதாக இந்தியாவிலுள்ள அறிவுஜீவிகள் சிலர் கருதுகிறார்கள். இந்தியாவின் ஏனைய அண்டை நாடுகளைப் போன்று மாலைதீவையும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனம் பயன்படுத்துவதாக இந்தியா கருத இடமுண்டு. இந்தியாவைப் பாதிக்கும் அனைத்துமே இலங்கையையும் பாதிக்கும்**


ஜனாதிபதி வாகீத்


நஷீத்


கயூம்

ஜனநாயகம் இதுவெல்லாமா ஒரு நாட்டிற்கு செய்யும்? இரண்டாயிரம்-மூவாயிரம் ஆண்டு களுக்கும் மேலாக உலகம் அறிந்தி ராத அல்லது கண்டுகொள்ளாமலே விட்டிருந்த இந்தியப் பெருங்கடலில் குடிகொண்டிருக்கும் குட்டி நாடான மாலைதீவு கடந்த மூன்று அல்லது நான்கு வருடங்களாக தானே செய் தியாகி வருகிறது. இது அண்டை நாடுகளான இலங்கையிலும், இந் தியாவிலும் நியாயமான ஆர்வத் தையும் கவலையையும் தோற்றுவித் துள்ளது. காரணம், மாலைதீவின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தி ரமற்ற தன்மை, இந்த இரு தெற்காசிய நாடுகளையும் பல்வேறு விதங்களில் பாதிக்கும். அதற்கும் அப்பால் சென் று, மூன்று நாடுகளுக்கும் பொது வான கடல் பகுதிக்கும் மாலைதீவின் ஸ்திரமின்மை பரவுமேயானால், அது தெற்காசியாவின் தென் பகுதிக ளில் பாதுகாப்பு அச்ச உணர்வையே தோற்றுவிக்கும்.

முப்பது ஆண்டுகளாக பதவியில் இருந்த ஜனாதிபதி அப்துல் கயூ மின் ஆட்சிக்குப் பின்னர் ஜனநா யக ரீதியாக பல்வேறு கட்சிகளும் பங்குபெற்ற தேர்தலில் முஹமது நஷீத் பதவிக்கு வந்ததில் இருந்தே பல்வேறு புதிய பிரச்சினைகள் ஆரம்பமாகின. அண்மையில் இந்தி யா, இலங்கை போன்ற நாடுகளில் இரத்தக்களரி என்று ஒன்று இல்லை என்றாலும், ஏதோ ஒரு விதத்தில் சுதந்திரத் தாகத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நாடே ஒன்றாகத் திரண்டது. சுதந்திரம் அடைந்து தன்னாட்சிச் சூழ லில் தான் அங்கெல்லாம் கட்சிகள் பிளவுண்டன.

ஆனால், மாலைதீவில் கடந்த தசாப் தங்களில் நிகழ்ந்தேறியது சுதந்திரப் போராட்டம் அல்ல. தங்களில் ஒருவ ரான ஜனாதிபதி கயூமின் எதேச்சாதி காரத்தை எதிர்த்த பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து ஆதரவு தெரிவித்து நஷீதை பதவியில் அமர்த்திய கூட்டாட்சி. இன்னும் சொல்லப் போனால், முதல் சுற்றில் தனித்துப் போட்டியிட்ட அனைவருமே பின் னர் நஷீதை இரண்டாம் சுற்றில் ஆத ரித்ததால் மட்டுமே நஷீத் ஜனாதிபதி கயூமை தோற்கடித்து பதவியில் அமர முடிந்தது. பின்னர் கூட்டணி தர்மத்தை பின் தள்ளிவிட்டு, பதவி யில் அமர்ந்த சில வாரங்களிலேயே அதன் தலைவர்கள் தங்கள் பதவி யில் இருந்து விலக வழிசெய்ததால் இந்த வருடம் பெப்ரவரி ஏழாம் திகதி ஜனாதிபதி நஷீத் பதவி விலக வேண் டிய சூழ்நிலை உருவானது.

தற்போது நஷீதின் அரசாங்கத்தில் துணை ஜனாதிபதியாக பதவி வகித்த வாஹீத் அரசியல் சட்டத்தின் கீழ்

ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். அவர் பதவி ஏற்பதற்கு வகை செய்ய தன்னை எதிர்த்து இராணுவப் புரட்சியே வழிசெய்தது என்பதை நஷீதின் நிலையை அவரது கோரிக்கையை ஏற்று நியமிக்கப்பட்ட சர்வ தேச குழு ஏற்றுக்கொள்ள மறுத்தது. நஷீத் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கோரி, போராட்டம் நடத்திய அனைத்து எதிர்க்கட்சிகளும் இன்று ஆட்சியில் பங்கு வகிக்கின்றன. ஆனால், அவர்களிடையேயும் கருத்து வேறுபாடுகளும் தனிநபர் பிரச்சினைகளும் தொடர்கின்றன. இந்தப் பின்னணியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர்-அக்டோபர் மாதத்திற்குள் நடைபெற வேண்டும். அது குறித்த இழுபறியும் அரசியல் நிலைமை ஸ்திரத்தன்மை அடைய விடாமல் குறுக்கே நிற்கின்றன.

நஷீத் பதவி இழந்த சில வாரங்களிலேயே அவரது கட்சி பொதுக் குழு அவசரமாக கூடி அவரே தங்களது அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று அறிவித்து விட்டது. அதில் நியாயம் இருந்தது. அவசரமும் இருந்தது. தடாலடியாக நஷீத் பதவி இழந்ததால், அடுத்த தேர்தலுக்கான பிரசாரத்தை அவரது கட்சி துவங்க வேண்டியிருந்தது. கடந்த தேர்தலில் முதல் சுற்றில் அவர் 25 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். இன்றைய சூழலில் அது பத்து அல்லது பதினைந்து சதவீதம் அதிகமாகி இருந்தாலும், அதுவே 50 சதவீதமாக உயர்ந்து அவர் வெற்றிபெறும் வாய்ப்புக் குறைவாகவே உள்ளது.

கடந்த முறை இரண்டாவது சுற்றில் அவரை ஆதரித்த கட்சிகளைப் பகைத்துக் கொண்டதால் நேரடியாகப் பிரசாரம் செய்து அதிக வாக்குகளைப் பெற வேண்டிய கட்டாயத்திற்கு கட்சி தள்ளப்பட்டுள்ளது. அதற்கு பிரசாரத்திற்கு அதிக நேரம் வேண்டும். அந்த எண்ணத்திலேயே நஷீத்தின் மாலைதீவு ஜனநாயக கட்சி அவரை உடனடியாக தனது வேட்பாளராக அறிவித்தது. அதனைத் தொடர்ந்து நஷீதும் கடந்த இரண்டு - மூன்று மாதங்களாக தலைநகர் மாலேயில் சில வாரங்கள், தொலை தூரங்களில் உள்ள குட்டித் தீவுகளில் சில வாரங்கள் என்று தனது நேரத்தை தேர்தல் பணியில் செலவிட்டு வருகிறார். அவருடன் கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் பயணித்து வருகின்றனர்.

ஆனால், அவசர அவசரமாக கட்சி, நஷீதை வேட்பாளராக அறிவித்ததற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. அவர் பதவி விலகுவதற்கு ஒரு மாதத்திற்கும் குறைவாக, ஜனவரி 16-ஆம் திகதி நாட்டின் குற்றவியல் நீதிமன்றங்களின் பிரதம நீதிபதி அப்துல்லா முகமதை, ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இராணுவம் கைது செய்து, தீவுச் சிறையில் அடைத்தது. அந்த நீதிபதிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் பல ஆண்டுகளாக இருந்தாலும் இறக்கும்வரை பதவி வகிக்கலாம் என்ற சட்டத்தின் கீழ் அவர் தொடர்ந்து நீதிபதியாகவே பணியாற்றி வந்தார். ஆனால், தடாலடியாக அவரைக் கைது செய்தது, கடந்த டிசம்பர் 23-ஆம் திகதி முதல் ஒரு மாதத்திற்கும் மேலாக இஸ்லாமிய மதவாதிகளின் தலைமையில் நஷீத் பதவி விலகவேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் போராட்டத்தில் இருந்து நாட்டை திசை திருப்பவே என்ற எண்ணம் உருவானது.

தற்போது நீதிபதியின் கைது சட்ட ரீதியானது அல்ல என்ற வகையில் புதிய அரசு நஷீத் மற்றும் ஏனைய பலர் மீது கிரிமினல் வழக்குத் தொடர்ந்துள்ளது. அந்த வழக்கை எதிர்த்து நஷீதின் வாதத்தை நாட்டின் உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் நஷீதுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டால் அவர் தேர்தலில் நிற்பதை சட்டம் தடைசெய்கிறது. அதனைக் காரணம் காட்டி, கட்சி நஷீதை எங்கே ஓரம் கட்டிவிடுமோ என்ற எண்ணத்திலேயே அவரது ஆதரவாளர்கள் சிலர் அவரை அவசர அவசரமாக வேட்பாளராக அறிவிப்பதில் முனைப்புக் காட்டியுள்ளனர். அதேசமயம், நஷீத் சிறைப்படுத்தப்பட்டால் அவரது இடத்தை நிரப்புவதில் கட்சிக்குள் குழப்பம் காணப்படுகிறது.

இது போன்றே ஆளும் கூட்டணியிலும் எல்லா விடயங்களிலும் வேறுபாடும் குழப்பமும் நிலவுகின்றன. குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆளாளுக்கு இஷ்டப்படி கருத்துத் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி வாகீத் உட்பட ஆளும் கூட்டணியில் ஒவ்வொரு கட்சியும் தனது




**தலைநகர் மாலேயில் விமான நிலையத்தைப் புதுப்பிக்க இந்தியாவின் ஜி.எம்.ஆர். குழுமத்தோடு முன்னைய நஷீத் அரசு செய்துகொண்ட ஒப்பந்தத்தை தற்போதைய அரசு ரத்துச் செய்ததினால் இரு நாடுகளுக்குமிடையில் கீறல் விழுந்துள்ளது என்றாலும் இரு தரப்பும் சீர்செய்யும் முயற்சிகளில் இறங்கலாம்**

வேட்பாளரையே முன்னிறுத்தி வருகிறது. தேர்தலில் வெற்றி பெறுகிறோமோ இல்லையோ, முதல் சுற்றில் கணிசமான வாக்குகளைப் பெற்றால் மட்டுமே இரண்டாம் சுற்றில் பேரம் செய்ய முடியும் என்றே அனைத்துக் கட்சிகளும் கருதி செயல்படுகின்றன.

அதிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கயூமின் மாலைதீவு முற்போக்கு கட்சியில் அவரையும் சேர்த்து மூன்று அல்லது நான்கு வேட்பாளர்கள் உள்ளனர். இது தவிர, எதிரணியில் நஷீத் கட்சிக்கு துண்டுவிழும் வாக்குகளை வழங்கி அதிகமாக அரசியல் பயனடையலாம் என்று கருதும் ஆளும் கூட்டணிக் கட்சிகளும் உள்ளன. இது போதாது என்று அனைத்து கட்சிகளுக்குமே ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து 2014-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் தற்போது உள்ள இடங்களையாவது தக்கவைத்துக் கொள்ள வேண்டிய விதத்தில் இப்போதே கூட்டணி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது.

இந்த அனைத்து குழப்பங்களுக்கும் இடையே தான் தலைநகர் மாலேயில் விமான நிலையத்தை புதுப்பிக்கும் பணியை இந்திய கட்டமைப்பு நிறுவனமான ஜி.எம்.ஆர் குழுமத்தோடு நஷீத் அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தை தற்போதைய அரசு ரத்துச் செய்துள்ளது. இது குறித்து இரு நாடுகளுக்கிடையில் கீறல் விழுந்துள்ளது. என்றாலும் அதனைச் சரிசெய்யும் முயற்சியில் இரண்டு அரசுகளும் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் நஷீத் பதவி விலக நேர்ந்த நேரத்தில் தோன்றிய அரசியல் மற்றும் சட்ட- ஒழுங்குப் பிரச்சினைகளைச் சரி செய்ய தெற்காசியாவின் மிகப் பெரிய நாடு என்ற வகையில் இந்திய வெளியுறவு செயலர் ரஞ்சன் மத்தாய் இரண்டு முறை மாலே சென்று ஓரளவிற்காவது சகஜ நிலை திரும்ப முயற்சி செய்தார். அதனை ஒட்டிய ஆதங்கமும் சில கட்சிகள் விமான நிலைய ஒப்பந்த விடயத்தை இந்தியாவைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன.

இந்தியா விடயத்தில் மற்றொரு இந்திய பெருங்கடல் நாடான இலங்கையைப் போலவே மாலைதீவும் சீனா இழுத்த இழுப்பிற்கு ஆடுவதாக இந்தியாவில் உள்ள சில அறிவு ஜீவிகள் கருதுகின்றனர். அது போன்றே, இந்தியாவின் பிற அண்டை நாடுகளைப் போலவே மாலைதீவையும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனம் பயன்படுத்துவதாக இந்தியா கருத இடம் உள்ளது. அது போன்றே மதத்தின் பெயரில் அடிப்படைவாதம் செய்யும் சிலர் தற்போதைய வாகீத் தலைமையிலான அரசின் கீழ் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளனர். அவர்களின் தூண்டுதலில் தீவிரவாதம் நாட்டில் தலையெடுக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படுகிறது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால், இந்தியாவைப் பாதிக்கும் இவை அனைத்துமே இலங்கையையும் பாதிக்கும். பொருந்தவும் செய்யும்.


**GET சமகாலம் DELIVERED TO YOUR HOME**

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

***For more details, please contact :***
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

**ORDER FORM :**

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

**SUBSCRIBER INFORMATION :**

Title :..................... Last Name :..........................................
First Name :...........................................................................
Organization :.........................................................................
Address :...............................................................................
...................................................................................................
Phone :.............................. Mobile :...............................
Fax :.................................. E-mail :...............................
Payment : Amount Rs.........................
☐ Cash ☐ Cheque
Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**
Bank :............................... Cheque No :.........................
Signature :..............................


அரசியல் கோட்பாடு

# சுயநிர்ணய உரிமை அரிச்சுவடி

## சகலரையும் குழப்பநிலைக்குள்ளாக்கும் சில தமிழ்ப் புத்திஜீவிகள்


விளாடிமிர்

இலங்கையைப் பொறுத்தவரையிலும், அது எதிர் நோக்குவதையொத்த நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்ற ஏனைய நாடுகளையும் பொறுத்தவரையிலும் முக்கியமானதாக இருக்கின்ற சுயநிர்ணய உரிமை குறித்த அடிப்படை விவாதம் அரசியல் ரீதியானது. சட்டவிவகாரங்களிலும் சர்வதேச உடன்படிக்கைகளிலும் சுயநிர்ணய உரிமை என்ற பதம் வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அரசியல் விவாதத்தில் அது முக்கியமானதல்ல. இந்தப் பதத்தின் அரசியல் பயன்பாடு லெனினின் பிரதான அக்கறைகளில் ஒன்றிலும் ஜேர்மன் மார்க்சியவாதியான றோசா லக்சம் பேர்க்குடனான அவரது விவாதங்களிலும் மூலத்தைக் கொண்டதாகும். ஏனைய பல மார்க்சிய அறிஞர்களும் மார்க்சியவாதிகள் அல்லாத அறிஞர்களும் கூட சுயநிர்ணய உரிமையைப் பற்றிய விவாதங்களுக்கு பெருமளவுக்கு பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். ஆனால், லெனினின் கருத்துகளே எப்போதும் முக்கிய கவனத்திற்குரியவையாக இரு ந்து வருகின்றன.



இந்த நீண்ட வரலாற்றுடன் பரிச்சயமுடையவர்களுக்கு இந்தக் கட்டுரையின் விடயதானம் ஒன்றும் புதியதல்ல. ஆனால், இளையவர்கள் பலர் பின்புலத்தைக் கொண்டவர்களாக இல்லாதிருப்பதை நான் அவதானித்திருக்கிறேன். உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளிப்புற சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் பொருந்தாத கருத்துகளைப் பேசுவதன் மூலமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சில தலைவர்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் விவாதத்தைக் குழப்பியடித்துக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அத்தகையதொரு மூலைக்குள் அவர்கள் ஏன் தள்ளப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்காக நான் அனுதாபப்படுகிறேன். ஆனால், அதைப் பற்றி பிறகு விரிவாக ஆராய்வோம். இந்தக் கட்டுரை கற்றுக் குட்டிகளுக்கான 'சுயநிர்ணய உரிமை தொடர்பான அரிச்சுவடி' ஆகும். தத்துவார்த்த ரீதியான ஒரு ஆய்வாக அமையும் இது இலங்கைத் தமிழர்கள் பிரிந்து சென்று தமிழ் ஈழம் என்ற தனியான நாட்டை அமைக்கவேண்டுமென்று யோசனை கூறவில்லை. தமிழர்கள் செய்யக்கூடிய மிகவும் விவேகமான காரியம் எது என்பது முற்றிலும் வேறுபட்டதொரு விடயமாகும்.

### சுயநிர்ணய உரிமை என்றால் என்ன?

இந்தக் கோட்பாடு மிகவும் எளிதானது. ஆனால், இதற்கு மிகவும் அவதானமாக விளங்கப்படுத்த வேண்டிய பல பக்கங்கள் இருக்கின்றன. 'ஒரு தேசிய இனத்துக்கு (Nation)

குமார் டேவிட்

பிரிந்து செல்வதற்கான உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை இருக்கிறது' என்பதே வெளிப்படையான கூற்றாகும். வெளிப்புற சுயநிர்ணய உரிமை, உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற பொருத்தமற்ற எந்தப் பேச்சுக்கும் இங்கு இடமில்லை. எந்தவிதமான நெகிழ்வுத்தன்மைக்கும் கூட இங்கு இடமில்லை. சுயநிர்ணய உரிமை என்பது தெட்டத்தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன் அர்த்தம் என்னவென்றால், ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் (Nation X) ஏனையவர்களிடமிருந்து எந்த வலுக்கட்டாயமும் இல்லாமல், இன்னொரு தேசிய (Nation Y) தேசிய இனத்துடன் அல்லது வேறு தேசிய (Nations Y, Z, etc) இனங்களுடன் ஒரே அரசிற்குள் சேர்ந்து வாழ்வதற்கு விரும்புகிறதா இல்லையா என்பதைத் தாங்களாகவே தீர்மானிப்பதற்கு உரிமையையும் சுதந்திரத்தையும் கொண்டவர்கள் என்பதேயாகும். அதாவது X என்பது ஒரு தேசிய இனமாக இருக்குமானால், இந்தத் தீர்மானத்தை X இற்குள் பங்கும் ஈடுபாடும் கொண்டவர்களே (Stake ho-l-d-e-rs) மேற்கொள்ள முடியுமே தவிர, வேறுயாருமல்ல, வேறு எவரிடமிருந்தும் நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது. இதில் உரிமையில் பிரிந்து போவதற்கான உரிமையும் உள்ளடங்குகிறது என்பது மிகவும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய அம்சமாகும். தனியாகப் பிரிந்து இன்னொரு அரசை உருவாக்குவதற்கான உரிமையே அதுவாகும். இது தெட்டத்தெளிவானதாகும். இப்போது அடுத்த அடி எது?

X என்ற தேசிய இனத்துக்கு பிரிந்து செல்வதற்கான உரிமை இருக்கிறதென்றால், அதற்குப் பிரிந்து போகாமல் இருப்பதற்கான உரிமையும் கூட இருக்கிறது. எனவே X ஐச் சேர்ந்த மக்கள் இரு வழிகளில் ஏதாவது ஒன்றைத் தீர்மானிக்க முடியும். தீர்மானம் எத்தகையதாக இருந்தாலும் அதை ஏனையவர்கள் மதிக்க வேண்டும். X ஐச் சேர்ந்த மக்கள் பிரிந்து செல்ல வேண்டுமா அல்லது பிரிந்து செல்லக் கூடாதா என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதை நானோ, நீங்களோ அல்லது வேறு எவருமோ தவிர்க்க வேண்டும் என்று இது அர்த்தப்படுகிறதா? நிச்சயமாக இல்லை. பிரிந்து செல்லுமாறு அல்லது பிரிந்து செல்ல வேண்டாமென்று X தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் மத்தியில் கடுமையாக ஆலோசனை கூறி நாம் பிரசாரம் செய்யலாம். செய்யவும் வேண்டும், எது சிறந்தது என்று நாம் நினைக்கின்றோம் என்பதிலேயே எமது ஆலோசனை தங்கியிருக்கிறது. ஒவ்வொரு தேசிய இனத்தினதும் நிலைவரத்தைத் தனித்தனியாக எடுத்து ஆராய்ந்தே நாம் எமது ஆலோசனையைக் கூறவேண்டும். ஆனால், எமது ஆலோசனைக்கு ஒரு எல்லை உண்டு. X தேசிய இனம் ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டால்,அதை நாம் மதித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

தங்களது சுயநிர்ணய உரிமையை மக்கள் பிரிந்து செல்வதற்குப் பயன்படுத்துவதா அல்லது பிரிந்து செல்லாமல் இருப்பதற்குப் பயன்படுத்துவதா என்று ஆலோசனை கூறுவதென்பது ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிரச்சினைகளை, சூழ்நிலைகளை ஆராய்ந்து செய்ய வேண்டிய காரியமாகும். அது சூழ்நிலைகளிலேயே தங்கியிருக்கிறது. சரித்திரப் பின்புலம், சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்தே எது சிறந்தது என்ற மதிப்பீட்டுக்கு வரவேண்டும். அதற்குப் பிறகு ஆலோசனையைத் தெரிவிக்க முடியும்.

என்னை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். சமநிலையில் பார்க்கும்போது, காஷ்மீர் மக்கள் தனியான அரசாக இருப்பார்கள் என்றால் அது சிறப்பானது என்று நான் நினைக்கி

> வெளியக, உள்ளக சுயநிர்ணய உரிமை என்று எதுவுமே இருக்க முடியாது. சுயநிர்ணய உரிமை என்றால் அது சுய நிர்ணய உரிமை தான். அத்துடன் அதற்கு முற்றுப்புள்ளியே. தமிழ்த் தேசியக்கூட்டமைப் பினரும் சில தமிழ் புத்திஜீவிகளும் உள்ளக சுயநிர்ணயம் என்று அழைப்பது சமஷ்டியையும் பிரதேச சுயாட்சியையுமே ஆகும். வேறெதுவுமில்லை



றோசா லக்சம்பேர்க்

றேன். அதேவேளை ஸ்கொட்லாந்து மக்கள் பிரிவினைக்கான கோரிக்கையை நிராகரிப்பார்களேயானால், சிறப்பானது. இவ்விருவிவகாரங்களிலும் தத்துவக் கலாநிதிப் பட்டத்துக்காக ஆய்வைச் செய்யலாம். மார்க்சியவாதிகள் இதற்கு இணங்காமற்போகக்கூடும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த விவகாரம் மெய்யறிவுடனும் திறனாய்வு முடிவுடனும் சம்பந்தப்பட்டதாகும். ஒரு தேசிய இனம் இறுதியாக மேற்கொள்ளும் தீர்மானத்தை நாம் மதிக்கவேண்டும் என்பதே இங்கு ஒரேயொரு தத்துவமாகும். இதுவரையில் நான் கூறிய விடயங்களின் கோட்பாடுகள் மிகவும் எளிமையானவை. புரிந்துகொள்வதில் சிரமமில்லை. ஆனால் நடைமுறைப் பக்கத்துக்கு நாம் வரும் போது சில சிக்கலான விடயங்களைக் கையாள வேண்டியிருக்கிறது. நடைமுறைப் பக்கத்துக்கு இப்போது செல்வோம்.

## நடைமுறைச் சிக்கல்கள்

நடைமுறைப்பக்கம் என்று வரும் போது நாம் மூன்று சிக்கலான விவகாரங்களைக் கையாள வேண்டியிருக்கிறது. (1) எந்த மக்கள் சமூகம் தேசிய இனமாகக் கருதப்படக் கூடியதாக இருக்கிறது? எந்த மக்கள் சமூகம் ஒரு தேசிய இனமாகக் கருதப்பட முடியாததாக இருக்கிறது? (2) தீர்மானம் மேற்கொள்வதில் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவேண்டிய பங்கும் ஈடுபாடும் கொண்டவர்களாக யார் இருக்கிறார்கள்? (3) எத்தகைய நடைமுறைவிதிகளைப் பின் பற்றி தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்? இந்த விடயங்களை ஆராயும் போது X,Y என்று அருவமான உதாரணங்களைப் பயன்படுத்துவோமேயானால், நிலைவரத்தை தெளிவாகப் புரிந்து கொள்வது சுலபமானதாக இருக்காது என்பதால், இலங்கையின் சமூகங்களையே உதாரணமாக நான் இங்கு பயன்படுத்த விரும்புகிறேன்.

இந்த விவாதத்தின் நோக்கங்களுக்காக ஒரு சமூகம் தேசிய இனமாக



சுமந்திரன் எம்.பி.

இருக்கிறதா என்பதை எவ்வாறு நாம் தீர்மானிப்பது? சில பிரமாணங்கள் நேரிடையானவை, எந்தவித ஒளிவு மறைவுமற்றவை, தெளிவாகத் தெரிகிற தனித்துவ அடையாளத்தைக் கொண்டவர்களாக (இலங்கைத் தமிழ், முஸ்லிம், மலையக தமிழ் சமூகங்கள் இத்தகைய அடையாளங்களைக் கொண்டவையாகத் தங்களை உணருகின்றன) சமூகமொன்று தன்னை உணரவேண்டும். இரண்டாவதாக, வேறுபாட்டைக் காண்பிக்கின்ற, சரித்திர ரீதியான வேரைக் கொண்ட அடையாளக் குறியீடுகளை (மொழி, பொதுமரபில் இணைந்த குழு, அல்லது மதம்) அவர்கள் கொண்டிருக்க வேண்டும். மூன்றாவதாக, தனியான அரசாக வரக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட தனித்துவமான பிரதேசமொன்றில் அவர்கள் வாழவேண்டும். இந்த மூன்றாவது காரணியே முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் தேசிய இனங்களாகக் கருதப்படுவதற்கான வாய்ப்பை நிராகரிக்கிறது என்பது எனது அபிப்பிராயம். முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் மற்றையவர்களுடன் கலந்து வாழ்கிறார்கள். சொந்த அரசொன்றுக்குள் அவர்களைக் கொண்டுவர முயற்சிப்பதென்பது பெரும் திக்குமுக்காட்டமாகப் போய்விடும். மலையகத் தமிழர்கள் சிங்களவர்களுடன் அருகருகாக வாழ்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையிலும் கூட தனியரசு உருவாக்கம் பற்றி சிந்திப்பது விந்தையான யோசனையாகவே இருக்கமுடியும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் நிலை என்ன? அதிகப்பெரும்பான்மையாக தமிழர்களைக் கொண்ட வட மாகாணம் ஒரு அரசாக வர முடியும். திருகோணமலையில் தமிழர்கள் 30 சதவீதம், முஸ்லிம்கள் 45 சதவீதம், சிங்களவர்கள் 30 சதவீதம். அங்கே அந்தக் கேள்விக்கு இடமில்லை. மட்டக்களப்பு மாவட்டம் 75 சதவீதமாக தமிழர்களைக் கொண்டது. அந்த மாவட்டம் இணைவதற்குத் தீர்மானிக்குமேயானால், அது நிலத்தொடர்ச்சியற்ற இணைவாக இருக்கும். மிகவும் குழப்பகரமாவதாக அமையும். ஒருபடி மேலே சென்று, மக்களின் தெரிவு மாவட்ட ரீதியானதாக அமைவதாக வைத்துக் கொள்வோம். யாழ்ப்பாண மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் பெரும்பான்மையான மக்கள் பிரிந்து போகத் தீர்மானித்து, மன்னார், வவுனியா, மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும்பான்மையானவர்கள் பிரிந்து போகாமல் இருக்கத் தீர்மானித்தால் என்ன நடக்கும்? இந்த அக்கறைகளை நான் ஏன் எழுப்புகின்றேன் என்றால், சாத்தியமான சகல விளைவுகள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும்.

அடுத்த கேள்வி, தெரிவில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படக்கூடிய பங்கும் ஈடும் கொண்டவர்கள் யார் என்பதாகும். இலங்கைத் தமிழர்களை மீண்டும் உதாரணமாக எடுப்பதாயின், எனது அபிப்பிராயத்தின்படி புலம்பெயர் தமிழர்கள் (D-ias-p-o-ra) பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. புதிய நாடுகளிலேயே நிஜவாழ்க்கையைக் கொண்ட இவர்கள் இலங்கையில் பங்கும் ஈடுபாடும் கொண்ட ஒரு தரப்பினராக இல்லை. சுமந்திரனையும் என்னையும் போன்று கொழும்பிலும் தென்னிலங்கையிலும் வாழுகின்ற தமிழர்களின் நிலை என்ன? புலம்பெயர் தமிழர்களுக்குப் பிரயோகித்த தர்க்கத்தை இவர்களுக்கும் பிரயோகிக்க முடியும். வடக்கு, கிழக்கின் எதிர்காலத்

தைப் பொறுத்தவரை நாம் ஆழமான பங்கீடுபாடுடையவர்கள் இல்லை. எம்மையும் வாக்களிக்க அனுமதிக்கக்கூடாது.

தீர்மானங்களை மேற்கொள்வதில் கடைப்பிடிக்க வேண்டிய செயல் முறைமை பற்றிய விடயத்துக்கு வருவோம். இருவழிகளில் மாத்திரமே தனி அரசு ஒன்றை உருவாக்க முடியும்; போர் அல்லது சர்வஜன வாக்கெடுப்பு. நான் இலங்கையைப் பற்றி மாத்திரம் குறிப்பிடவில்லை, பொதுப் படையாகவே பேசுகிறேன். மக்கள் உண்மையில் எதை விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிய போர் ஒரு போதுமே உங்களை அனுமதிக்கப்



போவதில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செல்வாக்கு உச்சநிலையில் இருந்த கட்டத்தில்கூட, அதன் ஈழக்கோரிக்கை இந்தத் தீவில் வாழுகின்ற இலங்கைத் தமிழர்களில் 30 சதவீதத்துக்கும் அதிகமானவர்களின் ஆதரவைப் பெற்றதாக இருக்கவில்லை என்பதே எனது ஊகம். ஆனால், விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் - பேச்சாளர்கள் போன்று செயற்பட்டார்கள். அது நெறிதவறிய ஒரு செயற்பாடாகும் என்பதில் சந்தேகமில்லை. தென் சூடானில் இடம்பெற்றதைப் போன்று நிலைவரங்களின் சூடு தணிந்த பிறகு சர்வதேச மேற்பார்வையுடன் நடத்தப்படக்கூடிய ஒரு சர்வஜனவாக்கெடுப்பே உலகின் எந்தப் பாகத்திலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும்.

## பேரினவாதிகளுக்கு எதிரான லெனின் வாதம்

ரஷ்யப் பேரினவாதத்தை லெனின் முற்றும் முழுவதுமாக நிராகரித்தார். அவர்களை லெனின் ஒடுக்குமுறையாளர்கள் என்றும் சிறுபான்மைத் தேசிய இனங்களை அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அடிமைத்தனத்தில் வைத்திருப்பதில் உறுதிகொண்ட சார் எதேச்சாதிகாரிகளின் நேச அணிகள் என்றும் அழைத்தார். இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகள் ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள இனவாதக் குழுக்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்குள்

**சகலருடைய கண்ணீரும் துடைக்கப்படக்கூடிய, சகலருடைய அவலங்களும் போக்கடிக்கப்படக்கூடிய சோசலிச பொற்காலம் உதயமாகும் வரை சிறுபான்மை இனத்தவர்கள் காத்திருக்க வேண்டும் என குணரட்னம் விரும்புகிறார்**

தாராளமாக இருக்கும் பேரினவாதிகளையும் நிராகரிப்பதில் காட்டுகின்றதைப் போன்ற முனைப்பு வேகத்துடன் லெனின் ரஷ்யப் பேரினவாதிகளை நிராகரித்தார்.

சிறுபான்மை தேசிய இனங்களின் விடுதலைக்கான தலைமைத்துவம் சரித்திரத்தின் அந்தக் கட்டத்தில் சிறுபான்மை இனத்தின் பூர்ஷுவா உயர் குழாமின் (Bourgeoisie elite) கீழேயே இருக்குமென்பதை லெனின் கண்டார். தமிழினத்துக்கு தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற அரசியல் கட்சிகள் தலைமைதாங்குவதுடன் இதை ஒப்பிடலாம். ஒடுக்கப்பட்ட சிறுபான்மை தேசிய இனங்களின் விடுதலை என்பது ஒரு புரட்சிகரப் போராட்டம் என்பதாலும் பூர்ஷுவா ஜனநாயகப்புரட்சியின் முடிக்கப்படாத ஒரு பணியாகவும் இருந்ததால் அந்த இனங்களின் தலைமைத்துவம் பூர்ஷுவா உயர் குழாத்தின் வசம் இருந்தது கண்டு லெனின் குழப்பமடையவில்லை. தேசிய ஒடுக்குமுறையை வெற்றிகொள்வதே சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதான நோக்கமும் பணியுமாக இருப்பதால் அந்த இனங்களின் தலைமைத்துவத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகரக் கட்சியொன்று மேல்நிலையில் இருக்குமென்றோ இருக்க வேண்டுமென்றோ எதிர்பார்ப்பது பொருத்தமற்றதாகும். சார் எதேச்சாதிகாரத்தை தூக்கியெறிவதற்கான புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு சிறுபான்மைத்தேசிய இனங்களின் பூர்ஷுவா தலைமைத்துவங்களுடன் சேர்ந்து ஒரு போராட்ட முன்னணி அமைப்பதை லெனின் வரவேற்றார். லெனினைப் பொறுத்தவரை, தேசிய ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வரும் பணியானது ( சிறுபான்மை இனங்களின் பூர்ஷுவா தலைமைத்துவத்தின் கீழ் என்றாலும் கூட) ஒரு முற்போக்கான பணியேயாகும். புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கம் அத்தகைய ஐக்கிய முன்னணி ஒன்றிற்குள் பிரவேசிப்பதில் எந்தத் தவறையும் லெனின் காணவில்லை.

## ரோசாவுக்கு எதிரான லெனினின் வாதம்

சுயநிர்ணய உரிமை தொடர்பான லெனினின் நிலைப்பாட்டை ஜேர்மன் மார்க்ஸிய வாதியான ரோசா லக்ஸம்பேர்க் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் முதலாளி வர்க்கத்தினர் தங்களின் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மீது செல்வாக்கைப் பிரயோகித்து தங்களது வர்க்க ஆட்சியைப் வலுப்படுத்தக்கூடிய ஒரு பூர்ஷுவாப் பணியாக அவர் இதைக் கருதினார். புரட்சிவாதிகள் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை ஏற்கக்கூடாது என்றும் பதிலாக, ஒரு புரட்சிகர சோசலிச

வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சகல தேசிய இனங்களின் மத்தியிலும் ஐக்கியத்தை ஏற்படுத்த பாடுபட வேண்டுமென்றும் றோசா நம்பினார். தேசியவாத சுலோகங்களைக் கிளப்பிக் கொண்டிருந்த பூர்ஷுவா தலைவர்களுடன் கூட்டணியொன்றை அமைப்பதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. தேசிய ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவதையும் புரட்சிகரக் கட்சியின் வேலைத் திட்டத்திற்குள் சேர்க்க வேண்டுமென்று அவர் நம்பினார்.

றோசாவினால் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடுகள் அறிவுசார் நிலையில் மிகவும் மேம்பட்டவையாக இருந்தபோதிலும், இந்தவகையாக முன்வைக்கப்படும் கருத்துகள் ஜனதா விமுக்தி பெரமுன(ஜே.வி.பி)யின் பிரசாரங்களையும் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினரான முன்னரங்க சோசலிசக்கட்சியின் கோட்பாடுகளையும் ஒத்தவையாக இருக்கின்றன. முன்னரங்க சோசலிசக் கட்சியின் தலைவர் பிரேமகுமார் குணரத்தினம் அண்மையில் பீட்டர் பொயிலுக்கு அளித்த பேட்டியொன்று லிங்க்ஸ் (links) என்ற அவுஸ்திரேலிய இணையத்தளமொன்றில் பிரசுரமாகியது. அதில் அவர் கூறிய கருத்துகளில் இருந்து உதாரணத்தை எடுத்து உங்களுக்கு சில விளக்கங்களைத் தரவிரும்புகின்றேன்.

இரண்டு மேற்கோள்வாசகங்களின் மூலமாக குணரத்தினம் தனது தத்துவார்த்த நோக்கை முன்வைக்கிறார். அவையாவன;

ஜனநாயகத்தினதும் சமத்துவத்தினதும் அடிப்படையிலேயே தீர்வொன்று அமைய வேண்டுமென்று நாம் நம்புகிறோம். ஆனால், தற்போதைய நவதாராளவாத முதலாளித்துவத்தின் கீழ் அது நடைமுறைக்கு வருவது சாத்தியமில்லை. அத்துடன், வேறுபட்ட தேசிய சமூகங்களை ஐக்கியப்படுத்துவதாக தீர்வு அமைய வேண்டுமேயன்றி, பிளவுபடுத்துவதாக அமையக்கூடாது. தேசிய இனங்களின் பிரிவினை என்பது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் பிரிவினை என்றே அர்த்தப்படும். அது ஒரு போதுமே வர்க்கப் போராட்டத்தை பலப்படுத்தப் போவதில்லை. மாறாக மேலும் பலவீனப்படுத்தவே செய்யும். செங்குத்தாக தேசியவாதக் கோடுகள் வரையப்படுவதை நாம் ஒருபோதுமே உற்சாகப்படுத்தக் கூடாது. வர்க்கப்போராட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக வேறுபட்ட தேசிய சமூகங்களைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தவர்களை ஒன்றிணைப்பதை நோக்கி நாம் பாடுபடவேண்டும்.

"சமூக ஜனநாயக வேலைத்திட்டமொன்றுக்குப் பதிலாக சோசலிச வேலைத்திட்டமொன்றையே நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை உட்பட பூர்த்திசெய்யப்படாத பல ஜனநாயகப் புரட்சி இலக்குகள் இருக்கின்றன. அவற்றை சோசலிசப் புரட்சியின் கீழேயே பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. வேறுபட்ட தேசிய சமூகங்கள் மத்தியில் உள்ள தொழிலாள வர்க்கத்தினரையும் விவசாயிகளையும் ஐக்கியப்படுத்துவதற்கு பயனுறுதியுடையதும் நடை முறைச் சாத்தியமானதுமான அரசியல் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று முன்னரங்க சோசலிசக்கட்சி நம்புகிறது.

குணரத்தினத்தின் இந்தக் கூற்றுகள் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குரு கூறியவற்றுடன் எந்தளவுக்கு ஒத்துப் போகின்றன? நிச்சயமாக முற்றிலும் எதிர்மாறானதேயாகும். சகலருடைய கண்ணீரும் துடைக்கப்படக்கூடிய, சகலருடைய அவலங்களும் போக்கடிக்கப்படக்கூடிய சோசலிசப் பொற்காலம் உதயமாகும் வரை சிறுபான்மையினத்தவர்கள் காத்திருக்க வேண்டுமென்று குணரத்தினம் விரும்புகிறார். லெனின் என்ன கூறுகிறார்? முதலாளித்துவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான தொழிலாள வர்க்கப் போராட்டங்களை ரஷ்யப் பேரினவாதத்திலிருந்து விடுதலை பெறுவதில் நாட்டம் கொண்ட தேசிய இனங்களின் போராட்டத்துடன் இணையத்திற்கான உடனடி நிபந்தனையாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறே லெனின் அழைப்பு விடுக்கிறார்.

லெனினைப் பொறுத்தவரை ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்தின் தேசிய விடுதலை இயக்கம் சோசலிசப் புரட்சியின் அத்தியாவசியமான, பிரிக்கமுடியாத அங்கமாகும். ரஷ்யப் பேரினவாதத்துக்கு எதிராக சிறுபான்மைத் தேசிய இனங்கள் முதலாளித்துவ தலைவர்களின் கீழ் அணிதிரளுமென்றும் இந்த இயக்க குணாதிசயத்தில் பூர்ஷுவா ஜனநாயகத் தன்மையைக் கொண்டதாக இருந்தாலும்கூட, வரலாற்று ரீதியில் நோக்கும் போது பாட்டாளி வர்க்க புரட்சியின் ஒரு நேச அணியாக இருக்குமென்று கூறுகின்ற அளவுக்கு லெனின் சென்றார். குணரத்தினம் இதற்கு முற்றிலும் தலைகீழாகச் சென்று, சோசலிச ஜனநாயகவேலைத்திட்டமொன்றிற்குள் தேசிய விடுதலைக்காக ஒரு சிறுபான்மையினம் அணிதிரளுவதாக இருந்தாற்கூட, ஒரு கூட்டணியை ஏற்படுத்தக் கூடாது. அது நிராகரிக்கப்பட வேண்டுமென்று கூறுகிறார்.

ரஷ்யப் பேரினவாதத்தின் இடத்தில் சிங்களப் பேரினவாதத்தை வைத்துப் பாருங்கள். சார் மன்னராட்சி எதேச்சாதிகாரத்தின் இடத்தில் ராஜபக்ஷ ஆட்சியை வைத்துப் பாருங்கள். ரஷ்யாவில் இருந்த சிறுபான்மைத் தேசிய இனங்களின் முதலாளித்துவ தலைவர்களின் இடத்தில் இலங்கைத் தமிழர்களின், முஸ்லிம்களின், மலையகத் தமிழர்களின் பாரம்பரிய தலைமைத்துவங்களை வைத்துப் பாருங்கள். லெனினின் மாதிரியின் நேர் உருவத்தைக் காண்பீர்கள். இதை ஜே.வி.பி.யினரும் முன்னரங்க சோசலிசக் கட்சியினரும் புரிந்துகொள்ளமாட்டார்கள். அவர்கள் பொருளராமல் அரசியல் கோட்பாடுகளை மனப்பாடம் செய்த மார்க்சியவாதிகளாவர். புரட்சியைச் செய்வதற்காகவே லெனின்

(62ஆம் பக்கம் பார்க்க...)

# மாலிக்கின் கருத்துக்கள் கிளப்பியிருக்கும் சர்ச்சைகள்

தன்னை ஒரு சமாதான விரும்பியாக இந்தியத் தலைநகரில் காட்டிக்கொண்ட பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் தனது கருத்துகள் சொந்த நாட்டில் தனக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி விடக்கூடாதென்பதில் மிகுந்த குறியாக இருந்தார்




பதவியின்படி பார்த்தால் இந்தியத் தலைநகரில் ஊடகங்களின் கவனத்தை பெரிதாக ஈர்க்கக்கூடிய ஒரு பெரிய தலைவர் அல்ல அவர். ஆனாலும் பகடாகப் பேசுகிற பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் வழமையாக பெரிய நாடுகளில் அரசாங்கத் தலைவர்கள் அல்லது பாகிஸ்தானின் அதியுயர் மட்டத் தலைவர்கள் பெறுவதைப் போன்ற ஊடக கவனத்தை 3 நாட்களாக டில்லியில் பெற்றிருக்கிறார்.

கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை டில்லியில் வந்து இறங்கியது தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அங்கிருந்து புறப்பட்டது வரை செய்திகளில் அவரே நடுநாயகமாக விளங்கினார். இந்திய மக்களும் பாகிஸ்தானிய மக்களும் பரஸ்பரம் இலகுவாக பயணங்களை மேற்கொள்வதற்கு வசதியாக இருநாடுகளுக்கும் இடையே விசா ஏற்பாடுகள் தளர்வை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகவே இந்தியாவிற்கு வந்தார் மாலி. இந்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டேயுடன் உடன்படிக்கையொன்றிலும் கைச்சாத்திட்டார். பல்வேறு இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக பிரதானமாக, பயங்கரவாதம் சம்பந் தப்பட்டவை குறித்து அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதற்கு புறம்பாக மாலிக் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கையும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும் எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜையும் சந்தித்தார்.

பிரதமர் சிங்குடன் நடத்திய 15 நிமிட பேச்சுவார்த்தையின் போது மாலிக் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி ஆசீவ் அலி சர்தாரி கொடுத்தனுப்பிய அழைப்பைக் கையளித்தார். பாகிஸ்தான் மக்கள் குறிப்பாக பிரதமர் சிங் பிறந்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அவரைப் பார்ப்பதற்கு விரும்புகிறார்கள் என்றும் அவ்வாறு விஜயம் செய்யவில்லையென்றால் பாகிஸ்தான் தலைமைத்துவத்திற்கும் மக்களுக்கும் பெரிய ஏமாற்றமாகிப் போய்விடும் என்றும் கூட மாலிக் கூறியிருக்கிறார். பிரதமர் சிங்கின் சொந்த கிராம மக்கள் ஒரு பெரிய தேசத்தின் பிரதமராகவும் உலகத் தலைவராகவும் உயர்ந்திருப்பது கண்டு பெருமைகொள்கிற அந்த மக்கள் தங்கள் பையனை காண்பதற்கு விரும்புகிறார்கள் என்றும் பாகிஸ்தான் அமைச்சர் குறிப்பிட்டார்.

மும்பையில் 2008 நவம்பர் 26இல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்


டப்பட்டு தற்போது பாகிஸ்தானின் விசாரணைக்குள்ளாக்கியிருக்கும் 7 பேர் தொடர்பான தனது நாட்டின் நிலைப்பாட்டையும் மாலிக் மீள வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அவர்கள் தொடர்பான விசாரணை துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்த மாலிக் சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கு இன்னொரு நீதி ஆணைக்குழுவை அனுமதிக்குமாறு இந்தியாவிடம் கேட்டுக்கொண்டார். இவ்வருட முற்பகுதியில் இந்தியாவிற்கு விஜயம் செய்த முதலாவது



பாகிஸ்தான் நீதி ஆணைக்குழு ஒரு சில முக்கிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு இந்தியா அனுமதித்திருந்தால் விசாரணை இப்போது முடிவிற்கு வந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தன்னை ஒரு சமாதான விரும்பியாகக் காட்டிக்கொள்வதற்கு மாலிக் அக்கறைகொண்டிருக்கிறார் போலத் தோன்றுகின்றது. தலைநகர் டில்லியில் உள்ள மிகவும் பிரபல்யமான பொதுக்கொள்கை சிந்தனாவாதிகள் குழுமத்தின் அலுவலகத்திற்குச் சென்று அங்குள்ளவர்களுடன் மாலிக் கலந்துரையாடியும் இருக்கிறார். பிராந்தியத்தில் அமைதி, சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு ஒத்துழைக்க வேண்டிய அவசியம் குறித்து அங்கு அவர் அழைப்பு விடுத்தார். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் இரு நாடுகளினதும் ஒட்டுமொத்தத்தில் பிராந்தியத்தினதும் மக்களை வறுமையில் இருந்து விடுவித்து அபிவிருத்தியை நோக்கி பயணம் செய்வதற்கு பயனுறுதியுடைய முறையில் கூட்டாக பணியாற்ற வேண்டுமென்றும் கூட அவர் வலியுறுத்தியிருக்கிறார். இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான உறவுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அரசியலைப் புகுத்தக் கூடாது என்ற அழைப்பும் விடுத்தார்.

“சமாதானத்தைத் தவிர நமக்கு வேறு தெரிவில்லை. பரஸ்பரம் குற்றம் சாட்டும் விளையாட்டை முடிவிற்கு கொண்டுவந்து சமாதானம், நட்புறவு மற்றும் பிரேமைக்கான சுலோகங்களை நாம் எழுப்ப வேண்டும். இந்தியாவில் நான் தலைவர்களுடனும், மக்களுடனும், ஊடகத் துறையினருடனும் நடத்திய சந்திப்புகளின் போது நல்ல பிரதிபலிப்பு கிடைத்தது. இருதரப்புகளுமே சமாதானத்தை விரும்புகின்றன என்பதற்கான உறுதியான எண்ணம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நாம் ஒரு பயணத்திட்டத்தை அதற்கென வகுக்கவேண்டியிருக்கிறது” என்று மாலி கூறினார்.




இரு நாடுகளினதும் அரசாங்கங்களும் மக்களும் சமாதானத்துடனும் இணக்கத்துடனும் வாழ்வதற்கு விரும்புகிறார்கள். அவர்களது விருப்பத்தை நிறைவேற்ற இருநாடுகளுமே குழப்பங்களை விளைவிக்கிற சக்திகளை அடையாளங் கண்டு அவற்றுக்கு முகம் கொடுத்து தோற்கடிக்க வேண்டும். சமாதானத்தினதும் பொருளாதார அபிவிருத்தியினதும் சுபீட்சத்தினதும் பொது எதிரிகளான பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் மற்றும் கிரிமினல்களுக்கு நாம் ஒரு கடுமையான செய்தியொன்றை விடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களை நாம் ஒழித்துக் கட்ட வேண்டும். இரு தரப்பு அமைதிக்கு குறுக்கே நிற்கின்ற மூன்றாவது சக்திகளை அடையாளங் கண்டு நாம் இல்லாதொழிக்க வேண்டியிருக்கிறது என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் இந்தியத் தலைநகரில் பிரகடனம் செய்தார்.

அதேவேளை, மாலிக் பாபர் மசூதி தகர்க்கப்பட்ட சம்பவத்துடன் மும்பை பயங்கரவாதத் தாக்குதலை ஒப்பிட்டது உட்பட பல சர்ச்சைக்குரிய கருத்துகளையும் தனது இந்த விஜயத்தின் போது தெரிவித்திருந்தார். கார்கில் பிராந்தியத்திற்குள் பாகிஸ்தானின் ஊடுருவலின் போது இந்தியப் படைவீரர் ஒருவரின் உடலுறுப்புகள் உருச்சிதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு மாலிக் அளித்த பதிலும் ஊடகங்களில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. காப்டன் காளியா என்ற அந்த இந்தியப் படைவீரர் கொல்லப்பட்டது பாகிஸ்தானியரின் துப்பாக்கிச் சூட்டில்தானா பலியானாரா அல்லது கால நிலைக் கோளாறுகளினால் தான் பலியானாரா

எம்.பி.வித்தியாதரன்



என்பது தனக்குத் தெரியாது என்று மாலிக் பதிலளித்தார். காளியா பாகிஸ்தானியரின் படையினரினால் பிடிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு அவரின் உடலுறுப்புகள் உருச்சிதைக்கப்பட்டதாக இந்திய இராணுவம் குற்றம் சாட்டுகிறது. காளியாவில் சடலம் பின்னர் இந்தியாவிற்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. "பாகிஸ்தான் இராணுவம் அந்த இந்திய வீரரை சித்திரவதை செய்திருந்தால் சடலத்தை ஏன் மீண்டும் இந்தியத் தரப்பிடம் கையளித்தார்கள்? என்னிடம் முதல் தடவையாக நேற்றைய சந்திப்புகளின் போது இந்த விவகாரத்தை கவனிக்குமாறு கேட்கப்பட்டது. நான் நாடு திரும்பியதும் இந்த விவகாரம் பற்றி ஆராய்ந்து விரிவான தகவல்களை தெரிவிப்பேன்" என்று மாலிக் கூறினார்.

இந்தியா தன்னுடன் இந்த விவகாரம் பற்றி முன்னர் ஒருபோதும் பேசவில்லையென்றும் இருதரப்பு விவகாரம் தொடர்பில் தனது அரசாங்கத்தின் எந்தவொரு பிரிவினருடனும் இந்தியத் தரப்பினர் நடத்தியிருக்கக்கூடிய எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் இதுபற்றிய பிரச்சினைகள் கிளப்பவில்லை என்றும் மாலிக் கூறினார்.

15 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தைப் பற்றிய சர்ச்சையை என்முன் கிளப்பி, பாகிஸ்தான் இராணுவத்தின் சார்பில் மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று நீங்கள் என்னை எதிர்பார்ப்பதானால், உங்களுடைய உள்துறை அமைச்சர் எனது இடத்திலிருந்தால் அவர் என்ன கூறியிருப்பார் என்ற கேள்வியை மாலிக் எழுப்பினார். விடயம் தெரிந்திராத ஆட்களுக்கு இது நல்ல ஒரு பதிலே. ஆனால் இந்த விவகாரம் அந்தளவு சாதாரணமானது அல்ல. சிறைப்பிடிக்கப்பட்ட படைவீரர்களை சித்திரவதை செய்து அவர்களது உடலுறுப்புகளை வெட்டியெடுப்பது மனிதாபிமானமற்றதும் போர் நெறிமுறைகளுக்கு எதிரானதும் மாத்திரமல்ல ஜெனீவா சாசனத்தை மீறுவதுமாகும். இப்போது



அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது கமல்நாத்தை பாராளுமன்ற விவகார அமைச்சராக்கியதன் மூலம் எதிரணியினரை சாமர்த்தியமாக கையாண்டு அரசாங்கத்திற்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறார் பிரதமர் மன்மோகன் சிங்

இந்த விவகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்தை அடைந்திருக்கிறது. போரில் பலியான அந்தப் படைவீரரின் தந்தையார் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். இந்த விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இந்திய அரசாங்கத்திற்கு பணிப்பு விடுக்குமாறு உச்ச நீதிமன்றத்தை அந்த தந்தை கேட்டிருக்கிறார்.

## பாராளுமன்றத்தில் அரசுக்கு பெரிய வெற்றி

பாராளுமன்றத்தின் தற்போதைய மழைகாலக் கூட்டத்தொடர் ஆரம்பமானபோது சில்லறை வர்த்தகத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன. அப்போது தடுமாற்ற நிலையில் இருக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்திற்கு இது இறுதிக் கூட்டத்தொடராக மாறிவிடுமோ என்ற சந்தேகங்கள் கிளம்பின. பலநிறுவனங்களின் தயாரிப்புப் பொருட்களின் சில்லறை வர்த்தகத்தில் 51சதவீத வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதிக்கும் தீர்மானத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தில் சில நேசக்கட்சிகள் கூட எதிராக இருந்ததே இதற்குக் காரணமாகும். திராவிட முன்னேற்றக் கழகம், திரிநாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதிக்கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவையெல்லாம் இந்த தீர்மானத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன. முன்னாள் பங்காளிக்கட்சியான திரிநாமுல் காங்கிரஸ் அரசாங்கத்தை பழிவாங்க முயற்சித்துக்கொண்டிருந்தது. அரசாங்கத்திற்கு குறைந்த பட்சம் அவமதிப்பையாவது ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் எதிர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர அந்தக் கட்சி தீர்மானித்தது. ராஜ்ய சபாவில் என்றாலும் அரசாங்கத்தை எதிர்க்கட்சிகளினால் தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும் என்று திரி



நாமுல் காங்கிரஸ் நினைத்தது.

ஆனால், கதை திரிநாமுல் காங்கிரஸின் திசைக்கு எதிரான திசையில் செல்வதை உறுதி செய்யக்கூடிய தந்திரோபாயத்தை அரசாங்கமும் காங்கிரஸ் தலைவர்களும் வெகு சாமர்த்தியமாக வகுத்துக்கொண்டார்கள். காங்கிரஸ் தலைமைத்துவத்தினாலும் மன்மோகன்சிங் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட, துணிச்சலான தீர்மானங்கள் இதற்கு உதவியாக அமைந்தன. இது தவிர பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அமைச்சரவை மாற்றம் போன்ற முக்கிய நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஏற்கனவே எடுத்திருந்தது. விட்டுக்கொடுத்துச் செயற்படாத குணாதிசயத்தைக் கொண்ட பி.கே. பன்சாலுக்குப் பதிலாக பாராளுமன்ற விவகார அமைச்சராக செயற்துடிப்பும் சுமுகமாக பழகுகின்ற சுபாவமும் கொண்ட கமல் நாத்தை பிரதமர் மன்மோகன் சிங் அண்மைய அமைச்சரவை மாற்றத்தின் போது நியமித்தார். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டியிருக்கும் முக்கியமான பல்வேறு சட்டமூலங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் தொடர்பு கொண்டு சுமுகமாக பேச்சுவார்த்தைகளை கமல்நாத்தினால் நடத்தக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் பிரதமர் அவரை அந்தப் பதவிக்கு நியமித்தார். அது நன்றாகவே பயனளித்திருப்பதாகத் தெரிகிறது. லோக்சபாவில் மாத்திரமல்ல, ஆளும் கூட்டணிக்கு பெரும்பான்மைப் பலம் இல்லாத ராஜ்ய சபாவிலும் கூட வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தீர்மானம் தொடர்பான வாக்களிப்பில் அரசாங்கம் வெற்றி பெறுவதை காங்கிரஸ் தலைமைத்துவமும் கமல்நாத்தும் உறுதிசெய்யக்கூடியதாக இருந்தது.

லோக்சபாவில் இருநாட்கள் நடைபெற்ற விவாதத்தின் போது ஒரு சமாஜ்வாதக் கட்சியும் பகுஜன் சமாஜ்கட்சியும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு தீர்மானத்திற்கு தாங்கள் எதிர் என்று தெளிவுபடுத்திவிட்டு சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தன. அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து பாரதீய ஜனதாவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு சார்பாக 218 எம்.பி.க்களும் எதிராக 253 எம்.பி.க்களும் வாக்களித்தனர்.

ராஜ்ய சபாவில் அரசாங்கம் எதிரணிக்கட்சிகளுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த சபையில் அரசாங்கத்திற்கு பெரும்பான்மைப் பலம் இல்லாதபோதும் கூட சாமர்த்தியமான காய்நகர்த்தல்களினாலும் கடுமையான பேரப்பேச்சுகளினாலும் வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. அரசாங்கத்திற்கு சார்பாக 123 வாக்குகளும் ஒட்டுமொத்த எதிரணிக்குச் சார்பாக 102 வாக்குகளும் கிடைத்தன. ராஜ்ய சபாவின் அரசாங்கத்திற்கு ஒன்றில் சமாஜ்வாதிக் கட்சியின் வாக்குகள் அல்லது பகுஜன் சமாஜ் கட்சியின் வாக்குகளும் தேவைப்பட்டன. அரசாங்க சேவைகளில் பின்தங்கிய சமூகத்தவர்களுக்கு பதவியுயர்வை வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றுவதாக அரசாங்கம் அளித்த உறுதி மொழிக்கு பிரதிபலனாக வாக்கெடுப்பில் அரசாங்கத்தை ஆதரிக்க பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவி மாயாவதி இணக்கம் தெரிவித்தார். சமாஜ்வாதிக்கட்சி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற சில கட்சிகள் ராஜ்ய சபாவிலும் கூட சில்லறை வியாபாரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதிக்கும் கொள்கையை எதிர்ப்பதாக உரைகளை நிகழ்த்திவிட்டு எதிராக வாக்களிப்பதை தவிர்த்துக் கொண்டனர்.

ராஜ்யசபாவில் அரசாங்கத்திற்கு 21 மேலதிக வாக்குகள் கிடைத்தன. மாயாவதியின் கட்சியைச் சேர்ந்த 15 எம்.பி.க்களின் வாக்குகள் இல்லாவிட்டாலும் கூட ஆளும் கூட்டணி வாக்கெடுப்பில் வெற்றிபெற்றிருக்க முடியும் என்பதை இது வெளிக்காட்டியது. தெலுங்கு தேசம் கட்சியின் 3 எம்.பி.க்களின் உதவியும் கூட அரசாங்கத்திற்கு கிடைத்தது. தாங்கள் அரசாங்கத்தை கடுமையாக எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டாலும் அவர்கள் வாக்கெடுப்பு நேரத்தின் போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

எம்.பி.க்கள் நிகழ்த்திய உரைகளை அடிப்படையாக எடுத்து நோக்கினால் சில்லறை வர்த்தகத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதிக்கும் அரசின் தீர்மானத்திற்கு எதிராக அதிக பெரும்பான்மையான எம்.பி.க்கள் வாக்களிப்பார்கள் என்றே தோன்றியது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் எம்.வெங்கையா நாயுடு கருத்து வெளியிட்டார். லோக்சபா வாக்கெடுப்போ அல்லது ராஜ்யசபா வாக்கெடுப்போ இதுவிடயத்தில் அரசாங்கத்தை கட்டுப்படுத்தாது என்றபோதிலும் தோல்வி கிடைத்திருக்குமேயானால் வெளிநாட்டு நேரடி முதலீடு தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மன்மோகன் சிங் அரசாங்கத்திற்கு நெருக்குதல் அதிகரித்திருக்கும்.

இன்னமும் கூட அரசாங்கம் இன்னொரு தடையைத் தாண்ட வேண்டியிருக்கிறது. அந்நிய செலாவணி முகாமைத்துவ சட்டத்திற்கு ராஜ்ய சபாவின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருக்கிறது. அடுத்த வருடம் வரவு - செலவுத்திட்டக் கூட்டத் தொடரில் மாத்திரமே இது இடம் பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது.



ஜெசிந்தா சல்தானா

# பரபரப்பை நா
# பறித்து எடுத்







மெல் கிரெய்க்





மிச்சேல் கிறிஸ்டியன்

அபர்ணா



# ாடும் ஊடக கலாசாரம்
# த அப்பாவியின் உயிர்



இறுதிச் சடங்கின் போது கதறியழும் பிள்ளைகளுடன் ஜெசிந்தாவின் கணவர்




பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமின் மனைவி கேம்பிரிட்ஜ் கோமாட்டி என்று அழைக்கப்படுகின்ற கேட் மிடில்டன் கடந்த மூன்றாம் திகதி லண்டனின் ஏழாவது எட்வேட் மன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் கர்ப்பமுற்றிருப்பதால் வழமையாக அவ்வாறு கர்ப்பமுற்றிருக்கக்கூடிய எந்தவொரு பெண்ணுக்கும் ஏற்படுகின்ற தலைச்சுற்றல், வாந்தி போன்ற நோய்களே அவருக்கும் வந்தது.

மூன்று நாட்கள் கழித்து ஆறாம் திகதி கேட் மிடில்டன் அந்த மருத்துவமனையில் இருந்து வெளியேறிவிட்டார். அவர் இப்போது பூரண சுகமடைந்து பொது வைபவங்களிலும் கூட பங்கேற்க ஆரம்பித்திருக்கிறார். தாயாகப்போகும் பூரிப்புடன் அவர் வலம் வருகிறார்.

ஆனால், அவருக்கு அந்தப் பூரிப்பை ஏற்படுத்திய கர்ப்பம் ஒரு இந்தியக் குடும்பத்துக்கு பெரும் சோகத்தைத் தந்திருக்கும் துரதிர்ஷ்டவசமான நிகழ்வொன்றுக்கு காரணமாக அமைந்துவிட்டது. ஆனால், அதற்கு கேட்மிடில்டன் எந்த வகையிலும் காரணமாக இருந்திருக்கிறார் என்று கூறிவிடமுடியாது.

உலகப் பிரபலங்கள் படுக்கைக்குப் போவதையும் மலசல கூடத்துக்குப்

போவதையும் தவிர, அவர்களின் வாழ்க்கைமுறைகளைப் பற்றி துருவித்துருவி ஏன் ஒட்டுப்பார்த்தேனும் ஆராய்ந்து வெற்று ஆரவாரமும் பரபரப்பும் கொண்ட தகவல்களை வெளியிடுவதில் வெறிபிடித்தவை போன்று செயற்படுகின்ற இன்றைய ஊடகங்களே இந்த அவலத்துக்குக் காரணமாயிருந்திருக்கின்றன.

கேட் மிடில்டன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும்தான் தாமதம் உலகெங்குமுள்ள ஊடகங்களின் கவனம் அவரது கர்ப்பத்தின் மீது குவியத்தொடங்கியது. அவுஸ்திரேலியாவின் 2DAY FM வானொலிச் சேவையில் குறும்புத்தனமாக தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு நேயர்களை ஏமாற்றுகிற ஒரு நிகழ்ச்சியை நடத்துகிற அறிவிப்பாளர்களை மெல் கிரெய்க்கும் மிச்சேல் கிறிஸ்டியனும் கடந்த நான்காம் திகதி காலை 5.30 மணிக்கு ஏழாவது எட்வேர்ட் மன்னர் மருத்துவமனையுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

கேட் மிடில்டனின் உடல் நிலை பற்றிய தகவல்களை எப்படியாவது அறிந்து தங்கள் வானொலி மூலம் உலகிற்கு அறிவித்து பெயரெடுக்க வேண்டுமென்பதே அந்த இரு அறிவிப்பாளர்களினதும் நோக்கம். எலிசபெத் மகாராணியாரும் இளவரசர் வில்லியம்ஸின் தந்தையாரான முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸும் கேட் மிடில்டனின் உடல் நிலைபற்றி அறிவதற்காக அந்த மருத்துவமனையுடன் தொடர்பு கொள்வது போன்று பாசாங்கு செய்யும் தந்திரத்தை அவர்கள் கையாண்டார்கள்.

அதிகாலையில் நோயாளிகளைக் கவனித்துக்கொண்டிருந்த இந்தியத் தாதியான ஜெசிந்தா சல்தானா பணியாளர் எவரும் இல்லாதிருந்த வரவேற்பறையில் மணி ஒலித்த தொலைபேசியை எடுத்தார். இளவரசர் சார்ள்ஸும் எலிசபெத் மகாராணியாரும் பேசுவதுபோன்று அறிவிப்பாளர்கள் பேசினார்கள். மறுமுனையில் இருப்பவர்கள் உண்மையில் யார் என்பதை எல்லாம் சந்தேகத்தோடு ஜெசிந்தா நோக்கியிருக்க வேண்டுமென்று யாருமே எதிர்பார்க்க முடியாது. அவர் உடனடியாகவே அந்த தொலைபேசி அழைப்பை இளவரசி தங்கியிருந்த அறைக்கு மாற்றினார்.

அந்த அறையில் இருந்த தாதி இளவரசியின் உடல் நிலை பற்றி மகாராணியும் இளவரசரும் குறும்பு செய்த வானொலி அறிவிப்பாளர்களிடம் கூறிவிட்டார். தங்களுக்கு கிடைத்த தகவல்கள் உலகில் வேறு எந்த ஊடகத்திற்குமே கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்ற பெருமிதத்தில் 2DAY FM வானொலி அவற்றை ஒலிபரப்பியது. குறும்புத் தொலைபேசி அழைப்பு வந்து ஒரு மணித்தியாலம் கூட கடந்து விடுவதற்கு முன்னதாக அதே அறிவிப்பாளர்கள் மருத்துவமனையுடன் மீண்டும் தொடர்புகொண்டு தாங்கள் ஏமாற்று வேலையைச் செய்ததை ஜெசிந்தாவிற்கு கூறி (தாங்கள் பெற்றுக் கொண்ட தகவல்களை) ஒலிபரப்புச் செய்யப்போவதாகவும் கூட தெரிவித்திருக்கிறார்கள்.

ஊடகங்களுடன் ஏற்கனவே தொடர்புகொண்ட அனுபவத்தைக் கொண்டிராத ஜெசிந்தா குழப்பமடைந்திருக்கிறார் என்பதில் சந்தேகம் இல்லை. அடுத்து இடம்பெற்ற நிகழ்வுகள் உண்மை நிலைவரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

46 வயதான ஜெசிந்தாவை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக (குற்றுயிராக இருந்ததாகக் கூட சில செய்திகள் வெளியாகியிருந்தன) அந்த மருத்துவமனையின் தாதியர் தங்குகின்ற விடுதியின் அறையில் டிசம்பர் 7 ஆம் திகதி மீட்டார்கள்.

ஜெசிந்தா தனது குடும்பத்தினருடன் தினமும் மாலையில் தொலைபேசியில் தொடர்பு கொள்வார். ஆனால் குடும்ப தொலைபேசி அழைப்பு வந்ததிற்குப் பிறகு அவர் கணவருடன் தொடர்பு கொள்ளவில்லை. அதனால் கணவர் பதற்றமடைந்து வெள்ளிக்கிழமை காலை ஜெசிந்தாவின் சக ஊழியர் ஒருவருடன் தொடர்பு கொண்டு தனது மனைவி பற்றி விசாரித்திருக்கிறார். ஆனால் ஜெசிந்தா பற்றிய தகவலை அந்த சகாவினால் கொடுக்கமுடியாமல் போய்விட்டது. இன்னொரு சகா அதே தினம் விடுதிக்குச் சென்று பார்த்த போது ஜெசிந்தாவின் சடலத்தைக் கண்டார்.

ஜெசிந்தா கடந்த 4 வருடங்களாக ஏழாவது எட்வேர்ட் மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார். கணவர் பிரிட்டனின் பெனடிக்ற் பார்போசா வயது 49. பிரிட்டனின் தேசிய சுகாதார சேவையில் ஒரு கணக்காளராக இருக்கிறார். தென்னிந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் மங்களூர்தான் ஜெசிந்தாவின் சொந்த ஊர். இரு பிள்ளைகள். மகன் ஜுனாலுக்கு வயது 17. மகள் லிஷாவிற்கு 14. லண்டன் சவுத் பிறிஸ்டல் பகுதியில் வசித்து வருகிறார்கள்.

ஜெசிந்தா ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது குறித்து ஏகப்பட்ட ஊகங்கள் வெளியாகிக் கொண்டு வந்தன. அவருக்கும் கணவருக்கும் இடையே பிரச்சினை இருப்பதாகக் கூட சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. அவுஸ்திரேலிய வானொலி அறிவிப்பாளர்களின் குறும்புத் தொலைபேசி அழைப்பினால் தான் ஏமாந்து விட்டதால் மனச்சஞ்சலத்திற்குள்ளானதாலேயே ஜெசிந்தா தற்கொலை செய்து கொள்ளும் முடிவிற்கு வந்திருக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் இருந்தே சந்தேகிக்கப்பட்டது. அத்தகைய குறும்புத் தொலைபேசி அழைப்பை கேட் மிடில்டனின் அறைக்கு மாற்றியதற்காக மருத்துவமனையின் உயரதிகாரிகள் எவருமே ஜெசிந்தாவை கடிந்துகொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

ஜெசிந்தா தற்கொலை செய்வதற்கு முன்னதாக 3 குறிப்புகளை எழுதியிருக்கிறார். ஒரு குறிப்பில் தனது மரணத்திற்கு அவுஸ்திரேலிய வானொலியில் இருந்து குறும்புத் தொலைபேசி அழைப்பைக் கொடுத்த அறிவிப்பாளர்களே பொறுப்பு என்று எழுதியிருக்கிறார். இன்னொரு குறிப்பில் மருத்துவமனை ஊழியர்

கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டிய விதம் குறித்து குறைகூறியிருக்கிறார். இருவரைப் பற்றி பிரத்தியேகமாக குறிப்பிட்டிருக்கிறார் என்று குடும்ப வட்டாரங்களை மேற்கோள் காட்டி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. மூன்றாவது குறிப்பில் ஜெசிந்தா தனது உடலை சொந்தக் கிராமமான தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் மங்களூருக்கு அண்மையாக உள்ள ஷிர்வா என்ற கிராமத்திலேயே அடக்கம் செய்யுமாறு கேட்டிருந்தார்.

குறும்புத்தொலைபேசி விவகாரம் தொடர்பில் ஜெசிந்தாவை மருத்துவமனை எந்தவிதத்திலும் கடிந்து கொள்ளவில்லை என்று நிருவாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதை அவரினால் விட்டுச் செல்லப்பட்ட ஒரு குறிப்பு உணர்த்துகிறது. தொலைபேசி அழைப்பு விவகாரம் குறித்து ஜெசிந்தாவின் சக ஊழியர்கள் அவளுடன் கடுமையாக நடந்துகொண்டார்கள் என்பதையும் அவரின் குறிப்பு உணர்த்துகிறது. அத்துடன் ஜெசிந்தாவுடன் சில வாரங்களுக்கு முன்னர் தவறான முறையில் நடந்துகொண்ட சக ஊழியர்களுக்கு எதிராக மருத்துவமனை நிருவாகம் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்காமல் வெறுமனே இருவரினதும் கடமை நேரங்களை மாற்றியமைத்ததும் ஜெசிந்தாவின் மனதை புண்படுத்தியிருக்கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

எதற்காக அவர் மூன்று குறிப்புகளை இட்டுச் சென்றார். அவர் குறும்புத் தொலைபேசி அழைப்பு வந்த நேரத்திற்கும் சடலமாக மீட்கப்பட்ட தருணத்திற்கும் இடையிலான 72 மணித்தியாலங்களுக்குள் 3 தடவைகள் தற்கொலை செய்ய முயற்சி செய்திருக்கக்கூடும் என்று ஒரு சந்தேகக் காரணம் கற்பிக்கப்படுகின்றது. முதலில் ஜெசிந்தா தனது கை மணிக்கட்டை கூரிய ஆயுதமொன்றினால் வெட்டி தற்கொலைக்கு முயற்சித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்



ஏழாவது எட்வேர்ட் மன்னர் மருத்துவமனையிலிருந்து வெளியேறும் இளவரசர் வில்லியம்ஸும் மனைவியும்

படுகின்றது. ஏனென்றால் அவரது ஒரு மணிக்கட்டில் வெட்டுக்காயம் காணப்படுகின்றது.

இப்போது அவரின் விருப்பப்படி சடலம் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு ஷிர்வா கிராமத்தில் கடந்த 17 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. பெருந்திரளான மக்கள் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு தங்களது இறுதி அஞ்சலியை ஜெசிந்தாவிற்கு செலுத்தினார்கள்.

ஜெசிந்தாவின் குடும்பத்திலேயே அவர் தான் மிகவும் கலகலப்பானவராம். எல்லோரையுமே எப்போதும் சிரிக்க வைத்துக்கொண்டேயிருப்பாராம். அத்துடன் சகோதரர்களின் நல்வாழ்வில் எப்போதும் அதீத அக்கறை காட்டுவார். கணவரை இழந்த சகோதரி ஒருவரின் பிள்ளையை ஜெசிந்தா கவனித்து வந்தார். மனைவியை இழந்த கணவர் தாயாரை இழந்த இரு பிள்ளைகளும் அதிர்ச்சியில் இருந்து மீளமுடியாதவர்களாக இருக்கிறார்கள். ஜெசிந்தாவின் இடத்தை வேறு எவராலுமே என்றென்றைக்குமே நிரப்ப முடியாதென்று அவர்கள் தேம்பித் தேம்பி அழுகிறார்கள். நத்தார்ப் பண்டிகை அவர்களுக்கு இத்தடவை சோகமயமானதாகிவிட்டது. அந்த நாட்களில் அவர்கள் இந்தியாவில் இருக்கவே தீர்மானித்திருக்கிறார்கள்.

குறும்புத்தொலைபேசி அழைப்பைக் கொடுத்த இரு அவுஸ்திரேலியா அறிவிப்பாளர்களும் ஜெசிந்தாவின் தற்கொலைச் செய்தியை அறிந்த நேரத்திலிருந்து மிகுந்த மனவேதனைக்குட்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தொலைக்காட்சியில் தோன்றி இப்படியெல்லாம் நடக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை என்று கண்ணீர் விட்டு அழுததை காணக்கூடியதாக இருந்தது. தொலைபேசியை எடுத்தவர் தங்களை திட்டித் தீர்த்துவிட்டு வைத்துவிடுவார் என்றே தாங்கள் நினைத்ததாகவும் ஆனால் எதிர்பாராத விதமாக தாங்கள் கேட்ட தகவல்களை எல்லாம் அறியக்கூடியதாக இருந்தன. அதன் விளைவுகள் இப்படிப்போகும் என்று கிஞ்சித்தும் நினைக்கவில்லை என்று அவர்கள் புலம்பினார்கள். அழுவதால் ஆவதென்ன? குறும்பு பறித்த அந்த தாதி உயிரை மீட்டுக்கொண்டு வரவா முடியும்? அந்த வானொலி நிலையம் ஜெசிந்தாவின் குடும்பத்திற்கு 5 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்களை வழங்குவதாக உறுதியளித்திருந்தது.

கேட் மிடில்டனும் இளவரசர் வில்லியம்ஸும் அரச குடும்பமும் ஜெசிந்



தாவின் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதலைக் கூறி அவர்களின் அன்புக்குரியவருக்கு நேர்ந்த கதி குறித்து பெரிதும் வருந்துவதாக தெரிவித்திருந்தார்கள். ஜெசிந்தாவின் மரணத்திற்கு தான் காரணமாக இருந்துவிட்டதாக கேட் மிடில்டன் கவலைப்பட்டுக்கொண்டதாகவும் ஆனால் கணவர் வில்லியம்ஸ் அவ்வாறு ஒன்றுமில்லை என்று அவரை தேற்றியதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. குறும்புத் தொலைபேசி அழைப்பு சம்பவம் தொடர்பில் எந்தக் கட்டத்திலுமே மருத்துவமனை நிருவாகத்திற்கு தாங்கள் முறைப்பாடு செய்யவில்லை என்று இளவரசர் தம்பதியினர் தெரிவித்திருந்தார்கள்.

2DAY FM வானொலி நிலையத்தின் தாய் நிறுவனமான சதேர்ண் குறோஸ் ஒஸ்றீரியா, மெல்கி ரெய்க்கும் மிஷேல் கிறிஸ்டியனும் நடத்திவந்த ஹொட் 30 என்ற நிகழ்ச்சியை நிறுத்தியிருப்பதுடன், இந்த நிறுவனத்தின் எந்தவொரு பிரிவில் இருந்தும் குறும்புத் தொலைபேசி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு இப்போதைக்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

நோயாளிகளின் உடல் நலனையும் மன உணர்வுகளையும் புரிந்துகொண்டு அவர்களுடன் தங்களை இணைத்துக்கொண்டு கவனிப்பவர்கள் தான் தாதியர். அப்படியொரு குணாதிசயம் இல்லாதவர்களால் இப்பணியை செய்யவே முடியாது. அப்படிப்பட்ட ஒரு பணியில் தன்னை இணைத்துக்கொண்ட ஜெசிந்தாவிற்கு மனித உணர்வுகளுடனான இந்த விளையாட்டு கசப்பான அனுபவத்தை கொடுத்ததன் காரணத்தினால் அவர் இந்த சமுதாயத்தில் வாழ்வதற்கு விரும்பாமல் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். தனது இத்தனை காலப்பணியை, விடயங்களை புரிந்துகொள்ளும் திறனை, தீர்மானங்களை மேற்கொள்ளும் திறனை கேள்விக்குள்ளாக்கிய சம்பவத்தை அவரால் ஏற்க முடியாமல் போய்விட்டது என்பது ஒரு புறம், ஆனால் மறுபுறத்தில் மருத்துவமனையின் ஊழியர்கள் நடத்தை இந்த விவகாரம் தொடர்பில் நடந்து கொண்டிருக்கக்கூடிய முறை அவரை (ஜெசிந்தாவை) நிலைகுலையச் செய்துவிட்டது. தனது கணவரையோ பிள்ளைகளையோ விட்டுச் செல்வதைப்பற்றிக்கூட இந்தப் பெண் கவலைப்படவில்லையே...!

ஊடகங்கள் மட்டரகமானதும் வெறுமனே பரபரப்பு உணர்ச்சிகளுக்கு வாசகர்களையும் நேயர்களையும் உள்ளாக்கும் தன்மையானதுமான நிகழ்ச்சிகளில் அதீத கவனம் செலுத்தி பணம் குவிப்பதற்கு கையாளுகின்ற அணுகுமுறைகள் சமுதாயத்தில் கொண்டுவரக்கூடிய அவலங்களுக்கு ஜெசிந்தாவின் மரணம் பிந்திய உதாரணமாகும். இத்தகைய நிகழ்ச்சிகளை மக்கள் மத்தியில் பிரபலமாக்கி காசு சம்பாதிக்கும் ஊடக கலாசாரம் நிச்சயமாக முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அல்லாவிட்டால் ஆயிரமாயிரம் ஜெசிந்தாக்களை உலகம் இழக்கவேண்டி வரும். சம்பவத்திற்குப் பின்னர் சகலருமே புத்திசாலிகள் போன்று பேசுவது சுலபம். ஜெசிந்தாவின் மரணத்தை அடுத்து ஊடக கலாசாரத்தில் செய்யப்பட வேண்டிய மாறுதல்களைப் பற்றி பேசிவிட்டு நாளடைவில் ஆரோக்கியமற்ற வழமை நிலையை தொடருவதையா ஊடக நிறுவனங்களும் அவற்றை கட்டுப்படுத்தும் அமைப்புகளும் அனுமதிக்கப்போகின்றன?




# ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவார் ஆனால் வரமாட்டார்...!



முத்தையா காசிநாதன்



அரசியலுக்கு வருகிறேன் என்று பொய் சொல்ல விரும்பவில்லை. காலமும் சூழ்நிலைகளும் தான் அதை முடிவு செய்யும். எதுவும் திட்டமிடப்பட்டு நடப்பதில்லை. நான் கோபாலபுரத்திற்கும் போயஸ் தோட்டத்திற்கும் வேண்டியவன்

தமிழக அரசியல் களத்தில் ''இப்போது வருவார்'' ''எப்போது வருவார்'' என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படும் ''சூப்பர் ஸ்டார்'' ரஜினி காந்தின் 63ஆவது பிறந்த நாள் (12.12.12) சென்னையில் தடபுடலாகக் கொண்டாடப்பட்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதியும் வாழ்த்தினார். தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் வாழ்த்தினார். கடுமையான உடல்நலக்குறைவு ஏற்பட்டு, தப்பி வந்து இப்போது அவரது ரசிகர்களின் மனதைக் குளிர்வித்த காட்சிகள் தமிழகத்தில் கலகலப்பை ஏற்படுத்தி விட்டன. அத்துடன் ''ரஜினி அரசியல் பிரவேசம் செய்யப் போகிறார்'' என்ற கோஷமும் கூடவே பிறந்து விட்டது. ''அரசியலுக்கு நீங்கள் வர வேண்டும். தமிழக முதல்வராக வேண்டும்'' என்று பிறந்த நாள் மேடையிலேயே நடிகர் கருணாஸ் அறிவிக்க, பிறகு பேசிய ரஜினி, ''அரசியலுக்கு வருகிறேன் என்று பொய் சொல்ல விரும்பவில்லை'' என்று முற்றுப்புள்ளி வைப்பது போலவும், இன்னொரு பக்கம், ''காலமும் சூழ்நிலைகளும்தான் அதை முடிவு செய்யும். எதுவும் திட்டமிடப்பட்டு நடப்பதில்லை'' என்று கூறி, அரசியலில் நிச்சயம் நுழைவேன் என்பது போலவும் பரபரப்பை உருவாக்கிவிட்டுள்ளார். தி.மு.க.வைச் சேர்ந்த வாகை சந்திரசேகர், அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியைச் சேர்ந்த சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் என்று அனைத்துக் கட்சியினரும் ரஜினிக்கு பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னதாலோ என்னவோ, ''நான் கோபாலபுரத்திற்கும் (தி.மு.க. தலைவர் கருணாநிதி வசிக்கும் இடம்) வேண்டியவன். போயஸ் தோட்டத்திற்கும் (முதல்வர் ஜெயலலிதா வசிக்கும் இடம்) வேண்டியவன். அனைவருக்கும் பொதுவானவன்'' என்றும் சொல்லி வைத்துள்ளார் ரஜினி.

ரஜினி அரசியலுக்குள் நுழைய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது இப்படித்தான். தமிழகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் ஆட்சி நடைபெற்ற நேரம். அதாவது 1991-1996 காலம். முதல்வர் ஜெயலலிதாவின் இல்லமும், ரஜினியின் இல்லமும் சென்னையில் உள்ள போயஸ்கார்டனில்தான் இருக்கிறது. தன் வீட்டிற்கு ரஜினி செல்லும் போது அவரது காரை முதல்வரின் பாதுகாப்பிற்கு நின்ற அதிகாரிகள் மறித்து விசாரித்ததில் பிரச்சினை எழுந்தது. அந்த சமயத்தில்தான் ரஜினியின் ''அண்ணாமலை'' திரைப்படம் வெளிவரும் நேரம். ''நான் என் வழியில் போய்க் கொண்டிருக்கிறேன். என்னை தொந்தரவு செய்தால் நான் சொன்னதையும் செய்வேன். சொல்லாததையும் செய்வேன்'' என்று ரஜினி காரசாரமாக பேட்டி கொடுக்க, அ.தி.மு.க.விற்கும், ரஜினிக்கும் மோதல் அரசல் புரசலாக வெடித்தது. அதுதான் ரஜினி ''அரசியலுக்கு வரப் போகிறார்'' என்ற தீபத்தை ஏற்றி வைத்த சம்பவம். அதன் உடனடி லாபம் ரஜினியின் ''அண்ணாமலை'' திரைப்படம் வெற்றிக் கொடி நாட்டியது. ஆனால், ரஜினி அரசியலுக்கு வரவில்லை.

அதைத் தொடர்ந்து அதே காலகட்டத்தில் பிரபல சினிமா டைரக்டர் மணிரத்தினம் வீட்டில் வெடிகுண்டு வீசப்பட்டு, திரையுலகமே பீதியில் மூழ்கியது. திரையுலகத்தினர் அனைவரும் ரஜினி ஏதாவது செய்ய வேண்டும் என்று ரஜினியை எதிர்பார்த்தனர். அப்போது ரஜினியின் ''பாட்ஷா'' பட வெற்றி விழா. மேடையில் அ.தி.மு.க. அமைச்சராக இருந்த ஆர்.எம்.வீரப்பனை வைத்துக் கொண்டு, ''தமிழ்நாட்டில் வெடிகுண்டு கலாசாரம் பரவி விட்டது'' என்று கடுமையான கருத்தை ரஜினி வெளியிட்டார். இது அ.தி.மு.க. விற்கும், ரஜினிக்குமான போரை உச்சத்திற்கு கொண்டு போனது. தமிழக சட்டமன்றத்திற்கும் தேர்தல் வந்தது. அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்ற கோரிக்கையை வைத்து மறைந்த மூப்பனார் தனியாக தமிழ் மாநில காங்கிரஸ் என்ற கட்சியைத் தொடங்கினார். அக்கட்சிக்கு தலைவர் பதவியை ஏற்க வாருங்கள் என்று ரஜினிக்கு மூப்பனார் அழைப்பு விட்டார். தன் கட்சிக்கு ''அண்ணாமலை'' படத்தில் வந்த ''சைக்கிளையே'' சின்னமாக தேர்வு செய்தார் மூப்பனார். ரஜினி அரசியலில் குதிக்க சரியான சந்தர்ப்பம் அது என்றே நடுநிலையாளர்கள் கூட கருதினார்கள். ஆனால், ரஜினி கட்சியில் சேருவதற்குப் பதில், ''தமிழ்நாட்டைக் காப்பாற்ற தி.மு.க.- தா.ம.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள்'' என்று வோய்ஸ் மட்டும் கொடுத்தார். ''ரஜினியின் சைக்கிள் வருகிறது. வாக்களியுங்கள்'' என்றே வாக்காளர்களிடம் பிரசாரம் செய்து அன்றைய தி.மு.க.- தா.ம.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றது. அ.தி.மு.க. படு தோல்வியடைந்தது.

இந்த நிலைமை 1998-ஆம் ஆண்டு வந்த பாராளுமன்றத் தேர்தலின் போது மாறியிருந்தாலும், ரஜினியைப் பொறுத்த மட்டில் அ.தி.மு.க. மீதான கோபம் மாறவில்லை. அதனால் கோவையில் தொடர் குண்டு வெடிப்பு நடந்திருந்த நேரத்தில் கூட தி.மு.க.- தா.ம.க. கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என்று ''வொய்ஸ்'' கொடுத்தார். தமிழக தேர்தலில் இன்னாருக்கு ஆதரித்து வாக்களியுங்கள் என்று ரஜினி விடும் அறிக்கையை ''ரஜினி வொய்ஸ்'' என்றே சொல்லுவார்கள். இன்றும் அந்தப் பெயர் நிலைத்து விட்டது. ஆனால், அந்த பாராளுமன்றத் தேர்தலில் ரஜினியின் வோய்ஸ் அடிபட்டுப் போனது. அரசியல் ரீதியாக ரஜினிக்கு ஏற்பட்ட முதல் சறுக்கல் அது என்றே சொல்ல வேண்டும். அடுத்து ''இனி கையைச் சுட்டுக் கொள்ளக் கூடாது'' என்று அமைதி காத்தார் ரஜினி. 1999 பாராளுமன்றத் தேர்தலிலும், 2001 சட்டமன்றத் தேர்தலிலும் ரஜினி வோய்ஸ் கொடுக்கவில்லை. ஆனால், தேர்தல் க்ளைமேட் உருவாகியதும், ''ரஜினி வொய்ஸ்'' வருகிறது என்ற கிசுகிசுக்களுக்கு மட்டும் பஞ்சம் இருக்காது. ரஜினி சும்மா இருந்தாலும், அவருக்கு வம்பு வீட்டு வாசல் தேடியே வந்தது. கன்னட நடிகரை கடத்திய சந்தனக் கடத்தல் வீரப்பன் (தமிழகத்தில்

தர்மபுரி பகுதியில் உள்ள வனப்பகுதியில் ராஜா போல் தனி ராஜ்யம் நடத்தி வந்தவன். இதற்காக தனிப் பொலிஸ் படைகளே உருவாக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடந்தது. இறுதியில் இரண்டாவது முறையாக முதல்வராக ஜெயலலிதா வந்த போது வீரப்பன் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டான்) பற்றி ரஜினி தாறுமாறாக கருத்துச் சொல்ல வீரப்பனின் சமுதாய வாக்குகளை நம்பியிருக்கும் பாட்டாளி மக்கள் கட்சி போர்க்கொடி தூக்கியது. அதைத் தொடர்ந்து ரஜினியின் “பாபா” படம் ரிலீஸ் ஆனது. அப்படத்தில் ரஜினி சிகரெட் பிடிப்பது போன்று இருந்த காட்சிகள் இளைஞர்களை கெடுக்கிறது என்று குற்றம் சாட்டி டாக்டர் ராமதாஸ் பிரச்சினையைக் கிளப்பினார். அந்தப் படத்தை திரையரங்குகளில் வெளியிட விடாமல், வட மாவட்டங்களில் பிரச்சினை செய்தார்கள் பா.ம.க.வினர். 2004 பாராளுமன்றத் தேர்தலும் வந்த நேரம் என்பதால் ரஜினி பா.ம.க.விற்கு எதிராக “வோய்ஸ்” கொடுக்க முடிவு செய்தார்.

அப்போது தி.மு.க. தலைமையில் “மெகா கூட்டணி”! அக்கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சியும் இடம்பெற்றிருந்தது. எதிர் வரிசையில் அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி. அதில் வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. பங்கேற்றது. ஆகவே, தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு பா.ஜ.க. ஆதரவளிக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி, அ.தி.மு.க. தலைமையிலான அணிக்கு வாக்களிக்க “வொய்ஸ்” கொடுத்தார் சூப்பர் ஸ்டார் ரஜினி. ஆனால், வாக்கு சதவீத அடிப்படையில் வலுவான மெகா கூட்டணி தி.மு.க. பக்கம் இருந்ததால், தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள நாற்பது பாராளுமன்ற தொகுதிகளிலும் தி.மு.க கூட்டணியே வெற்றி பெற்றது. ரஜினி வொய்ஸ் கொடுத்தும் அ.தி.மு.க. கூட்டணி ஓரிடத்தில் கூட வெற்றி பெற முடியாமல் போனது. “ரஜினி வொய்ஸ்” தமிழக வாக்காளர்களிடம் செல்லுபடியாக

கடந்த காலங்களில் முதலில் தி.மு.க.-தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணிக்காக 1996இல் “வோய்ஸ்” கொடுத்தார் ரஜினி. அது 1998 பாராளுமன்றத் தேர்தலிலும் தொடர்ந்தது. பிறகு தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆதரவாக இருக்கிறது என்று கூறி 2004 பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று “வோய்ஸ்” கொடுத்தார் சூப்பர் ஸ்டார். பிறந்த நாளில் கூட சரத்குமாரே பங்கேற்று ரஜினியை வாழ்த்தியிருக்கிறார். ஆகவே, நாம் அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் “ரஜினி அரசியல் பிரவேசம்” பற்றி கருத்துக் கேட்டோம். இதோ அவர்களின் பேட்டிகள்;

# “வராவிட்டால் வொய்ஸ் கொடுக்கணும்”



**இல.கணேசன்**
தேசிய செயற்குழு உறுப்பினர்
பாரதீய ஜனதா கட்சி

இருபது வருடங்களுக்கு முன்பு நான் ஆர்.எஸ்.எஸ். (பா.ஜ.க.வின் தாய்க்கழகம்)ஸில் நேரடியாக பொறுப்பில் இருந்த நேரம். ஒரு நாள் எங்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸின் மாலை நேர வகுப்பு (அதை ஷாக்கா என்று சொல்வோம்) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் கலந்து கொண்ட ஒரு மாணவன் தன் கழுத்தில் ருத்ராட்சம் போட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பையனிடம் நான் பேச்சுக் கொடுத்தேன். சிவாச்சாரியார் குடும்பத்திலிருந்து வந்திருக்கின்ற பையனா என்று பார்ப்பதற்காக, “என்னப்பா ருத்ராட்சம் போட்டிருக்கிறியே. உன் பெயர் என்ன” என்று கேட்டேன். தன் பெயரைச் சொன்னான். பிறகு “அப்பா என்ன பண்றார்?” என்று கேட்டேன். அதற்கு அவன் தையல்காரர் என்று சொன்னான். உங்க வீட்டில் யாராவது சிவாச்சாரியார் இருக்கிறாரா? என்று கேட்டதற்கும் இல்லை என்று பதில் சொன்னான். “அப்புறம் கழுத்தில் ருத்ராட்சம் போட்டிருக்கிறாய்” என்று கேட்டன். அதற்கு அவன், “இது ரஜினி சார் சொன்னது” என்று பதில் சொன்னான். இதைக் கேட்டவுடன் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி என்னவென்றால், ஒரு நடிகர் பல இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை உண்டாக்குகிறார் என்பதைப் பார்த்ததுதான். தவறான தாக்கத்தை உண்டாக்குகின்ற நிகழ்ச்சிகள் இருக்கலாம். ஆனால், ரஜினியைப் பொறுத்தவரை அவர் ராகவேந்திரர் உபாசகர் என்பதால் தங்கள் வீடுகளில் ராகவேந்திரர் படத்தை வைத்த ரசிகர்கள் ஏராளம். அவர் ருத்ராட்சக் கொட்டையை சினிமாவில் மாட்டிக் கொண்டதால் ருத்ராட்சம் போட்ட இளைஞர்களும் இருக்கிறாங்க. இது ஒரு வகையில் நல்ல தாக்கம்தான். பாராட்டுக்குரிய விடயம்.

பொதுவாகவே திரைப்படத்துறையில் இருக்கிறவர்களுக்கு விளம்பர பாதிப்பு இருக்கிறது. நாங்களும் கூட தேர்தல் நேரத்தில் திரைப்பட நடிகர்களை அழைத்து பிரசாரம் செய்யச் சொல்லுகிறோம். கூட்டமும் சேரும்.

வில்லை என்பதற்குச் சாட்சியமாக அமைந்த இரண்டாவது தேர்தல் அது. ரஜினியின் "அண்ணாமலை" திரைப்படத்திற்குப் பிறகு இன்றுவரை எட்டு தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் மூன்று தேர்தல்களில் ரஜினி வோய்ஸ் கொடுத்தார். ஒரு தேர்தலில் வாக்காளர்களை அது "வசீகரம்" செய்தது. ஆனால், இரு தேர்தல்களில் "பெயிலியர்" ஆனது. மற்ற தேர்தல்களில் "வேண்டாம் வம்பு" என்று அமைதி காத்தார்.

இப்படியொரு சூழ்நிலையில்தான் திடீரென்று நோய்வாய்ப்பட்டார் ரஜினி. அதன் பிறகு பக்தர்கள் "பாலாபிஷேகம்", "மண்சோறு சாப்பிட்டது", "காவடி தூக்கியது" என்று எண்ணற்ற பிரார்த்தனைகள் செய்தார்கள். ரஜினியே இப்போது கூறியிருப்பது போல் "மிராக்கல்" ஏற்பட்டு, திரும்பி வந்துள்ள ரஜினி "கோச்சடையான்" பட தயாரிப்பில் தீவிரமாக இருக்கிறார். இன்னொரு வகையில் பார்த்தால் திரைப்படமும், அரசியலுக்கு வருவதும் ரஜினியைப் பொறுத்தமட்டில் சேர்ந்தே வரும். எப்போதெல்லாம் அவரது புதிய திரைப்படம் வருகிறதோ, அப்போதெல்லாம் ரஜினி அரசியலுக்கு வருகிறார் என்ற எதிர்பார்ப்பும் கிளம்பும். அதற்கு தகுந்தாற்போல் தன் திரைப்படங்களிலும் அரசியல் நெடி ஏற்படுத்தும் வசனங்களை படத்தில் வைப்பார் ரஜினி. ஆனால், 2006இல் புதிதாக அரசியல் கட்சி துவங்கி, தனக்கு என்று 8 முதல் 10 சதவீத வாக்குகளை தக்க வைத்துக் கொண்ட விஜயகாந்தைப் பார்த்து ரஜினி ரசிகர்கள் பொறாமைப்படுகிறார்கள். "விஜயகாந்தே பத்து சதவீத வாக்குகளை வாங்க முடியும் என்றால் எங்கள் தலைவர் அரசியல் களத்திற்கு வந்தால் 30 சதவீத வாக்குகளை வாங்குவார்" என்பது ரஜினி ரசிகர்களின் ஏகோபித்த பேச்சு. ஆனால், அரசியல் என்ற "பேருந்தை" 1996இல் தவறவிட்ட ரஜினி, 2006 இலும் கோட்டை விட்டு விட்டு நிற்கிறார் என்பதே நிஜம். இந்த 63ஆவது பிறந்த நாளில் மீண்டும் "அரசியலுக்கு வருவேன்" என்பதை சூசகமாக அறிவித்துள்ளது விரைவில் "ரிலீஸ்" ஆக இருக்கும் "கோச்சடையான்" வசூலை பெருக்கவே என்று சொல்வோரும் உண்டு!

அது வந்திருக்கின்ற நடிகரைப் பார்ப்பதற்காகவே. நடிகர் சொன்னார் என்பதற்காகவே அவர் சொன்னவருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற மனப்பான்மை மக்களுக்கு வருவது நல்ல விடயமா அல்லது கெட்ட விடயமா என்பதை உங்கள் முடிவிற்கே விட்டு விடுகிறேன். ஆனால் ரஜினி அப்படியில்லை. ரஜினி காந்த் ஒரு வார்த்தை சொன்னால் அதற்கு மதிப்பு இருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் ஆட்சி மாற்றம் வந்ததற்கு, அவுங்க பாஷையிலே சொன்னால் ரஜினியின் "வொய்ஸ்" ஒரு காரணம். அப்போது தமிழ் மாநில காங்கிரஸ் இருந்தது. மூப்பனார் அவர்கள் இருந்தார்கள். மூப்பனார் இருந்த கூட்டணிக்கு ஆதரவாக ரஜினி "வொய்ஸ்" கொடுத்ததால் தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனால் பல நேரங்களில் ரஜினி "வொய்ஸ்" கொடுக்கணும். ரஜினி தேர்தலில் நிற்கணும். அரசியல் கட்சி ஆரம்பிக்கணும். தேர்தல் களத்திற்கு வரணும் என்றெல்லாம் சொன்னார்கள். அவர் அரசியலுக்கு வர வேண்டும் என்ற பேச்சு எழுந்து பல ஆண்டு காலம் உருண்டு ஓடி விட்டது. நல்ல இளமையாகவும், ஆரோக்கியமாகவும், ஓடி உழைக்கக்கூடிய நிலையிலும் ரஜினி இருந்த காலகட்டத்தில் இப்படியொரு பேச்சு எழுந்த போது அவர் அரசியலில் குதிக்காமல் இருந்தது என்னைப் பொறுத்த வரையில் புத்திசாலித்தனம்தான்.

ஆனால், இப்போது உடல்நலத்திற்கு ஏற்பட்ட பாதிப்பில் இருக்கும் ரஜினி கடினமாக களத்தில் இறங்கி உழைத்து ஒரு கட்சியை உருவாக்க வேண்டும் என்றால் அதற்கு ஆரம்பத்திலிருந்து வேலை செய்ய வேண்டும். ஆகவே அரசியலில் இறங்க மாட்டேன், புதிய அரசியல் கட்சி துவங்க மாட்டேன் என்று ரஜினி அறிவித்தால், அது எனக்கு பெர்ஷனலாக வருத்தத்தைத் தந்

தாலும், புத்திசாலித்தனமான முடிவு. அரசியலுக்கு வருவதென்றால் அன்றைக்கே வந்திருக்க வேண்டும். இவ்வளவு காலம் கடந்து செய்வது சரியில்லை என்று அவர் நினைக்கலாம். ஆனால், அரசியலுக்கு அப்பாற்பட்டு வெளியில் இருக்கின்ற காரணத்தினாலேயே ரஜினிக்கு மரியாதை கூடும். அவர் பொதுவானவராக இருப்பார். உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் விவசாய சங்கத் தலைவராக நாராயணசாமி நாயுடு இருந்தார். ரொம்பவும் மரியாதைக்குரியவர். எந்த அளவிற்கு அவர் செல்வாக்காக இருந்தார் என்றால் தமிழ்நாட்டின் முடிசூடா மன்னனாகக் கருதப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள் நாராயணசாமி நாயுடுவின் வீட்டிற்கே போய் ஆதரவு கேட்கும் அளவிற்கு சக்தி வாய்ந்தவராக இருந்தார். யாரோ சிலர் அவர் காதில் கடித்து, வேப்பிலை அடித்து அவரை புதுக் கட்சி துவங்க விட்டார்கள். இப்ப அந்தக் கட்சி எங்கு இருக்கிறது என்று தேட முடியலை. இது ஏதோ நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது விமர்சனம் என்றல்ல. நடைபெற்ற வரலாற்றைச் சொல்கிறேன். அதற்கு காரணம் என்னவென்றால் ஒரு பிரச்சினைக்காகப் போராடும் இயக்கத்திற்கு ஆதரவாக வரக் கூடியவர்கள் பல கட்சியிலும் இருப்பார்கள் என்பதன் வெளிப்பாடு. அது மாதிரி ரஜினியின் ரசிகர்களாக இருப்பவர்கள் பல கட்சியிலும் உள்ளார்கள். அவர்களுக்கு ரஜினியைப் பிடிக்கும். அவ்வளவு தான்.

ரஜினி தெய்வபக்தி உள்ளவர் என்பது வெளிப்படை. ஆகவே, நாத்திகனாக இருப்பவர்கள் ரஜினிக்குப் பின்னால் இருக்க மாட்டார்கள். அப்பழுக்கற்ற தேசியவாதி ரஜினி என்பதும் வெளிப்படை. அதனால் தேசத்திற்கு விரோதமாக சிந்திப்பவர்கள் ரஜினியை பின்பற்றுபவர்

களாக இரு க்க முடியாது என்பதும் உண்மை. எந்த அரசியல் கட்சியில் இருந்தாலும், தேசியத்திலும், தெய்வீ கத்திலும் நம்பிக்கை வைத்திருக்கக் கூடியவர்களுக்கு எல்லாம் நம் பிக்கை தரும் நபராக, அரசியலுக்கு அப்பாற்பட்ட நபராக, பொதுவான நபராக ரஜினி இருக்கிறார். ஆகவே அரசியலுக்கு வராமலேயே ரஜி னிக்கு சக்தி கூடும். புதிதாக பேக்டரி சார்ஜ் ஆகி சக்தி கூடும். ஆகவே ரஜினி அரசியல் கட்சி ஆரம்பிக்க மாட்டேன் என்று கூறுவது சரி. அரசி யல் களத்தில் குதிக்க மாட்டேன் என்ற முடிவும் சரி. ஆனால், ரஜினி தான் சேர்த்து வைத்துள்ள சக்தியை வீணாக்கக் கூடாது.

தேர்தல் வரும்போது தன் ரசிகர் கள் மத்தியில் ரஜினி தெளிவாக ஒரு "வொய்ஸ்" கொடுக்க வேண்டும். நாட்டை இன்று காப்பாற்றுவதற்கு இவர்கள்தான், இந்தக் கட்சிதான் சரி யானது என்று சொல்ல வேண்டும். அப்படியொரு பொதுவான நிலைப் பாடு எடுத்தால் நானே ரஜினி செய் தது சரிங்கன்னு சொல்வேன். நிச்சய மாக அந்த நேரத்தில் ரஜினி அப்படிச் செய்வார் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்ய ரஜினிக்கு அந்த நேரத்தில் ஆண்டவன் நல்ல புத்தி யைக் கொடுக்கணும்னு நான் வேண் டிக்கொள்கிறேன்.

## அரசியலில் தாக்குப் பிடிக்க முடியுமா?




**கே.பி. ராமலிங்கம்**
*ராஜ்ய சபை உறுப்பினர்*
*திராவிட முன்னேற்றக் கழகம்*

ரஜினி நல்ல மனிதர். பெரிய பரந்த மனப்பான்மை கொண்ட சிறந்த மனிதர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்றைய அரசி யல் சூழ்நிலையில் அவர் மாதிரி உள்ளவர்கள் அர சியலுக்கு வருவது நல்லது. ஆனால், இன்றைய அரசியல் நிலைமை எப்படியிருக்கிறது. நாட்டுக் காக, பிறருக்காக என்ன செய்தோம், எது மாதிரி உழைத்தோம் என்பதை விட, தங்களுக்கு என்ன கிடைத்துள்ளது என்பதையே இன்று இந்தியாவில் உள்ள அரசியல் கட்சிகளும், அதனைச் சார்ந்தவர் களும், வாக்களிக்கும் மக்களும் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட இன்றைய அரசியல் ரஜினிக்கு பொருந்துமா என்பதைப் பார்க்க வேண்டும். இது போன்ற மனோபாவம் உள்ள சூழ்நிலையை அரசி யலுக்கு வந்தால் ரஜினி எப்படி தாக்குப்பிடிப்பார் என்ற கேள்வி எழுகிறது. சேவை மனப்பான்மையே குறைந்து வருகின்ற இந்த காலகட்டத்தில் ரஜினி போன்றவர்கள் அரசியலுக்கு பொருந்துவாரா என் பதும் இன்னொரு கேள்வி.

நான் 1972இல் மாவட்ட மாணவரணி அமைப் பாளராக என் அரசியலைத் துவங்கினேன். இன் றைக்கு நாற்பது வருடங்கள் ஓடி விட்டன. என் அர சியல் அனுபவத்தை வைத்துப் பார்த்தால் ரஜினி அரசியலுக்கு தேவையானவரே. ஆனால், அப்ப டிக் கருதும் நேரத்தில் ரஜினியால் தாக்குப் பிடிக்க முடியுமா என்ற கேள்வியும் என் மனதில் எழுவது தவிர்க்க முடியவில்லை.

## ரஜினியின் முதல்வர் ஆசை




**ரவீந்திரன் துரைசாமி**
*அரசியல் ஆலோசகர்*
*அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி*

தி.மு.க. தலைவர் கருணாநிதி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெய லலிதா ஆகியோருக்கு இணையானவர் என்ற இமேஜ் ரஜினிக்கு தமிழக அரசி யலில் உருவானது உண்மைதான். அது அவருடைய சினிமா மார்க்கெட்டை தூக்கி நிறுத்தியதையும் யாரும் மறுக்க முடியாது. தமிழ் சினிமா ஹீரோக்களில் நம்பர் வன் ஹீரோவாக நிற்பதற்கு இந்த இமேஜ் ரஜினிக்கு உதவிய தோடு மட்டுமல்லாமல், அவருடைய சினிமா மார்க்கெட் டையும் பலமடங்கு உயர்த்தியது.

அரசியல் இமேஜால் கிடைத்த சினிமா மார்க்கெட்டை அரசி யல் கலந்த தனது சாதுர்யமான பேச்சுகளால் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டே வந்தார். 2004இல் டாக்டர் ராமதாஸ் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் திணறிய ரஜினி காந்திற்கு, "பாபா" பட தோல்விக்குப் பின் வந்த "சந்திரமுகி", "எந்தி ரன்" படங்களின் மிகப்பெரிய வெற்றி "தான் ஒரு பெரிய மக் கள் சக்தி" என்று ரஜினியை நம்ப வைத்துள்ளது. எனவேதான் அவருக்கு முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசையும் மன தில் துளிர்விட்டுள்ளது. அதேசமயத்தில், கஷ்டப்படாமல், ஆளுங்கட்சி நெருக்கடிகள் எதையும் சந்திக்காமல் அந்த ஆசையை அறுவடை செய்ய நினைக்கிறார். ஆகவே, அப்படி யொரு காலம், நேரம், சூழ்நிலை வராதா என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார்.

மேலும், எதிர்காலத்தில் தன்னுடைய புகழ் எம்.ஜி.ஆர், என்.டி.ராமராவ் போன்ற சினிமா ஹீரோக்கள் போல் நிலைத்து நிற்க வேண்டுமானால், அரசியல் சக்தியாக வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற நினைப்பும் ரஜினி மனதில் இருக்கி றது. அதனால்தான் இப்போது நடைபெற்ற பிறந்த நாள் விழா வில், "அரசியலுக்கு நான் வரவில்லை" என்று முற்றுப்புள்ளி வைக்காமல், "காலம், நேரம், சூழ்நிலைதான் அதை முடிவு செய்யும்" என்று "கமா" வைத்துள்ளார் ரஜினி.

# ரஜினிக்கு ஏற்ற சூழ்நிலை இல்லை



*அமெரிக்கை நாராயணன்*
முன்னாள் தலைமை
நிலைச் செயலாளர்,
இந்திய தேசிய காங்கிரஸ்

(இவர் 1996இல் காங்கிரஸி லிருந்து தமிழ் மாநில காங்கிரஸ் (த.மா.கா.) உருவான போது ரஜினியை காங்கிரஸுக்குள் கொண்டு வர வேண்டும் என்று மூப்பனாரிடம் சொன்னவர்)

அரசியலுக்கு ரஜினி வருவதும், வராததும் அவர் எடுக்க வேண்டிய முடிவு. ஆனால், அரசியலுக்குள் அடி எடுத்து வைக்க ரஜினிக்கு பல்வேறு காலகட்டங்கள் அவரது வீட்டுக் கதவை வந்து தட்டின. உதாரணமாக தமிழ் மாநில காங்கிரஸ் 1996இல் உருவான போது, ரஜினி தா.மா.க.வில் சேர்ந்திருந்தால் தமிழகத்தின் அரசியலே மாறிப் போயிருக்கும்.

இன்றும் கூட ரஜினி அரசியலுக்கு வந்தால் அதனால் ஒரு "இம்பாக்ட்" இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், இன்னும் கூட ரஜினி தமிழகத்தில் ஒரு சக்தி. இருக்கின்ற சினிமா நடிகர்களில் அவருக்கு என்று பெரும் ரசிகர்கள் பட்டாளம் இருக்கிறது. வாக்குப் போடும் மக்களின் தாக்கமும் ரஜினிக்கு இருக்கிறது. அவர் ஏற்கனவே அரசியலில் "வொய்ஸ்" கொடுத்த போது, தாக்கம் இருந்தது. அதுதான் வரலாறு. அந்த தாக்கம் எதிர்காலத்தில் அவர் அரசியலுக்கு வந்தாலும் இருக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

அரசியலுக்கு தரங்கெட்ட பேச்சுகள், எடுத்தேன், கவிழ்த்தேன் போன்ற பேச்சுகள் எல்லாம் சரிவராது. அது போன்ற பழக்கங்கள் இல்லாத ரஜினி அரசியலுக்கு வருவது நல்லது. அரசியலின் தரம் மேலோங்கும். அவர் அரசியலில் நுழைவது ஒரு "பாஸிட்டிவ் இன்ப்ளூயன்ஸை" உருவாக்கும்.

இன்றைய சூழ்நிலையில் அது போன்றதொரு இன்ப்ளூயன்ஸ் அரசியலுக்கு அவசியம். ஆனால், அரசியலில் சேர வேண்டும் என்று முடிவு எடுப்பது அவ்வளவு சுலபமான முடிவு அல்ல. ஏனென்றால், 1996ஆம் வருடத்தில் மறைந்த மூப்பனார் சொன்னதை ஏற்று, "வாருங்கள். எங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று இந்திய நாட்டின் பிரதமராக இருந்த நரசிம்மராவ் ரஜினியை அரசியலுக்கு அழைத்தார்.

அப்போது அவர் வரவில்லை. மூப்பனார் கோரிக்கையை ஏற்று அவர் "வொய்ஸ்" கொடுத்தார். அதற்கு தேர்தல் முடிவுகளில் ஒரு தாக்கம் ஏற்பட்டது. ஆனால், "க்ளியர் வோய்ஸ்" கொடுக்க (அரசியல் கட்சியில் சேருவதை அப்படிச் சொல்கிறார்) மறுத்து விட்டார். அன்று அவருக்கு ஏற்ற நேரம் வந்தது. ஆனால், ரஜினி முடிவு எடுக்கவில்லை. இன்றைக்கு அது போன்ற சூழ்நிலை இல்லை என்பதே நிலைமை.









இந்தோனேஷியாவின் பின்ரான் தீவில் இந்த எட்டு வயது பெண் குரங்கு பூனைக் குட்டியொன்றை 'தத்தெடுத்து' வளர்க்கிறது

- லண்டன் டெயிலி மெயில்

# சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகும் முன்னாள் பெண் போராளிகள்

சமூகத்துடன் இணைந்து கொள்வதில் முன்னாள் ஆண் போராளிகளும் நெருக்கடிகளை எதிர்நோக்கினாலும் அவர்களையும் விட பெண் போராளிகளின் சமூக இணைவே பாரதூரமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 12,007 முன்னாள் போராளிகள், அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சுமார் மூன்று தசாப்தங்களாக நீடித்த யுத்தம் காரணமாக இலங்கையின் வட பகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இடம் பெயர்ந்தனர்.

யுத்த காலத்தில் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட 11,000 முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளில் தற்போது 600 பேர் மட்டுமே புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருப்பதாகவும், ஏனையோர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் சீர்திருத்த மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட பெண் போராளிகளின் எண்ணிக்கை 3,000 எனவும் மதிப்பீடு செய்யப்பட்டது. அண்மையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 104 பெண் போராளிகள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இந்தத் துணிச்சல் மிக்க பெண்கள் சம பலத்துடன் யுத்த களத்தில் போராடிப் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். இந்தப் பெண்கள் போராட்டங்களில் வெற்றியீட்டிய போது உறவினர்களும், நண்பர்களும் மகிழ்ந்து பாராட்டினர். எனினும், தற்போது இந்தப் பெண்கள் சமூகத்தில் உதாசீனம் செய்யப்படுகின்றனர். சமூகத்துடன் மீள இணைந்து கொள்வதில் ஆண் முன்னாள் போராளிகளும் இடர்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்குகின்றனர். அதனை விடவும் பெண் போராளிகள் சமூகத்தில் மீள இணைந்து கொண்டு இயல்பு வாழ்க்கையைத் தொடர்வது மிகவும் சவால் மிக்கதாக அமைந்துள்ளது.





துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளை



சுதா 32, சிறுவர் போராளி, கடற்புலி - இலங்கையின் வட பகுதியைச் சேர்ந்தவர்

“1995 ஆம் ஆண்டில் நான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண் போராளியாக இணைந்து கொண்டேன். பின்னர் புலிகளின் கடற்படையில் இணைந்து கொண்டேன். அரசாங்கப் படையினருக்கு எதிராக நடைபெற்ற பல மோதல்களில் நான் ஈடுபட்டேன். 1997 ஆம் ஆண்டு பரந்தன் பிரதேசத்தில் இடம்பெற்ற மோதலில் எனது இடது கையை இழந்தேன். எனினும் நான் தொடர்ந்தும் போராடினேன். யுத்தத்தின் இறுதித் தருணம் வரையில் போராடினேன். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி வட்டுவாகல் என்னும் இடத்தில் அரசாங்கப் பாதுகாப்புப்

படையினரிடம் சரணடைந்தேன். ஒரு வருடமும் மூன்று மாதங்களும் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக் கப்பட்டிருந்தேன். புனர்வாழ்வு அளிக்கப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் விடு தலை செய்யப்பட்டேன்.

எனது உறவினர்களும், அயலவர் களும் மிகவும் இழிவான முறையில் என்னைத் தூசித்தார்கள். அரசாங்கப் பாதுகாப்புப் படையினருடன் நான் தவறான உறவைப் பேணியதாகப் பழி சுமத்தினார்கள். உறவினர்கள் “விபசாரி”, “பாலியல் தொழிலாளி” போன்ற இழிவான பட்டங்களை எனக்குச் சூட்டினார்கள். என் வாழ்க் கையில் முதற் தடவையாக இவ்வா றான இழி சொற்களினால் தூற்றப்பட் டேன். அரசியல்வாதிகளுக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலுத்தி நான் விடுதலையானதாக எனது அயலவர்கள் அடிக்கடி குறிப் பிட்டார்கள். அரசாங்கப் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட பல ஆண்களு டன் படுக்கையைப் பகிர்ந்து கொண் டதாகத் தூற்றினார்கள். ‘நீ அருவருக் கத் தக்கவள்’, ‘நீ அமங்களமான வள்’, ‘நீ கெட்டவள்’, ‘நீ ஓர் கெட்ட சகுனம்’, ‘நீ ஓர் பரத்தை’, ‘நீ ஓர் கெட்ட ஆவி’ என்றெல்லாம் என்னை நிந்தித்தார்கள். பின்தங்கிய கிராமத்தி லிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட ஒரே தைரியம் மிக்க பெண் நான் என் பதனைக் கூறிக் கொள்வதில் மிகவும் பெருமிதம் அடைகின்றேன். நான் உயிருடன் திரும்பினேன். இதனைப் பார்த்த மக்கள் பொறாமை கொண் டுள்ளனர்.

சர்வதேசக் குடிப்பெயர்வு அமை ப்பு எனக்கு 62,000/= (இலங்கை ரூபா) பெறுமதியான சிறிய கடை யொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவை யான பொருட்களை வழங்கியது. எனது ஜீவனோபாயத்தை மேம்படுத் தும் நோக்கில் இந்த உதவி வழங்கப் பட்டது. எனினும், கடையொன்றை ஆரம்பிக்க என்னால் முடியவில்லை. உறவினர்கள், அயலவர்கள் மற்றும் இந்தச் சமூகம் என்னை இழிவு படுத்திய காரணத்தினால் வாழ்வா தார நோக்கில் கடையொன்றை ஆரம் பிக்கும் முயற்சி தோல்வியடைந்தது. நாள்தோறும் என்னை அவமானப் படுத்தினார்கள். என்னைச் சுற்றியி ருந்தவர்கள் மிகவும் மோசமான முறையில் நடத்தினார்கள், பலர் என்னை வேற்றுக் கிரகவாசிகளைப் பார்ப்பது போன்று மிகவும் அந்நிய வளாக நோக்கினர். சமூகம் என்னை எவ்வாறு பார்க்கின்றது என்பதனை நினைக்கும் போது மிகவும் வேதனை யாயிருக்கிறது.

இவ்வேளையில் வீட்டுப் பணிப் பெண்ணாக மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்தேன். ஒரு கை ஊனமடைந்தி ருந்ததனால் வெளிநாட்டு வேலை வாய்ப்பொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியாது என வேலை வாய்ப்பு முகவர் தெரிவித்தார்.

வயது முதிர்ந்த எனது பெற்றோர், நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள னர். அவர்களை மேலும் தொந்தரவு செய்ய நான் விரும்பவில்லை. நான் தற்கொலை செய்து கொள்ள விரும்பு கின்றேன். தொடர்ச்சியாக இந்த இழிச் சொற்களையும், பழிகளையும் கேட்டு உயிர் வாழ்வதில் எனக்கு உடன்பாடில்லை. சர்வதேசக் குடிப் பெயர்வு அமைப்பினால் வழங்கப் பட்ட பொருட்களை விற்று எனது இறுதிக் கிரியைகளை நடத்துமாறு எனது இளைய சகோதரியிடம் கூறி யுள்ளேன்.





புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் பெண் விடுதலைப்புலிப் போராளிகளு டன் அலரி மாளிகையில் ஜனாதிபதி ராஜபக்ஷ



கவி 29,
சிறுவர் போராளி,
பொட்டு அம்மான்
நிலக் கண்ணிவெடிப்
பிரிவு - இலங்கையின்
வட பகுதியைச்
சேர்ந்தவர்.

"1995 ஆம் ஆண்டு சிறுவர் போராளியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட நான், பின்னர் பொட்டு அம்மான் நிலக்கண்ணிவெடிப் பிரிவில் இணைந்து கொண்டேன். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த நிலையில் பூசா தடுப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். பின்னர் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி என்னை விடுதலை செய்தார்கள்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இலங்கையின் வடக்குப் பகுதியின் முரசுமோட்டையில் எனது தந்தை எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். கடற்புலிப் போராளியான எனது மூத்த சகோதரர் 2003 ஆம் ஆண்டு கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் உயிரிழந்தார்.

எனக்குக் கல்வியறிவு கிடையாது; தொழில் கிடையாது. ஏனையவர்கள் என்னைத் தூற்றும் போது வேதனையடைகின்றேன். சிலர் என்னைக் "கொலைகாரி" போன்ற பதங்களினால் அழைக்கின்றனர். என்னால் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ள முடியவில்லை. மணமகனுக்கு வரதட்சணை வழங்க முடியாத காரணத்தினால் திருமண பந்தத்தில் இணைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நான் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி போராளி என்ற காரணத்தினால் எவரும் எனக்கு தொழில் தருவதற்கு முன்வரவில்லை".

அபி 25,
இலங்கையின் வட
பகுதியைச் சேர்ந்தவர்



"நான் வன்னி மாவட்டத்தில் பாலர் பாடசாலையொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். 2008 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னைக் கட்டாயப்படுத்தி இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்கள். யுத்தத்தின் போது காயமடைந்தேன். காயமடைந்த என்னை பாதுகாப்புப் படையினர் மன்னார் அரசாங்க வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக எனது இடது கால், கையை அசைக்க முடியவில்லை. உறவினர்களைப் போன்றே எனது அயலவர்களும் மிகவும் நிந்தனையான முறையில் நடத்துகின்றனர். "ஏன் நீ உயிரோடு இருக்கின்றாய்?" என பலர் என்னிடம் நேரடியாகவே கேட்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரியது. இந்த இடத்தை விட்டு வெளியேறிச் சென்று மாற்றுத் திறனாளிகளுடன் வாழ்வதனையே விரும்புகின்றேன்"



பிரியா 25,
இலங்கையின் வட
பகுதியைச் சேர்ந்தவர்

"எனக்கு இருதய வலி காணப்பட்டது. சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக உறவினர் ஒருவருடன் வன்னியில் தங்கினேன். 2008 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னைப் பலவந்தமாக இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்கள். புலிகள் பலவந்தமாக இணைத்துக் கொண்ட காலப்பகுதியில் வன்னியில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். சிறிது காலம் எனக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுடன் நான் கடமையாற்றினேன். 2009ஆம் ஆண்டு மே மாதம் நான் சரணடைந்தேன். 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என்னை விடுதலை செய்தார்கள்.

எனக்குத் திருமணம் செய்து கொள்வதில் இஷ்டமில்லை. நான் "முன்னாள் போராளி" என்ற காரணத்தினால் என்னுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ள எவரும் விரும்பவில்லை. முன்னாள் பெண் போராளிகள் கொடூரமானவர்கள் எனவும், கட்டுப்படுத்த முடியாதவர்கள் எனவும் ஆண்கள் கருதுகின்றனர். நான் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டு சித்திரவதைகளை அனுபவிக்கத் தயாரில்லை. மற்றுமொரு துன்பியல் அனுபவத்தை எனது வாழ்வில் இணைத்துக் கொள்ள நான் முனையமாட்டேன். நான்தனித்து வாழ்வதனையே விரும்புகின்றேன்.

உமா 22,
இலங்கையின்
வட பகுதியைச்
சேர்ந்தவர்



"2008 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆண் போராளிகள், வீட்டிலிருந்த என்னைப் பலவந்தமாக அழைத்துச் சென்று இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்கள். ஆயுதங்களைப் பயன்படுத்துவது எவ்வாறு என்பது குறித்து ஒரு மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போராட்டத்தின் போது எனது தலையிலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டன. பாதுகாப்புப் படையினர் என்னை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள்.

அயலவர்களும், உறவினர்களும் தமிழிலுள்ள மிகக் கொடிய வார்த்தைகளினால் என்னைத் தூற்றித் துன்புறுத்தினார்கள். "நடத்தை கெட்டவள்", "எங்கள் முன் வராதே!" போன்ற வார்த்தைகளினால் என்னைத் தொடர்ந்து திட்டுவார்கள்.

தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக நான் கல்வியை மேலும் தொடர விரும்புகின்றேன். எனினும், நான் வெளியே சென்றால் அயலவர்களும், உறவினர்களும் பல்வேறு இழிவான பெயர்களினால் என்னைத் தூற்றுவார்கள். இதன் காரணமாக வீட்டு மூலையில் ஒதுங்கிக் கொள்ளத் தீர்மானித்தேன்''.



லீலா 49,
புலிகளின் பெண்கள் பிரிவு தளபதி -
இலங்கையின் வட பகுதியைச் சேர்ந்தவர்.

''1984 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட நான் இறுதிக் கட்ட யுத்தம் வரையில் போராடினேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுத் தளபதியாகக் கடமையாற்றிய நான் பல வெற்றிகளை ஈட்டியிருக்கின்றேன். யுத்த களத்தில் பல தடவைகள் நான் காயமடைந்திருக்கின்றேன். கன்னிப் பெண்ணாகவும், திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட பின்னரும் காடுகளிலும், ஏனைய இடங்களிலும் தொடர்ச்சியாக யுத்தம் செய்தேன். உணவு, நீர் இன்றிப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளேன். பல ஆண்டுகளாக நான் முன்னரங்கப் போராளியாகக் கடமையாற்றியிருக்கின்றேன். எனது கணவர் அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தார். எனினும், அவர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடை க்கவில்லை. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி என்னுடன் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகளை அரசாங்கப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்து விட்டு நானும் சரணடைந்தேன்.

வாழ்வதா? அல்லது தற்கொலை செய்து கொள்வதா? எனப் பல தடவைகள் நான் சிந்தித்திருக்கின்றேன். சயனைட் குப்பியை அருந்தித் தற்கொலை செய்து கொள்வதில்லை என நான் தீர்மானித்தேன். ஏனெனில், நான் உயிரை மாய்த்துக்கொண்டால் எனது குழந்தைகளைப் பராமரிக்க எவரும் இல்லை.

1980 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண்கள் இணைந்து கொண்டு போராடிய போது, தமிழ்ச் சமூகம் அந்த நடவடிக்கையை வியந்து பாராட்டிப் பெருமிதம் கொண்டது. எனினும், துரதிர்ஷ்டவசமாக அதே தமிழ்ச் சமூகம் முன்னாள் போராளிகளை ஏற்றுக் கொள்ள மறுதலிக்கின்றது. முன்னாள் பெண் போராளிகள் தொடர்பில் தமிழ்ச் சமூகத்தின் பார்வை, நடத்தைகள் மிகவும் வேதனையளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளன.

அதிகாலையில் எழுந்து கிணற்றில் நீர் எடுத்ததன் பின்னர் மீண்டும் இரவில் கிணற்றடிக்குச் செல்வேன். ஏனெனில், நான் எவரையும் பார்க்க விரும்பவில்லை. நான் வெளியே செல்லமாட்டேன், எனது பிள்ளைகளையும் விளையாடுவதற்கு வெளியே அனுப்புவதில்லை.

எங்களைக் காயப்படுத்துவதற்காகச் சொற்களை உச்சரிப்பதற்கு முன்னர் மக்கள் இருதடவைகள் சிந்திப்பதில்லை என்பது மிகவும் வேதனையளிக்கின்றது. நான் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து எனது குழந்தைகளின் அன்றாடத் தேவைகளைப் பெரும் சிரமத்துடன் பூர்த்தி செய்து வருகின்றேன்.

யுத்த வலயத்திலிருந்து திரும்பிய போது எவ்வளவு நகை, பணத்தைக் கொண்டு வந்தாய்? என மக்கள் என்னிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றார்கள். ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்திற்காகப் போராட்டம் செய்தபோதும், இந்தப் போராட்டத்தில் முற்று முழுதாக ஈடுபட்ட எங்களுக்குத் தற்பொழுது எந்தவிதமான அங்கீகாரமோ அல்லது மரியாதையோ சமூகத்தில் கிடைப்பதில்லை''.

இலங்கை யுத்தத்தின் பின்னரான ஓர் காலப் பகுதியைக் கடந்து செல்கின்றது. போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளித்து அவர்களைச் சமூகத்துடன் மீள இணைக்கும் செயன்முறையானது ஓர் மிகப்பெரிய சவாலாகவே நோக்கப்பட வேண்டும். ஏனெனில், இலங்கை வாழ் தமிழ்ச் சமூகமானது மிகவும் மரபு ரீதியான கொள்கைகள், கோட்பாடுகளைப் பின்பற்றும் ஓர் இனச் சமூகமாகவே காணப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகளை மீண்டும் தங்களது குடும்பங்களில் இணைத்துக் கொள்வதற்குப் பெரும்பாலான உறவினர்கள் விரும்பவில்லை. அநேகமான குடும்ப உறுப்பினர்கள் தங்களது மகளை, மருமகளை, தாயை, . சகோதரியை குடும்பத்தில் மீள இணைத்துக் கொள்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

முன்னாள் பெண் போராளிகளைக் குடும்பத்தில் இணைத்துக் கொண்டால் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் எனப் பலர் அஞ்சுகின்றனர். முன்னாள் போராளிகள் குடும்பத்தில் இணைந்து கொள்வது வெட்கக்கேடான ஒரு செயல் எனச் சிலர் கருதுகின்றனர்.

திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளாத பல பெண் போராளிகளுக்குத் துணை தேடுவது மிகவும் சவால் மிக்கதாக அமைந்துள்ளது. பெரும்பாலான இந்தப் பெண் போராளிகள் இன்னமும் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் பெண் போராளிகளில் பலர் இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். திருமணமான பெண் போராளிகளில் பலரது கணவர் கொல்லப்பட்டோ அல்லது காணாமல் போயோ அல்லது கைது செய்யப்பட்டோ அல்லது புனர்வாழ்வு அளிக்கப்பட்டோ (போராளி என்றால்) அல்லது வேறு திருமண பந்தத்தில் இணைந்து கொண்டோ உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆண், பெண் போராளிக ளுக்கு அரசாங்கம் ஓராண்டு காலம் புனர்வாழ்வு அளிக்கின்றது. முன் னாள் பெண் போராளிகள் இந்தச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, அடக்கப் பட்டு, ஒதுக்கப்பட்டு உதாசீனம் செய் யப்பட்டுள்ளனர். பெண் போராளிக ளைக் களங்கம் படிந்தவர்களாகவே இந்தச் சமூகம் நோக்கி வருகின்றது. இந்த நிலைமை முன்னாள் பெண் போராளிகளைத் தொடர்ந்தும் நெருக் கடிக்குள் ஆழ்த்தி வருகின்றமை வருத்தத்திற்குரியது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகளுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில், பல்வேறு பரிமாணங் களில் முடிவின்றித் தொடர்கின்றன.

சில தசாப்தங்களுக்கு முன்னர் பெண் போராளிகளினால் பெருமைப் பட்டுக் கொண்ட இந்தச் சமூகம் தற் போது அவர்களுக்குத் தேவையான நேரத்தில் உதவிக் கரம் நீட்டத் தயக்கம் காட்டுகின்றது. முன்னாள் பெண் போராளிகள் சமூகத்தில் ஒதுக் கப்பட்டவர்களாகவும், ஒடுக்கப்பட்ட வர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களைச் சமூகம் அங்கீகரிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முன்னாள் பெண் போராளிகள் திருமண பந்தத்தில் இணைந்து கொள் வதற்கான சாத்தியம் மிகவும் கடின மானதாகவே காணப்படுகின்றது. கல்வி, தொழில் வாய்ப்புப் போன்ற துறைகளிலும் பெண் போராளிகள் பல்வேறு தடைக் கற்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

30 ஆண்டுகளாக யுத்த களத்தில் முன்னரங்கப் போராளிகளாகப் போராடியவர்கள், பாடசாலைக் கல் வியை இடைநிறுத்தி, தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டனர். இந்தப் பெண் போரா ளிகள், யுத்தப் பயிற்சி பெற்று, யுத்த களத்தில் போராடி, காயமடைந்து, தப்பித்து, சரணடைந்து, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தற்போது சமூகத்து டன் மீள இணைக்கப்பட்டுள்ளனர். சமூக ஒடுக்குமுறைகளினால் இந்தப் பெண் போராளிகள் பாரிய சவால்க ளையும், நெருக்கடிகளையும் எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

சுயாட்சி அதிகாரங்களுக்காகப் பெண் போராளிகள் ஆயுதமேந்திப் போராடினார்கள். எனினும், தற் போது சமூகத்தில் அவர்கள் உதா சீனம் செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் பெண் போராளிகள் தொடர்ந்தும் தங்களது உயிருக்கு அச் சுறுத்தல் ஏற்பட்டு விடுமோ? என அஞ்சுகின்றனர். "தமிழ் புலி" என்ற முத்திரை ஆயுள் முழுவதற்கும் நீடிக் குமோ என அஞ்சுகின்றனர். சமூகத் துடன் மீள இணைந்து கொண்டு இயல்பு வாழ்க்கையைத் தொடர்வ தில் பெண் போராளிகள் சொல்லொ ணாத் துயரங்களையும், கடுமையான சவால்களையும் எதிர்நோக்கி வரு கின்றனர்.

பழைமைவாத, மரபு சார் சமூக நோக்கினால் திருமண பந்தம், கல்வி, தொழில் வாய்ப்பு போன்றன தொடர் பில் பெண் போராளிகள் துன்பங் களை அனுபவித்து வருகின்றனர். எனினும், அவர்கள் தன்மானத்தை இழந்துவிடவில்லை. சமூகப் புறக்க ணிப்புகளுக்கு மத்தியில் வேறு வழி யின்றி வாழ்க்கையைத் தொடர முயற்சிக்கின்றனர்.

முன்னாள் பெண் போராளிகள் வெறுப்பு, நம்பிக்கையின்மை, ஏமாற்றம் போன்ற உணர்வுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமூகம் மக்க ளின் பலமாக அமைய வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளிகளின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை யுத்தத்தின் பின்னரான இலங்கைச் சமூகம் மீறிச் செயற்பட்டு வருகின்றது. பெண் போராளிகளை சமூகம் ஒதுக்கி, ஒடுக்கி வருகின்றது.

இந்தப் பெண் போராளிகள் ஒடுக் குமுறைக்கு உட்படுத்தப்படுகின்ற னர். சமூகத்தின் ஒடுக்குமுறையினால் பெண் போராளிகள் வறுமையிலி ருந்து கடுமையான வறுமை நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளனர். முன்னாள் போராளிகளைப் பாதுகாக்கவும் அவர்களை அரவணைக்கவும் பொறுப்பு வாய்ந்த இந்தச் சமூகம் தவறியுள்ளது. கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் திருமணம் போன்ற விடயங்களை முன்னாள் பெண் போராளிகளுக்கு வழங்க இந்தச் சமூ கம் தவறியுள்ளது என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

சில தசாப்தங்களுக்கு முன்னர் பெண் போராளிகளினால் பெருமிதம் அடைந்த தமிழ்ச் சமூகம், தேவை யான நேரத்தில் அவர்களுக்கு நேசக்கரம் நீட்ட மறுத்துள்ளது. பெண் போராளிகள் சமூகத்தில் அங்கீகரிக் கப்படுவதில்லை. கன்னிப் பெண்க ளின் திருமண வாழ்க்கை மிகவும் சிக்கல் மிகுந்ததாகவே காணப்படு கின்றது. கல்வி, தொழில் வாய்ப்பு என்பனவும் பெண் போராளிகளு க்குப் பெரும் சவாலாகவே அமைந் துள்ளன.


ஒவ்வொரு பெண்ணும் மாற்றத் தின் முகவராகவே கருதப்பட வேண் டும். பெண் போராளிகளை "பாதிக் கப்பட்டோர்" என்ற நிலையிலிருந்து "வெற்றியாளர்" என்ற நிலைக்கு உயர்த்த வேண்டியது சமூகத்தின் கடப்பாடாகும். ●

***குறிப்பு:-***

***நேர்காணல் வழங்கிய முன்னாள் பெண் போராளிகளின் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.***

பாலஸ்தீன நெருக்கடி

# இரு அரசுகள் தீர்வு இன்னமும் கூட நீண்ட கால இலக்கே..!



ஜயந்த தனபால

ஒரு கண்ணுக்குப் பதிலாக ஒரு கண் என்று பழிவாங்கப் புறப்பட்டால், அது இறுதியில் முழு உலகையுமே குருடாக்கிவிடும் என்று மிகுந்த நேர்மைத் தெளிவுடன் மகாத்மா காந்தி கூறினார். கடந்த நவம்பர் மாதத்தில் ஒரு எட்டு நாட்கள் மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் உண்மையில் நடந்தது அதுவே. ஏட்டிக்குப் போட்டியாக மேற்கொள்ளப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களிலும் ஆளில்லா விமானத்தாக்குதல்களிலும் 160 பாலஸ்தீனர்களும் 6 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டார்கள். இறுதியில் எகிப்தின் அனுசரணையுடன் கடைப்பிடிக்கப்படுகின்ற போர் நிறுத்தத்தையடுத்து காசா மோதல்கள் ஒரு சஞ்சலமான முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

அடுத்த வருடம் ஜனவரியில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தனது வெற்றியை உறுதி செய்து கொள்ளும் நோக்கில் இஸ்ரேலியப் பிரதமர் நெதான்யாஹு திட்டமிட்டு மேற்கொண்ட தாக்குதல்களுக்கு மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பராக் ஒபாமாவின் ஆதரவு முழுமையாக கிடைத்தது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் மிட் றொம்னிக்கு ஆதரவாக தலையீடு செய்யப்போவதாக வெருட்டிய நெதான்யாஹு அதிலிருந்து பின்வாங்கியமைக்குப் பிரதியுபகாரமாகவே ஒபாமா காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு ஆதரவை வழங்கியதாகப் பரவலாக ஊகிக்கப்படுகிறது. மத்திய கிழக்கில் பேரழிவு ஆயுதங்களில்லாத வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக (Middle East Weapons of mas Destriction Free zone MEW MDFZ) ஹெல்சிங்கி நகரில் இம்மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த மகாநாடு இடம்பெறாது என்று ஒபாமா ஒருதலைப்பட்சமாக அறிவித்திருக்கிறார். அந்த மகாநாட்டைக் கூட்டும் பொறுப்பு அணுவாயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகளினால் அமெரிக்காவுக்கும் பிரிட்டன், ரஷ்யா மற்றும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அனுசரணை நாடான பின்லாந்து மகாநாட்டை நடத்துவதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்தது. அவ்வாறிருந்த போதிலும்,அமெரிக்கா ஒருதலைப்பட்சமான அறிவிப்பைச் செய்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

காசா பள்ளத்தாக்கு மீதான இஸ்ரேலின் முற்றுகைக்கு அமைதி வழியிலான இணக்கத் தீர்வும் அந்தப் பகுதியில் உள்ள சுமார் 17 இலட்சம் பிரஜைகளின் படுமோசமான வாழ்க்கை நிலைமைகளுக்கு ஒரு முடிவும் இன்னமும் கூட வெகு தொலைவிலேயே இருக்கின்றன. எவ்வாறெனினும், ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தின் அந்தஸ்தை அவதானி அரசு (Observer State) என்று உயர்த்துவதற்கு பொதுச்சபையில் கடந்த நவம்பர் 29 வியாழக்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பு கொடூரமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு ஆறுதலைத் தந்திருக்கிறது. காசா பள்ளத்தாக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் பாலஸ்தீன தேசிய அதிகார சபைக்கு தலைமை தாங்கும் பதாஹ் இயக்கத்திற்கும் இடையே கடுமையான போட்டா போட்டி நிலவுகின்ற போதிலும், பாலஸ்தீனர்களின் போராட்டத்தைப் பொறுத்தவரை ஐ.நா.பொதுச்சபை வாக்கெடுப்பு ஒரு பெரிய இராஜதந்திர வெற்றியாகும்.

138 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் 9 நாடுகள் (அமெரிக்கா, இஸ்ரேல், கனடா மற்றும் செக்குடியரசு உட்பட) எதிராகவும் வாக்களித்த அதேவேளை, பிரிட்டன் உட்பட 41 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இதே பிரிட்டனின் 1917 பல்ஃபோர் உடன்படிக்கைதான் பாலஸ்தீனத்தில் யூத மக்களுக்கென தேசிய தாயகம் ஒன்றை நிறுவுவதற்கு உறுதிவழங்கியது.

ஐ.நா.வாக்கெடுப்பினால் ஆத்திரமடைந்த இஸ்ரேல் (இன்னொரு அப்பட்டமான சர்வதேச சட்ட மீறலாக) ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் யூத குடியேற்றங்களைச் செய்யப்போவதாக அறிவித்தது.

1967ஆம் ஆண்டு 6 நாள் போரிற்குப் பிறகு இஸ்ரேலினால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட (இஸ்ரேலுக்கும் மத்திய தரைக் கடலுக்குமிடையிலான) ஒரு ஒடுக்கமான நீண்ட பிராந்தியமே காசா பள்ளத்தாக்கு ஆகும். ஒஸ்லோ உடன்படிக்கையைத் தொடர்ந்து இப் பகுதி 1993 ஆம் ஆண்டு பாலஸ்தீன

தேசிய அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், 2005ஆம் ஆண்டு வரை இஸ்ரேல் காசாவில் இருந்து அதன் குடியேற்ற வாசிகளையோ துருப்புகளையோ வாபஸ் பெறவில்லை. 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தீவிர போக்குடைய ஹமாஸ் இயக்கம் வெற்றிபெற்று காசாவில் செல்வாக்கின் உச்சிக்கு வந்ததையடுத்து பதற்ற நிலை அதிகரித்தது. இஸ்ரேலுக்குள் ஹமாஸ் இயக்கப்போராளிகள் ரொக்கெட்டுகளை ஏவ, அதற்குப் பதிலடியாக காசாவிற்குள் இஸ்ரேலியப் படைகள் அடிக்கடி குண்டுவீச்சுகளை நடத்திக்கொண்டிருந்தன. பாலஸ்தீனப் பிராந்தியத்தில் நிர்மாணிக்கப்பட்ட பலம்பொருந்திய பாதுகாப்பு வேலி காசா பிரஜைகளை உள்ளே முடக்கியது. பொருளாதாரத்தடை காசா வாழ்க்கையை பொறுத்துக் கொள்ள இயலாததாக்கியது.

2008 டிசம்பரில் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை (Operation Cast Lead) சர்வதேச ரீதியாக கடுமையான கண்டனத்திற்குள்ளானது. ஹமாஸை ஒரு பயங்கரவாத இயக்கமென்று நாமஞ் சூட்டியதன் மூலமும் அந்த இயக்கத்துக்கு ஈரானுடன் இருக்கும் ஆதரவையும் இஸ்ரேல் தனக்கு வசதியான முறையில் பயன்படுத்திக் கொண்டது. முதல் இரு நாட்களிலும் விமானத் தாக்குதல்களில் 280 பேர் கொல்லப்பட்டதாகவும் 600 பேர் காயமடைந்ததாகவும் பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்த தகவல்களின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. 2009 ஜனவரி 17 ஆம் திகதி இஸ்ரேல் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்தது. இதற்குப் பிரதிபலிப்பாக, ஹமாஸ் இயக்கமும் காசா பள்ளத்தாக்கிலிருந்து இஸ்ரேல் அதன் படைகளை விலக்கிக் கொள்வதற்கு அவகாசத்தைக் கொடுத்து ஒரு வார கால யுத்த நிறுத்தத்தை அறிவித்தது.

ஒரு நீண்ட, ஆனால் சஞ்சலமான யுத்த நிறுத்தத்திற்குப் பிறகு இஸ்ரேலியர்களின் விமானத்தாக்குதலில் ஹமாஸ் தளபதி அஹ்மட் அல்-ஜபாரி கொல்லப்பட்டதை அடுத்து கடந்த மாதம் மீண்டும் சண்டை மூண்டது. ஒரு விசித்திரம் என்னவென்றால், கைதிகள் பரிமாற்றம் உட்பட இருதரப்புக்குமிடையேயான சர்ச்சைகளில் இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் சம்பந்தப்பட்டவர் இதே அல்-ஜபாரி. அவரையே இஸ்ரேலியர்கள் இலக்கு வைத்தார்கள். இரும்பு மாடம் (Iron Dome) என்று அழைக்கப்படுகின்ற அமெரிக்காவின் ஏவுகணைப் பாதுகாப்பு முறை ஹமாஸின் ரொக்கெட்டுகளினால் இஸ்ரேலின் நகரங்களுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தை கடுமையாக மட்டுப்படுத்தியது. தற்காப்புக்காக தாக்குவதற்கான உரிமை இஸ்ரேலுக்கு இருக்கிறது என்று பராக் ஒபாமா பேசிக்கொண்டிருக்க, இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.



தற்காப்புக்காக தாக்குதலை மேற்கொள்வதற்கான உரிமை இஸ்ரேலுக்கு இருக்கிறது என்று பராக் ஒபாமா பேசிக்கொண்டிருக்க, காஸாவில் பெண்களும் சிறுவர்களும் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள்

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இருக்கும் ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்தி இஸ்ரேலைப் பாதுகாக்கும் பாரம்பரியமான அமெரிக்கக் கொள்கையை ஒபாமா தொடர்ந்து கடைப்பிடிப்பாரென்பது தெளிவானது. அத்துடன், பாலஸ்தீனர்களின்உரிமைகளைத்தொடர்ந்து நிராகரிப்பதற்கு இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் இடையறாது வழங்கிக் கொண்டிருக்கும்.


உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதில் ஒபாமா தீவிரமாக மூழ்கியிருக்கும் நிலையில், மத்திய கிழக்கு நெருக்கடிக்கு சமாதான இணக்கத்தீர்வொன்றைக் காண்பதற்கான பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதில் கவனத்தைச் செலுத்தப் போவதில்லை.

அதேவேளை, அரபுவசந்தம் தொடர்ந்தும் அரபு நாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சவூதி அரேபியாவும் கட்டாரும் செல்வாக்குமிக்க அதிகாரத்தரகர்களாக வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்ற புதிய கோலம் மேலும் சிக்கல்களை கொண்டுவந்திருக்கின்றன. எந்தவொரு புதிய இராஜதந்திர முயற்சியையும் ஆரம்பிப்பதற்கு இஸ்ரேலிய பொதுத்தேர்தலின் முடிவுகள் வெளியாகும் வரை காத்திருப்பது மாத்திரமே தற்போதுள்ள ஒரே தெரிவு என்றே தோன்றுகிறது. பாலஸ்தீனமும் இஸ்ரேலும் சமாதான சகவாழ்வு வாழக்கூடியதான இரு அரசுகள் தீர்வு இன்னமும் கூட ஒரு நீண்டகால இலக்காகவே இருக்கிறது!


## வடநாட்டு சாஸ்திரிய சங்கீதத்தை மேலைநாட்டு சங்கீதத்துடன் இணைத்த

# சித்தார் மேதை ரவி சங்கர்

## (1920 - 2012)



கே.எஸ். சிவகுமாரன்




அமெரிக்காவின் தென் லொஸ் ஏஞ்சல்சின் சான்டீகோ நகரில் கடந்த 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலமான உலகப்புகழ்பெற்ற சித்தார் மேதை ரவிசங்கரை நினைக்கும் போது எனக்கு அவரது சகோதரர் நர்த்தகர் உதே சங்கரின் ஞாபகமும் வருகிறது. இருவரும் உயர்மட்ட கலைப்பாரம்பரியத்தில் இருந்து வந்தவர்கள். ரவி தனது சித்தார் வாத்திய இசை மூலம் உலகை மயக்கினார் என்றால், உதே தனது சக நர்த்தகியுடன் இணைந்து உலகை வலம் வந்தவர்.

தனது 92ஆவது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்த மேதை ரவி சங்கர் தமது மகளை இந்த நூதன வாத்தியக் கருவியின் பரிமாணங்களை அறிந்து செயற்படவும் வகை செய்துள்ளார். வியன்னாவைச் சேர்ந்த யெஹூடி மென்ஹைனும் (Yehudi Menhein) ரவிசங்கரும் இணைந்து பல இசைச் சம்மேளனங்களை நடத்திக்காட்டிய போது உலகமே மூக்கில் விரலை வைத்து அற்புத இசைப்பெருக்கை ரசித்து உவகை கொண்டது. பின்னர் இளைய

ராஜாவும், ஏ.ஆர். ரஹ்மானும் இந்த இருவித இசை மரபு களையும் அளித்த போது கோலமயமாக்கலின் நன்மை தரும் பங்களிப்புகளாக அவை அமைந்தன.

ரவிசங்கர் தன்னளவில் இசைமேதை எனக்கொண்டால் அவர் உலகப்புகழ்பெற்ற வூட்ஸ்ரொக் (Woodstock) இசைவிழாவில் பங்கேற்று தனது வித்துவ தன்மையைக் காட்டியதும் பீற்றில்ஸுடன் (Beatles) அவர் இணைந்து கிழக்கையும் மேற்கையும் ஒரே நாக பிரம்மமாக வெளிக் காட்டியமையும் காரணங்களாகின்றன. வட இந்தியாவின் பிரபல தேசிய ஆங்கில தினசரிகளில் ஒன்றான இந்துஸ் தான் ரைம்ஸில் ரவிசங்கரை நினைந்து ரஞ்சன் தாஸ்குப்தா என்பவர் எழுதிய கட்டுரையில் காணக்கூடியதாக இருக்கும் விடயங்கள் எமது கவனத்தை பெரிதும் ஈர்ப்ப வையாக இருக்கின்றன. மரணமடைவதற்கு ஒரு மாதத் திற்கு முன்னர் ரவிசங்கரை இவர் பேட்டிகண்டிருந்தார். திரையுலகில் ரவிசங்கர் தனது இசைத்திறமைகளை வெளிக்காட்டிய மாண்புகளை ரஞ்சன் தாஸ் குப்தா வர் ணித்திருக்கிறார்.

“நீச்ச நகர்” (1946) திரைப்படமே ரவிசங்கர் இசைய மைத்த படமாகும். சித்தார் வாத்தியம், புல்லாங்குழல், ஓர் கன் ஆகிய வாத்தியங்கள் அதில் பயன்பட்டன. இந்தத் திரைப்படத்தை நெறிப்படுத்திய சேத்தன் ஆனந்த் (தேவ் ஆனந்த் என்ற மறைந்த ஹிந்தி நடிகரின் தந்தை) 1952 ஆம் ஆண்டு “ஆந்தியன்” என்ற திரைப்படத்தில் நெறிப் படுத்திய போது அலி அக்பர் கான் சரோட் வாத்தியத் தையும் பன்னலால் கோஷ் புல்லாங்குழலையும் இசைக்க ரவிசங்கர் சித்தார் இசையை வழங்கினார்.


1946 ஆம் ஆண்டில் கே.ஏ.அப்பாஸ் நெறிப்படுத்திய “தர்தி கே லால் என்ற” படத்திற்கும் ரவிசங்கர் இசைய மைத்துள்ளார். சத்யஜித் ராயின் படங்களுக்கு 1955 முதல் ரவிசங்கர் இசையமைத்ததையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். “அபராஜிதோ” என்ற ராயின் படத்தில் ரவிச ங்கர் மூன்று இசைவடிவங்களை இசைத்துக் காட்டிய போது இரண்டாவது உருப்படியை ராய் தெரிவு செய்தார். இத்தகவலை ரவிசங்கரே அந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிட் டிருந்தார். மேலை நாட்டு, கீழைத்தேய இசை வடிவங் களை நன்கு அறிந்தவர் சத்யஜித் ராய் என்று சித்தார் மேதை அந்த உலகப்புகழ் மிக்க இயக்குனரை வர்ணிக்க வும் தவறவில்லை.

அனுராதா, கொட்டான் ஆகியன ரவிசங்கர் இசைய மைத்த வேறு இரு படங்கள். லதா மங்கேஸ்காரும் மொஹ மட் ராபியும் தனது இசையமைப்பை தெய்வார்மிகமாக ஆக்கினர் என்று ரவிசங்கர் மெச்சினார்.

சித்தார் மேதையின் மனத்தாங்கலுக்குட்பட்ட சம்பவம் என்னவெனில், ரிச்சர்ட் அட்டன்பரோ நெறிப்படுத்திய காந்தி படத்திற்கு ரவிசங்கரே முழுமையாக இசைவழங்கி யிருந்த போதிலும் அதனை முன்னே அவர் ரவிசங்கரின் பங்களிப்பை பயன்படுத்தாது லண்டன் பிலார்மனிக் ஒக் கெஸ்ராவை பயன்படுத்தியிருந்தார். தன்னை அட்டன் பரோ இழிவுபடுத்தி விட்டார் என்று ரவிசங்கர் துயரப்பட்



மகிழ்ச்சியான பொழுதொன்றில் மகளுடன்



ஜோர்ஜ் ஹரிசனுடன்



மகள்மார் அனோஷ்கா, நோறா ஜோன்ஸ் ஆகியோருடன்

டார். மீராபாய், ஜெனிசிங் ஆகியன ரவிசங்கர் இசையமைத்த வேறு இரு திரைப்படங்கள்.

சலீல் சவுத்ரி, எஸ்.டி.பர்மன், மதன் மோகன், ஷங்கர் - ஜெய்ஹிசன் போன்று தாம் இல்லையென்பதையும் தமக்கு எல்லைக்கட்டுகள் இருந்தன என்பதையும் ரவிசங்கர் ஏற் றுக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இசை மேதை ரவிசங்கர் தொடர்பாக நான் கிரகித்த ஏனைய சில முக்கிய விபரங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இப்போது வாரணாசி என்றழைக்கப்படும் பெனாரசில்

ரவிசங்கர் சவுத்ரி என்ற வங்காளி பிறந்தார். இப்போது பங்களாதேஷுக்குச் சொந்தமான ஜெஸோரில் பிராமணக் குடும்பத்தில் பிறந்த ரவிக்கு 4 சகோதரர்கள். இவரே கடைசிப் பிள்ளை. ரவீந்திரநாத் தாகூரின் இலட்சியக் கருத்துகளை இவர் இளவயதிலேயே உள்வாங்கினார். ரவியின் தந்தையார் வடமொழியில் மிகவும் புலமைபெற்றவர். இந்தியாவின் வடமேற்கு பிரதேசமான ஜலவாரின் முதலமைச்சராக பதவிவகித்தவர். ரவிக்கு வேதாகமங்கள் நன்கு பரீச்சயமானவை. முதலில் நடனத்தில் ஆர்வம் காட்டிய அவர் பின்னர் அதை விட்டு வாத்திய இசையில் அக்கறை காட்டி அதில் நிபுணத்துவம் அடைந்து உலகை பரவசப்பட வைத்தார். 1930 ஆம் ஆண்டளவில் தமையனார் உதே சங்கரின் நாட்டிய குழுவில் இடம்பெற்று ரவி பாரிசில் சில சிறு நடனங்களை அளித்திருக்கிறார் என்று அறிகிறோம். பாரிசில் படிக்கும் போது பிரெஞ்சு மொழியிலும் அவர் பேச் கற்றுக்கொண்டார்.

ஹிப்பிகள் என்று 1960களில் அறிமுகமான மேல்நாட்டு விரக்தியடைந்த இளம் கலைஞர்களுடன் பச்சாதாபம் கொண்டவராக ரவிசங்கர் இருந்தபோதிலும் உண்மையிலேயே அவர்களின் நடைமுறை வாழ்க்கைக் கோலங்களை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்று மிக் பிரவுன் என்பவர் டெய்லி ரெலிகிராப் பத்திரிகையில் கட்டுரை ஒன்று வரைந்திருக்கிறார். It‘s a hard day‘s night for…. என்ற பிரபலமான பாடலை மேல்நாட்டில் அறிமுகப்படுத்திய பீற்றில்ஸ் இசைக்குழுவினர் மேல்நாட்டு ஜனரஞ்சக இசை மரபில் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணி உலகத்தை தம் இசை மூலம் வசப்படுத்தியதை நீங்கள் அறிவீர்கள். அந்தக் குழுவைச் சேர்ந்த ஜோர்ஜ் ஹரிசன் 1971 ஆம் ஆண்டு ஒரு இசைக்கச்சேரியை ஏற்பாடு செய்திருந்தார். அந்த இசை விழாவில் ரவிசங்கர் தனது சித்தார் வாத்திய இன்னிசையை வழங்கி யாவரையும் கிறங்கச் செய்தார். ஜோர்ஜ் ஹரிசன் ரவிசங்கரின் சிஷ்யரானார். றொக் இசையில் சித்தார் வாத்திய இசையின் இராகங்களும் இடம்பெறத் தொடங்கின.

இருந்த போதிலும் தெய்வீகத்தன்மை வாய்ந்த தனது இசை மரபில், புனிதத்தை மறந்து மலினப்படுத்தியதைக் கண்டு ரவிசங்கர் மனம் வெதும்பி ஹிப்பி உலகத்தினின்றும் விடுபட்டுக்கொண்டார்.

ரவிசங்கரின் தந்தையார் ரவி பிறந்ததும் குடும்பத்தை மறந்து மேலை நாகரீகத்தில் மயங்கி, ஆங்கிலேய மாதர்களுடன் கூடிக் குலாவியதை அறிந்துள்ள போதிலும் அவரும் தந்தை வழியிலே மேல்நாட்டில் சில காலம் சஞ்சரித்தார். பின்னர் இந்தியா திரும்பியதும் அலாவுதீன் கான் என்ற குழுவிடம் சித்தார் வாத்தியத்தை இசைக்க கற்றுக்கொண்டார். பின்னர் நடந்ததெல்லாம் அண்மைக்கால சரித்திரம். உலகப் புகழ்பெற்ற சித்தார் வாத்திய இசை ஞானியாக அவர் திகழத் தொடங்கினார்.

The Living Room Session பகுதி 1 என்ற இசைக் கோவைக்கு 2012 ஆம் ஆண்டில் தலைசிறந்த உலக சங்கீத அல்பத்திற்கான விருதுக்கு ரவிசங்கர் விதந்துரைக்

## மேதையும் அவரின் பெண்களும்

ரவிசங்கர் தனது வாழ்வில் வெகு ஆரம்பத்தில் இருந்தே சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள் கடைப்பிடிக்கிற நடத்தைகளைப் பின்பற்றுகிற சுபாவத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனால் அவர் பெண்களினால் பெரிதும் விரும்பப்பட்டார் என்றும் சொல்லலாம்.

அவர் இதயத்தால் ஒரு நாடோடி, தனது வாழ்நாளின் மிகவும் பிந்திய இறுதிவரை இசையினாலேயே மன ஆறுதலை அடைந்தார். ரவிசங்கர் தனது குருவான அலாவுதீன் கானின் மகள் அன்னபூர்ணாதேவியை மிகவும் இளவயதிலேயே திருமணம் செய்தார். அன்னபூர்ணாவுக்கும் அவருக்கும் இருபிள்ளைகள் பிறந்தனர். தம்பதியர் இசையில் ஒரேமாதிரியான பேரார்வத்தைக் கொண்டவர்களாக இருந்தபோதிலும், அவர்களுக்கிடையிலான தாம்பத்திய வாழ்வு வெற்றிகரமானதாக, (திருப்திகரமானதாக என்றே சொல்ல வேண்டும்) அமைய முடியவில்லை. ரவிசங்கரைவிடவும் அன்னபூர்ணாதேவி இசைத்துறையில் ஆற்றல்மிகுந்தவர் என்று கூட சிலர் கூறுகிறார்கள். 1940களின் பிற்பகுதியிலேயே இருவருக்குமிடையேயான மணவாழ்க்கையில் வெடிப்புகள் தோன்ற ஆரம்பித்த போதிலும், உத்தியோகபூர்வமாக அவர்கள் 1960களின் முற்பகுதியிலேயே பிரிந்தார்கள்.




அன்னபூர்ணாதேவியுடன்

கப்பட்டார். அந்த அறிவிப்புக் கிடைத்த 6 ஆம் நாள் இந்த மேதை உயிரிழந்தார். இந்த Grammy Award அவரின் திறமையை உலகிற்கு மேலும் பிரசித்தமாக்கியுள்ளது. இதற்கு முன்னரும் இவருக்கு கிரமி விருது கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. மொத்தமாக மூன்று தடவைகள் இந்த விருது ரவிசங்கரைத் தேடி வந்தது. அவர் 1969 ஆம் ஆண்டு தனது சுயசரிதையை My Music, My Life என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

அலாவுதீன் கானிடம் 7 வருடங்கள் கடுமையான பயிற்சியை மேற்கொண்ட ரவிசங்கர் 1941ஆம் ஆண்டு தனது குருவின் மகளான அன்னபூர்ணா தேவியை மணந்துகொண்டார். இவர்களுக்கு சுபேந்திரா என்றொரு மகன். அவர் 20 வருடங்களுக்கு முன்னர் காலமானார்.

ரவிசங்கரின் முதலாவது இசைக்கச்சேரி 1939 ஆம் ஆண்டு இடம்பெற்றதாக அறிகிறோம். அகில இந்திய வானொலி நிலையத்தின் முதலாவது தேசிய வாத்தியக் குழுவின் தலைவராகவும் அவர் செயற்பட்டிருக்கிறார். கடந்த 11 ஆம் திகதி அமெரிக்காவில் இருதய நோய் இந்த மேதையை உலகிடமிருந்து பிரித்தெடுத்துச் சென்று விட்டது.



இறுதிக் காலத்தோற்றம்



சியூ ஜோன்ஸ்

இருவருக்கும் சுபேந்திரா என்ற மகன் 1942ஆம் ஆண்டு பிறந்தார். வளர்ந்த பிறகு சுபேந்திரா தந்தையுடன் சேர்ந்து சித்தார் வாசித்தார். 1992இல் அவர் அமெரிக்காவில் சுகவீனத்தால் இறந்து போனார்.

சஞ்சலமான தனது முதலாவது மணவாழ்க்கையின் போது ரவிசங்கர் கமலா சாஸ்திரி என்ற நர்த்தகியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். சங்கரின் வாழ்வில் கமலா மிகப்பெரிய செல்வாக்கைச் செலுத்தினார் என்று கூறப்படுகிறது. ஆனால், ஜிப்சிகள் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற நாடோடிகளைப் போன்று ரவிசங்கர் உண்மையில் ஒரு பெண்ணுடன் நெருங்கிய ஈடுபாட்டுடன் இருந்ததில்லை. மனதை அலையவிட்டார். பெண்கள் மீதான தனது இந்தப் பாசத்தைப் பற்றி அவர் அசௌகரியப்படவேயில்லை. 'ராக மாலா' என்ற தலைப்பிலான தனது சுயசரிதையில் அவர் 'வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெண்களுடன் நேசமாக என்னால் இருக்க முடியுமென்று உணருகிறேன். ஒவ்வொரு பட்டினத்திலும் ஒவ்வொரு பெண்ணை வைத்திருப்பது போன்றது இது. சிலவேளைகளில் ஒரே பட்டினத்திலேயே ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை வைத்திருப்பது போன்றது என்றும் கூடக் கூறலாம்' என்று எழுதியிருக்கிறார்.

ரவிசங்கரும் கமலாவும் 'கணவனும் மனைவியும்' போல 1981 வரை கூடி வாழ்ந்த அதேவேளை, அவருக்கு வேறு இரு பெண்களுடனும் தொடர்பிருந்தது. அவ்விரு பெண்களுடனுமான உறவின் மூலமாக ரவிசங்கருக்கு இரு பெண் பிள்ளைகள் பிறந்தார்கள்.

நியூயோர்க்கில் ரவிசங்கர் தனது இசை நிகழ்ச்சித் தயா

ரிப்பாளரான சியூ ஜோன்ஸுடன் வாழ்ந்து வந்தார். இருவருக்கும் நோறா என்ற பெண்பிள்ளை 1979 ஆம் ஆண்டில் பிறந்தது.

அதேவேளை, மிகவும் இளவயதுப் பெண்ணான சுகன்யா ராஜனை 1972 ஆம் ஆண்டில் ரவிசங்கர் சந்தித்தார். சுகன்யா இந்த சித்தார் மேதையின் இசை நிகழ்ச்சிகளில் தம்புரா இசைக் கருவியை வாசித்துவந்தவர். இருவருக்கும் வேறு மணவாழ்க்கைகள் இருந்தபோதிலும், (சுகன்யா ஏற்கனவே திருமணமானவர், ரவிசங்கர் கமலா சாஸ்திரியுடனும் சியூ ஜோன்ஸுடனும் வாழ்ந்துவந்தவர்) 1978 ஆம் ஆண்டில் அவர்கள் ஒன்றாக வாழ ஆரம்பித்தனர். இருவருக்கும் 1981 ஆம் ஆண்டு அனோஷ்கா என்ற பெண்பிள்ளை பிறந்தது.

சுகன்யாவும் ரவிசங்கரும் ஒன்றாக வாழ்ந்துவந்தபோதிலும், அனோஷ்காவுக்கு எட்டு வயதாகும் வரை திருமணபந்தத்தில் பிரவேசிக்கவில்லை. இரு பெண்களுடன் அவர் சேர்ந்து வாழ்ந்த போதிலும் கூட, ரவிசங்கரை திருமணம் செய்ய வேண்டுமென்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். ஆனால், சங்கர் அதில் உறுதிப்பான ஒரு நிலைப்பாட்டைக் காட்டக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

‘அவருக்கு அப்போது 58 வயது. தன்னை மாற்றிக்கொள்ள முடியவில்லை என்று அவர் கூறினார். அவர் மீது கூடுதலான அளவுக்கு காதல் கொண்டிருக்கிறேன் என்பதை நான் புரிந்துகொண்டேன். ஒருவருடத்தில் ஒரு சில நாட்களாவது அவர் என்னுடன் இருந்தால் கூட, எனக்கு மனநிறைவு கிடைக்கும் என்றே நான் நினைத்துக்கொண்டேன். அவருடன் எனக்குக் கிடைக்கக்கூடிய ஒரு சில தினங்களை நினைத்துக் கொண்டே ஒருவருடத்தை ஓட்டிவிடக்கூடிய அனுபவம் எனக்குக் கிடைக்கும்’ என்று சுகன்யா ரைம்ஸ் ஒஃவ் இந்தியாவுக்கு அளித்த பேட்டியில் ஒரு தடவை கூறியிருந்தார்.

சுகன்யாவைத் திருமணம் செய்வதற்கு ரவிசங்கர் தீர்மானித்தபோது அவருடனான உறவுகளைத் துண்டித்துக்கொள்ள சியூ ஜோன்ஸ் தீர்மானித்தார். நோறாவை சங்கர் சந்திப்பதற்கும் சியூ தடைவிதித்தார். இந்த வேளையில் கமலாசாஸ்திரிக்கும் ரவிசங்கருக்கும் இடையிலான இரு தசாப்தகால உறவும் ஒரு முடிவுக்கு வந்தது. 1989 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் சுகன்யாவும் ரவிசங்கரும் திருமணம் செய்து கொண்டனர். பல வருடங்களுக்குப் பிறகு இருவரும் தாங்கள் திருமணம் செய்த ஆலயத்துக்கு வந்து தங்களை ஆசீர்வதித்து தம்பதிகளாக்கிய மதகுருவைச் சந்தித்தனர். இதுதொடர்பான படங்களும் ரவிசங்கரின் மரணத்தையடுத்து ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திருமணமே பல வருடங்களாக சித்தார் மேதை ஏங்கிக் கொண்டிருந்த மனநிலை உறுதியைக் கொடுத்தது எனலாம்.

“ரவிசங்கருக்கு உண்மையான குடும்ப வாழ்க்கை ஒருபோதும் கிடைக்கவில்லை. மிகுந்த இள வயதிலேயே அவர் முதல் திருமணத்தைச் செய்துகொண்டார். மணவாழ்க்கையில் குழப்பம் ஏற்பட்டு, மன அமைதி குலைந்தபோது அவர் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளத் தொடங்கினார். அவர் ஒரு நாடோடி, கமலாமாமி இருந்தார்தான். ஆனால், அவரும் கூட இவருக்கு கூடுதல் சுதந்திரத்தை அளித்துவிட்டார். இவர் ஒருபோதுமே பெற்றிராத இல்லறத்தை கொடுக்க நான் விரும்பினேன்” என்று சுகன்யா கூறியிருந்தார்.



சுகன்யாவும் ரவிசங்கரும்

சுகன்யாவிடமிருந்து இந்த இசை மேதை இல்லறத்தை, மன உறுதிப்பாட்டை, மகிழ்ச்சியைப் பெற்றார். அவருடைய குறைபாடுகளுக்கெல்லாம் காதல் மீதே சுகன்யா குற்றஞ்சாட்டுகிறார். ரவிசங்கரின் குறைபாடுகளை சுகன்யா ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, அவருடன் கூட வந்தவர்களையும் அரவணைத்தார். கமலா சாஸ்திரிக்கும் சுகன்யாவுக்கும் இடையே அருமையான பிணைப்பு இருந்தது. சுகன்யாவைத் திருமணம் செய்தது வாழ்க்கையில் எடுத்த மிகச் சிறந்த முடிவு என்று ரவிசங்கருக்கே நேரடியாக கமலா சாஸ்திரி ஒரு தடவை கூறியிருந்தார்.

ரவிசங்கரின் இசை பல சந்ததிகளுக்கு மன அமைதியைக் கொடுத்தது. ஆனால், அவருடைய வாழ்க்கையில் பல்வேறு பெண்மணிகளுடன் கொண்டிருந்த உறவுகள் அவருக்கு அதே மன அமைதியைக் கொடுக்கவில்லை. அவரது வாழ்வு அமளிகள் நிறைந்ததாக, மன முறிவுகளைக் கொண்டதாக, கசப்பான நினைவுகளைக் கொண்டதாக விளங்கியது. இருந்தும் கூட, பெண்கள் ரவிசங்கரை, நேசித்துப் பேணிக்காக்க, நேசிக்கப்படுபவராக அவரை என்றென்றும் உணர வைக்க விரும்பினார்கள். ஏனென்றால், அவர் அத்தகைய ஒரு மனிதர்.

- குமார்

# நீர்ப்பறவை

## பேசிய அரசியலும் பேசாமல் விட்ட அரசியலும்



திரை விமர்சனம்

சமகால தமிழர்களின் அன்றாட வாழ்வில் சினிமாவைப் போல் பிரிக்க முடியாத இன்னொன்றைக் கூறமுடியாது. அனைத்துத் தரப் பாலும் விரும்பிப் பார்க்கப்படுவதா கவே இந்தத் தருணம் வரை சினிமா உள்ளது. சினிமாவைப் பார்ப்பதில் தமிழர்களிடையே பால் பேதமோ (ஆண், பெண்) வர்க்க வேறுபாடோ (ஏழை, பணக்காரன்) வயது வேறு பாடோ (பெரியவர், சிறியவர்) என முக்கிய வினைகளை ஆற்றுவதாகத் தெரியவில்லை. நகரம் - கிராமம், உள்நாடு - வெளிநாடு என்ற வாழிட வெளிப்பிளவுகளையும் தாண்டி சினி மாவைப் பார்ப்பதில் ஏராளமான ஒற் றுமைகள் நம்மிடையே காணப்படு கின்றன. இங்கு வேறுபாடுகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

ஆனால், தொடர்ந்து தமிழ் சினிமா வைப் பார்த்து வருபவர்கள் எப் போதும் ஒருவித மனநெருக்கடிக்கு உள்ளாவதையும் மறுப்பதற்கில்லை. தமிழர் வாழ்புலத்தில் உயிர்ப்பான அனைத்துப் பரிமாணங்களும் பன் முக வெளிப்பாட்டில் தனித்துவ அடையாளம், வித்தியாசங்கள் மற் றும் எதார்த்தம் தமிழ் சினிமாவில் காட்டப்படுவது, காட்சிப்படுத்தப்படு வது அரிதாகவே உள்ளது. தமிழர் வாழ்வியலிலிருந்து அந்நியப்பட்ட கதைக்களமும் பாத்திரங்களின் ஆக் கிரமிப்பும் அந்நிய பண்பாட்டு மய மாக்கலும் தமிழ்ப் படங்களாக வந்து குவிகின்றன. தமிழ்ச் சூழலின் கேளிக்கை என்ற அளவைத் தாண்டி இன்னும் சினிமா புரிந்துகொள்ளப்ப டவில்லை. இன்றைய தீவிர சினிமா வின் இலக்கு வாழ்வைக் காட்சி நிலையில் அப்படியே பிரதிபலிப்பது மட்டுமல்ல, மாறாக வாழ்வின் முக் கிய பிரச்சினையாகக் கருதும் ஒன்றை நுணுகி ஆராய்வதும் அவதானித்து வெளிப்படுத்துவதும் முக்கியம். இந் தப் பண்புடன் கூடிய தமிழ்ப் படங் கள் தற்போது வெளிவரத் தொடங்கி யுள்ளன.

ஆனால், இவற்றைக் கண்டு கொள்ளக்கூடிய பார்வைவெளி இன் னும் விரிவாக்கம் பெறவில்லை. இந் தப் பின்னணியில்தான் தமிழில் அதிகம் கண்டுகொள்ள முடியாத படங்கள் மீது நமது கவனத்தைக் குவிப்பது முக்கியம். அந்த ரீதியில் தற்போது வெளிவந்துள்ள நீர்ப் பறவை எனும் படம் பார்க்க வேண் டிய படம். இதனை சீனு ராமசாமி இயக்கியுள்ளார். இவர் இதுவரை தமி ழில் கூடல்நகர், தென்மேற்குப் பருவக்காற்று முதலான படங்களை இயக்கியுள்ளார். தென்மேற்குப் பருவக்காற்று பலரது கவனத்தைப் பெற்ற படம் மட்டுமல்ல, தேசிய விருதுகளும் கிடைத்த படம். தற்போ தைய நீர்ப்பறவை கடலோர கிறிஸ் தவ நிலம் ஒன்றில் மையங் கொண் டுள் ளது. துப்பாக்கி இரத்தமில்லாமல் இலங்கை கடற்படையின் அட்டூழி யத்தை, வன்முறையை காதலோடு சமூக மனித உறவுகள் சார்ந்தும் கன வுகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கை கள், வலிகள், இழப்புகள் யாவற்றை யும் கூட்டுமைப்படுத்திய எதார்த்த கதைக்களமாக காட்சிப்படுத்தப்பட் டுள்ளது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவில் நந்திதாதாஸ் முதன் மைப் பாத்திரத்தில் தோன்றியுள்ளார். இவர் தன் கணவரின் வாழ்க்கையை கதை சொல்லலை பின்நோக்கிய நகர் வாகத் தொடங்குகிறார். வீட்டிற்கு வரும் நந்திதாதாஸின் மகன் வீட்டை விற்க அனுமதி கேட்கிறான். இது எனது கணவர் வாழ்ந்த வீடு என்றும் 25 வருடங்களுக்கு முன்பு கடலுக் குச் சென்ற கணவர் மீண்டும் திரும்பி வருவான் எனக் கூறி வீடு விற்பதற்கு உடன்பட மறுக்கிறாள். அன்று இரவு தன் வீட்டு பின்தோட்டத்தில் குறிப் பிட்ட இடத்தில் சமாதியில் பாடும் பாடலை நந்திதாதாஸ் பாடுகிறாள்.

இதைப் பார்த்த மகன் மறுநாள் காலை அந்த இடத்தைத் தோண்டுகிறான். அங்கு எலும்புக் கூடுகள் கிடைக்க இது தன் தந்தைதான் என உறுதி செய்கிறான் மகன். தனது தாயை பொலிஸில் காட்டிக் கொடுக்கின்றான். பின் பொலிஸ் விசாரணையில் தன் கணவனை தானே கொலை செய்து வீட்டிற்குப் பின்புறம் புதைத்ததாக கூறுகிறாள். ஆனால் பொலிஸ் விசாரனை தொடர்கிறது. இங்கு நந்திதாதாஸ் பின்நோக்கிய நகர்வாக கதை சொல்லத் தொடங்குகிறாள்.



நீர்ப்பறவை கதை ஒரு மீனவ நிலத்தில் நிகழ்கிறது. கடலில் அகதியாய் வந்து பிள்ளைகளற்ற பெற்றோராய் (சரண்யா, ஸ்ரீராம்) தத்தெடுத்து வளர்க்கும் செல்ல மகனாக அருளப்பசாமி (விஷ்ணு) கதைநாயகனாக கதைக்களமாக பரிணாமம் பெறுகிறான். ஈழத்தின் கிளிநொச்சியிலிருந்து தமிழ்நாட்டிற்கு அகதியாக தப்பிச்செல்லும் குடும்பம் நடுக்கடலில் கடற்படையினரால் வள்ளத்துக்குள் வைத்து பெற்றோர்கள் சுடப்பட்டு கிடக்க சிறுவனொருவன் அழுது கொண்டிருக்கிறான். இந்தக் காட்சியின் பின்னர் ஏற்படக்கூடிய வளர்ச்சிகளும் தர்க்கங்களும்தான் நீர்ப்பறவை படத்தில் எங்கும் துப்பாக்கிச் சுடும் வன்முறைக் காட்சிகளையோ அல்லது இராணுவத்தின் அதிகார மமதையையோ காட்சிப்படுத்தாமல் மனத்திரை எழுப்பும் உணர்வுகளில் சுழல் சிந்தனைப் படிவங்களின் காட்சிகளில் விரிவுக்கான தயார் நிலை உருவாக்கப்படுவது இப்பட இயக்குனரின் திறமைக்கு எடுத்துக்காட்டு.



அருளப்பசாமியின் அறிமுகம் வெகு இயல்பாக அமைகிறது. பொறுப்பற்று குடிபோதையின் கோரப்பிடியில் அறிமுகமாகின்றான். யாரையாவது ஏமாற்றி ஏதேனும் ஒரு கதை சொல்லி குடிப்பதற்கான பணத்தைப் பறித்துக்கொண்டு செல்லக் கூடிய இளைஞன் அருளப்பசாமி. பெரும் குடிகாரனாகத் திரியும் அருளப்பசாமி குடிக்கு அடிமையாகி கை,கால் நடுங்கும் நேரத்தில் பலரிடம் கடன் வாங்கியும் குடிக்க ஆரம்பிக்கின்றான். இந்தச் சமயத்திலே கிறிஸ்தவ ஊழியப் பெண்ணாக வரும் எஸ்தரை (சுனைனா) சந்திக்கிறான். தன் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று பணம் வாங்கியும் குடிக்கிறான். பின்னர் அருளப்பசாமி பயங்கரமான குடிகாரன் என்பதை எஸ்தர் அறிகிறாள். குடியை மறக்க முடியாமல் சிக்கித்தவிக்கும் அருளப்பசாமியை மதுபோதையிலிருந்து விடுவிக்கும் மறுவாழ்வு நிலையத்தில் சேர்க்கின்றனர். அங்கிருந்து தப்பித்து வரும் அருளப்பசாமி தேவாலய விழாவை முடித்துவிட்டு அனைவரும் படுத்துறங்கும் வேளையில் குடிபோதையில் வந்த அருளப்பசாமி எஸ்தர் அருகில் படுத்துத் தூங்குகிறான். மறுநாள் காலையில் அவனுக்கு அடி உதை விழுகிறது. இந்தச் சம்பவத்தால் மிகவும் அசிங்கப்பட்ட அருளப்பசாமி மீண்டும் மறுவாழ்வு மையத்தில் சேர்ந்து குடியை மறந்து புது மனிதனாக வெளிவருகிறான். குடிக்கெதிரான பிரசாரமும் செய்கி

றான். எஸ்தரை காதலிக்கவும் ஆரம் பிக்கிறான்.

இந்தச் சமயத்தில் வேலையில்லாத வெட்டிப் பயலுக்கு தமது மகளை எப்படி கொடுப்பது என்று எஸ்தரின் வளர்ப்புத் தாயார் கேள்வி கேட்கிறாள். இதனால் எங்கேயும் வேலை செய்ய வேண்டுமென்பதற்காக வேலை தேடி அலைகிறான். இவனுக்கு யாரும் வேலை கொடுப்பதாக இல்லை. மீனவ சமூகத்தில் பிறந்து வெளியில் தொழிலாளியாக வேலை செய்வதை விட கடலில் நீதான் முதலாளி என்று எஸ்தர் சொல்லும் யோசனை அருளப்பசாமிக்கு சரியெனப் படுகிறது. ஆனால் ஊரிலொரு கும்பல் மீனவ சாமி அல்லாதவர்கள் கடலில் மீன்பிடிக்க முடியாது எனக் கூறி விரட்டுகின்றனர். இந்தப் பிரச்சினை தேவாலய சபைக்குச் செல்ல அங்கு அருளப்பசாமிக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்கின்றது. இருப்பினும் ஒரு கூட்டம் யாரும் வேலைக்கு அருளப் பசாமியை சேர்க்க மாட்டோம் எனத் தெரிவிக்கின்றனர். அப்போது இவன் தான் சொந்தப் படகு வாங்கி மீன் பிடிப்பேன் என சபதம் இடுகிறான். இந்தப் படகை வாங்க உப்பளத்திற்கும்போய் வேலை செய்கிறான். அங்கே எதிர்பாராத நல்ல உறவுகள் கிடைக்கின்றன. அவனது இயல்புத் தன்மையை, நேர்மையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால் உதவிகளும் அவனுக்குக் கிடைக்கின்றன.

இயக்குனர் சமுத்திரக்கனி முஸ்லிம் நபராக படகு தயாரித்து வழங்குபவராக வருகிறார். முன்பணம் பெற்றுக்கொண்டு தவணை அடிப்படையில் படகொன்றை கட்டிக்கொடுக்கின்றார். படகு தயாரானதும் எஸ்தரையும் திருமணம் செய்துகொள்கிறான். அதன் பின் அருளப்பசாமியின் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளும் மாற்றங்களும் கடலுக்குச் சென்று தொழில் செய்வதும் என அடுத்தடுத்து காட்சிகள் மிக அழகாக வெளிப் படுகின்றன. இந்தச் சமயத்தில் ஒரு நாள் கடலுக்குச் சென்ற அருளப்பசாமி இரண்டு நாட்களாயும் கரை



திரும்பவில்லை. குடும்பமே பதற்றத்தில் இருக்கும் அந்நேரத்தில் தந்தை தனது மகனைத் தேடி கடலுக்குச் செல்கின்றார். அங்கே படகில் துப்பாக்கி வேட்டுக்கு இரையாகி அருளப்பசாமி இறந்து கிடக்கின்றான். தந்தை அவனைத் தூக்கிக் கொண்டு கரை சேர்கிறார்.

இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை பார்வையாளர்கள் ஊகிக்கும் வகையில் இது காட்சியாக்கப்பட்டுள்ளது. எந்தப் புள்ளியில் கதை தொடங்கியதோ அதே புள்ளியில் கதை வேறு பரிமாணம் எடுக்கிறது. கதை சொல்லலும் காட்சிப்படுத்தலும் கடல் நிலம் சார்ந்த வாழ்வியல் கூறுகளில் உயிர்ப்புத் தளமாக மையங் கொண்டிருப்பது இப்படத்தின் சிறப்பு எனலாம். வீட்டோடு இருந்த பையனை வீட்டிலே புதைத்து விடுவோம். பொலிஸுக்கு தெரிந்தால் நியாயங்கிடைக்கிறதோ, இல்லையோ உடம்பைக் குத்திக் கிழித்து போஸ்மாடம் பண்ணி நாசம் செய்து விடுவார்கள் என எஸ்தரும் பெற்றோரும் புலம்பி அழுகின்றனர். இந்தக் காட்சி ஒருகணம் பார்வையாளர்களை நிமிர வைக்கிறது. இந்தக் கதையை எஸ்தர் மூலம் சின்ன வயது சுனைனா பெரிய வயது நந்திதாதாஸ் மூலம் இயல்பாக சொல்லப்படுகிறது. இந்தப் பின்னோக்கிய உத்திக்கேற்ப காட்சிப்படுத்தல்கள், பின்னணி இசை, படத்தொகுப்பு யாவும் மிகப் பொருந்தி உள்ளன. நடிகர்களின் தேர்வும் கதைக்களமும் ஒளிப்பதிவும் பாராட்டும் வகையிலேயே உள்ளன.

நாம் தினமும் இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை சுட்டுக்கொல்வதும் அவர்களை வலுக் கட்டாயமாக சிறையில் அடைப்பதும் நமக்குச் செய்திகளாகத் தொடர்கின்றன. ஆனால், தமிழகக் கிராமப் பகுதிகளில் இது ஏற்படுத்தும் உணர்வலைகள், கொந்தளிப்புகள் யாவும் வெளிச்சத்திற்கு வருவதாக இல்லை. தமிழகம், ஈழம் சார்ந்து வெளிப்படக் கூடிய தமிழர் வாழ்வியலில் கண்டுணரும் நெருக்கடிகள், இழப்புகள் வாழ்வியலில் எவ்வாறு கரைந்து நிமிர்ந்து புதிய வாழ்வியல் தெரிவிற்கான களங்களைத் திறந்துவிடுகின்றன என்பது பற்றிய தேடல் முக்கியம். நீர்ப்பறவை நம் ஒவ்வொருவருக்குள்ளும் சுழல் பார்வைக்கான வாழ்வியலுக்கான ஒரு மாதிரிக் கூறாகவும் படைக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் பேசிய அரசியலும் சரி பேசாமல்விட்ட அரசியலும் சரி இந்திய - இலங்கை மைய நீரோட்ட அரசியலில் தாக்கம் செலுத்தும் என்பதை மறுக்கமுடியாது.

- மது

பனுவல் பார்வை

## டேவிட் ஹார்வியின்

# ‘மார்க்ஸின் மூலதனத்திற்கு ஒரு வழிகாட்டி’



ந.இரவீந்திரன்

இந்த மூன்றாம் ஆயிரமாவது ஆண்டுகளுக்கான (புதிய மிலேனியத்)தொடக்கத்தில் லண்டனில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பு பலருக்கும் அதிர்ச்சி தருகிற முடிவை வெளிப்படுத்தியிருந்தது. கடந்த இரண்டாவது மிலேனியத்தில் முதன்மைக் கவனிப்புக்குரிய ஆளு மை யார் என்பதுதான் கேள்வி. இன்றைய அறிவியல் - தொடர்பாடல் யுகத்தின் மயக்கத்திலுள்ள புதிய தலைமுறையினர், அதற்கான முன் னோடிகளான ஐன்ஸ்டீனையோ, நியூட்டனையோ முதல்நிலையில் தெரிவு செய்வர் எனும் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி, அவர்களை இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குப் பெயர்த்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டவர் கார்ல் மார்க்ஸ். மார்க்சியம் காலாவதியான - முடிந்துபோன கதை என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கு இந்தக் கணிப்பு முடிவு அதிர்ச்சியைத் தராதிருந்திருக்க முடியாது.

பொது முடிவு மட்டுமன்றி நவ தாராளவாதப் பொருளாதாரம் எண்பதுகளில் சாதனைகளைத் தருவதாகக் கொக்கரித்தமை பொய்த்துப்போனமையால் பொருளியல் மேதைகள் மீட்சிக்காகத் தவிர்க்கவியலாது. மார்க்சின் மூலதனம் தொகுதிகளைப் புரட்டிப்பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டமையும் பேரதிர்ச்சியாய் அமைந்தது. நூற்றைம்பது வருடங்களுக்கு முன் தாராளவாதப் பொருளாதார முன்னெடுப்பை ஆய்வுக்குட்படுத்திய மார்க்ஸ், அப்போது முதலாளியப் பொருளியலாளர்கள் காணமுடியாதிருந்த - வரவுள்ள நெருக்கடிகளை முன்னறிந்து கூறியிருந்தார். அவற்றைக் கொண்டு இன்றைய நெருக்கடிக்குத் தீர்வைத்தேட முதலாளித்துவச் சிந்தனையாளர்களுக்கு வாய்ப்புள்ளமை பாட்டாளிவர்க்கச் சிந்தனையாளர்களுக்கு வியப்பளிக்கும் சமாசாரம்; மார்க்சியச் சிந்தனை முறைமையை வாலாயமாக்குவதை விட்டு, வசனங்களில் முடங்கிய பாட்டாளி வர்க்கச் சிந்தனையாளர்கள் தவறைத் திருத்திக் கொண்டு மூலதனத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்த முனைப்படைந்து வருகின்றனர்.




மார்க்ஸைப் பொதுவாகவும், குறிப்பாக ‘மூலதனம்’ நூலையும் கற்கும் ஆவல் இன்று அதிகரித்து வருகிறது. எவ்வகையில் அதனை வாசிப்புக்குள்ளாக்க வேண்டும் எனும் வழிகாட்டி நூல் ஒன்று பாரதி புத்தகாலயத்தால் தமிழாக்கித் தரப்பட்டுள்ளது. ‘மூலதனம்’ கற்கும் பல்துறைசார் ஆர்வலர்களுக்கு முப்பது வருடங்களுக்கு மேல் கற்பித்த அனுபவத்துடன் இந்நூலை எழுதியுள்ளார் டேவிட் ஹார்வி. தொழி

லாளர்கள் முதல் ஆய்வு மாணவர்கள் வரையானவர்களுக்கு கற்பிப்ப தில் இருந்த வேறுபட்ட அனுபவங்களை அவர் பதிந்துள்ளமையும் எமது வாசிப்பு விசாலிப்புக்கு உதவுவதாக அமைந்துள்ளது. நேரடியாக மூலதனத்தைப் படிக்கும்போது வேகமாக முன்னேறுவதில் சிரமம் இருந்தது. மூன்று தொகுதிகள் ஐந்து நூல்களாயுள்ளன; ஒவ்வொன்றுமே ஏறத்தாள 500 பக்கங்களை எட்டுவதாக உள்ளது மட்டுமன்றி, அதன் தர்க்க முறைமை சுற்றி வருவதுபோல அமைவதால் வாசிப்புச் சிரமம் தவிர்க்க இயலாதது. வேறு படைப்புகளில் அறிந்த முடிவுகளைக்கூட இங்கு ஏன் இத்தனை வலுவான தர்க்க மோதலில் தர வேண்டும் என்பதுபோல இருக்கும். அதற்கான அடிப்படை அவசியத்தை டேவிட் ஹார்வி இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நூலின் கட்டமைப்புக்கூட மார்க்ஸ் எந்த ஒழுங்கில் தர்க்கத்தை வளர்த்துச் சென்றாரோ அதே போக்கிலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளமை இதனை அழுத்தி வலியுறுத்த விரும்பும் அவர் கருத்தை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது. வெளித் தோற்றத்தில் உண்மைகளாகத் தோற்றமளிப்பன ஆழ்ந்து கீழிறங்கி ஆய்வுக்குள்ளாக்கும் போது வெறும் மாயை என வெளிப்பட்டு, எது உண்மையோ அதைக் கண்டறிய வழிப்படுத்தும். இவ்வாறு கீழிறங்கி ஆய்வை மேற்கொண்டு அதுவரை அறியப்படாத அடிப்படையைக் கண்டு காட்டிய மார்க்ஸ், மேலேறும் ஆய்வுப் போக்கில் மீண்டும் கண்ணால் காணும் உலகின் மாயை களைந்து தெளிவுபெற வாய்ப்பை முழுமைப் படுத்துவார் (ப.21). தொகுதி ஒன்றை முழுதாக மார்க்ஸ் எழுதி முடித்திருந்தார். இரண்டாவது எழுதும்போதே மரணம் முந்திக்கொண்டபோதிலும், மூன்று தொகுதிகளுக்குமான பூரண தயாரிப்புக் குறிப்புகளோடேயே அவர் இருந்தமையால், அவற்றின் உதவியோடு அப்பணியின் எழுத்துருவத்தை ஏங்கெல்ஸ் நிறைவு செய்தார். 'குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' நூலுக்கான தயாரிப்பும் மார்க்ஸினால் தொடங்கப்பட்ட போதிலும், அதனைப் பயன்படுத்தி நிறைவு செய்த ஏங்கெல்ஸ், அதற்கான அதிக வேலை தன்னுடையதாக அமைந்ததால் தனது பெயரில் வெளியிட்டவர்; மூலதனத்தைப் பூரணப்படுத்துவதில் தனது முயற்சி மிகக் குறைவு எனக்கூறி முழுதாக மார்க்ஸுக்குரியது எனக் காட்டியிருந்தார். ஆக, முதல் தொகுதியை எழுதும்போதே மூன்றாம் தொகுதியில் இறுதியாய் எதை முன்வைக்கப்போகிறோம் என்ற புரிதலோடு தனது தர்க்கத்தை வளர்த்துச் சென்றுள்ளார் கார்ல் மார்க்ஸ் என்பது கவனிப்புக்குரியது.

அதனை மனங்கொள்ளும் டேவிட் ஹார்வி நூல் கட்டமைப்பு குறித்துக் கூறும் இக்கருத்து எமது புரிதலுக்கு உதவக்கூடியது: 'முதலாளித்துவ உற்பத்தி முறையை உற்பத்தி என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் - சந்தை அடிப்படையிலோ, உலக வர்த்தகத்தின் அடிப்படையிலோ அன்றி - உற்பத்தி என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் மட்டுமே மூலதனத்தின் முதல் தொகுதி ஆய்வு செய்கிறது. மூலதனத்தின் இரண்டாவது தொகுதி (நிறைவு செய்யப்படவில்லை) பரிவர்த்தனை உறவுகள் பற்றிய பார்வையை வழங்குகிறது. மூலதனத்தின் மூன்றாவது தொகுதி முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளின் விளைவாக நெருக்கடிகள் உருவாவதைப் பற்றி முதலில் முழுமையான கவனத்தைச் செலுத்துகிறது. பின்னர் உபரி மதிப்பானது, வட்டி, நிதி மூலதனத்துக்குக் கிடைக்கும் ஆதாயம் நில வாரம், வர்த்தக மூலதனத்துக்குக் கிடைக்கும் லாபம், வரிகள் போன்றவைகளாக விநியோகிக்கப்படுவதை விளக்குகிறது. எனவே 'மூலதனம்' தொகுதி ஒன்றின் பகுப்பாய்விலிருந்து விடுபட்டுப்போனவை பல உள்ளன. ஆனால், முதலாளித்துவ உற்பத்தி முறை உண்மையில் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிய உங்களுடைய புரிதலுக்குத் தேவையானவை போதுமான அளவில் அளிக்கப்பட்டுள்ளன'.

இவ்வகையில் மூன்று தொகுதிகளில் உள்ளவற்றை எவ்வாறு கற்பது என 496 பக்கங்களில் காட்டும் போதே அடிப்படையை முழுதாகக் காட்டிவிடுகிறார் ஆசிரியர். ஆயினும் இது சுருக்கம் அல்ல என்பதை வலியுறுத்தி, மார்க்ஸை நேரடியாகக் கற்பதன் அவசியத்தை வலியுறுத்துவார். 'மார்க்ஸை அவரது வழியிலேயே வாசிக்க முயலுங்கள் என்று உங்களிடம் வலியுறுத்திக் கூறிக்கொண்டே நான் இந்த நூலைத் தொடங்கினேன். உங்களுக்கு வழிகாட்டுவதற்காக நான் எனது மனதில் உருவாக்கிக்கொண்ட வரைபடத்தில் மார்க்ஸின் வழி என்ன என்பதைப் பற்றிய எனது கருத்து முக்கிய பங்கு வகித்தது. என்னிடம்தான் சரியான திசை வழியும் சரியான வாசிப்பு முறையும் இருக்கிறது என்று உங்களை நம்பத்தூண்டுவது எனது நோக்கமல்ல. நீங்களே உங்களுடைய சொந்தமான அர்த்தங்களையும் விளக்கங்களையும் உருவாக்கிக் கொள்வதற்கான பாதையை முதலில் திறந்துவிடுவது எனது நோக்கமாக இருந்தது'(பக்.494-495) என டேவிட் ஹார்வி எச்சரிப்பதில் பொருளுள்ளது.

மூலதனம் தொகுதிகளை மட்டுமன்றி, இதனை மேலும் விளக்கும் 'உபரி மதிப்புக் கோட்பாடுகள்' எனும் நூலின் மூன்று தொகுதிகளின் உதவியோடு மார்க்ஸை வாசிப்பதற்கு வழிப்படுத்துகிறார் டேவிட் ஹார்வி. அந்தவகையில் முழுமையாக மார்க்ஸைப் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் இந்நூல் தொடர்பான கருத்துரைப்பையும் மிகுந்த எச்சரிக்கையோடு மேற்கொள்ள வேண்டியுள்ளது. மூலதனத்தைப் புரிந்துகொள்வதில் உள்ள சிரமம் குறித்துக் கூறுகையில் மார்க்ஸ், அறிவுத் தேடல் செங்குத்தான சிகரத்தில் ஏறுவதை ஒத்தது - அதற்கான அர்ப்பணிப்புடன் எத்தனிப்பவர்களே சிகரங்களின் உச்சங்களை எட்ட முடியும் எனக் கூறியி

ருந்தார். அந்த ஏற்றத்தின் ஊன்றுதடியை வழங்குகிறேன் என்பவரை விளக்குவது விளக்குக்கு வெளிச்சம் காட்டுவதைப் போன்றதாகலாம். இருப்பினும் இந்நூல் வளர்த்துச் செல்லும் முறையில் மூலதனம் குறித்து சில விடயங்களை, முழுதாகப் படிக்கும் தேடலுக்குரிய வகையில் இங்கு முன்வைப்பேன்.

சரக்கு என்பது பரிவர்த்தனை மதிப்பின் பொருளாதார சுமைதாங்கியாகும் (35). சரக்குப் பரிவர்த்தனை வாயிலாக லாபம் எட்டப்பட்டு, அது மூலதனமாகத் திரட்சியுற்று முதலாளித்துவ முறை தோன்றிவளர்ந்தமையை ஆய்வு செய்யும் மார்க்ஸ் தோற்றமயக்கங்களுக்கு இடமளியாமல் புறநிலையைப் பொருள்முதல்வாத அடிப்படையில் அணுகுகின்றார். இதனைப் பொருள்முதல்வாத அடிப்படைவாதியாக அல்லாமல், ஊசலாட்டமில்லாப் பொ.மு.வாதியாக செய்கிறார் (36). இயங்கியல் அணுகுமுறையை ஒவ்வொரு அசைவிலும் கவனம் கொள்வதனாலேயே பொ.மு.வாத அடிப்படைவாதியாகிவிடாது செயலாற்ற முடிந்துள்ளது. இயங்கியல்-பொருள்முதல்வாதம் குறித்து மார்க்ஸ் தனியாக எந்த விரிவுரையும் மேற்கொள்ளாத போதிலும், மூலதனம் பற்றிய ஆய்வுச்செல்நெறியே அதற்கு உதாரணமாக அமைகிறது.

பயன்மதிப்புடையதான சரக்குப் பரிவர்த்தனை மதிப்பை ஸ்தூலமற்ற உழைப்பினால் பெறுகிறது; மனித உழைப்பின் இறுகிப்போன தன்மையே 'மதிப்பு' ஏற்படும் சரக்கில் உறைந்துள்ள ஸ்த்தூலமற்ற உழைப்பாகும்(38-39). மதிப்பு என்பது அவசியமான சமூக உழைப்பு நேரம் ஆகும்(40). இது லாபம் தரும் வகையில் முழுச் சமூகமும் மாற்றப்படுகிறது. சமூகம் என்பது இதன்போது முழு உலகச்சந்தை ஆகிவிடுகிறது; தேச எல்லை கடந்த உற்பத்தி-விநியோகம் என்ற புதிய வாழ்முறை உலகை ஒன்றிணைப்பதாக அமைந்தது(41). சந்தையில் நிலவும் கேள்வி வழங்கல் என்பது பயன்மதிப்பில் தாக்கம் விளைத்தபோதிலும் அடிப்படையான மதிப்பு மாறாது இருக்கும் (45). மனித உழைப்பினால் மதிப்பு எனும் பெறுமானம் பெற்றவகையில் சரக்குகள் சமமானவையாயுள்ளன (47). இயற்கைப் பொருளானது மனித உழைப்பின் பேறாக பயன் மதிப்புடையதாகியுள்ளது(51). இந்தச் சமத்தன்மை அடிப்படையில் அவற்றிடையேயான பரிவர்த்தனையைக் கணிப்பிட பணச் சரக்கு அவசியமாகிறது; பணச்சரக்கு என்பது அவசியத் தேவையாய் வந்ததேயன்றிக் கண்டுபிடிப்பல்ல (56-7). இத்தர நிர்ணயத்தை தங்கம்-வெள்ளி போன்ற உலோகங்கள் பெற்றன; ஒவ்வொரு பரிமாற்றத்திலும் அவற்றை கைமாற்ற இயலாது என்கிறவகையில், அவற்றைப் பெற்றுள்ள அடிப்படையில் தேசங்களின் நாணய வெளியீடுகள் அமைந்தன (1971இன் பின்னர் டொலர் தர நிர்ணயக் கருவியான போதிலும், அந்த இடத்தை யூரோ வோ யென்னோ பெற்றாலும் தங்கம்-வெள்ளி ஆகியன வகிக்கும் பாத்திரத்தை இழந்துவிடவில்லை எனப் பின்னாலே 127ஆம் பக்கத்தில் வலியுறுத்துவார்).

சரக்குகள் சுற்றோட்டத்தில் இயங்கும்போது பணம் அனைத்தையும் சமப்படுத்தி, ஒருவகையான ஜனநாயகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது (113). சரக்குச் சுற்றோட்டம் வாயிலாக உலக சந்தை ஏற்படுவது 16ஆம் நூற்றாண்டின் பிரதான போக்காக ஆனது(134). முன்னதாக பண்டப்பரிவர்த்தனை நிலவியபோது இடையூடகமாய்ப் பணம் இருந்ததுண்டு. சரக்கு-பணம்-சரக்கு என்பதில் பணப் பெறுமானம் மாற்றம் பெறாது. இப்போது பணம்-சரக்கு-பணம் என்று ஆகும்போது பிந்திய இறுதிநிலையில் கூடுதல் பணம் ஏற்பட்டிருக்கும்(137). இந்தக் கூடுதல் பணத்தில் பயன்படுவன போகவுள்ள ஒரு பகுதி மூலதனமாகிறது. தொழில் மூலதனத்துக்கு முன்னதாக வணிக மூலதனம், வட்டி மூலதனம் என்பனவும் ஏற்பட்டிருந்தமையை மார்க்ஸ் கவனம் கொண்டிருந்தார் (148). அதேவேளை, ஒருமூடிய பொருளாதார நிலையில் தொழில் மூலதன உருவாக்கத் தன்மையை அவர் விளக்குவதற்கும் அவசியமிருந்தது. பண்ணைகளையும் கைத்தொழில் உடைமைகளையும் இழந்து கையறு நிலையில் தொழில் நகரங்களை நாடித் தொழிலாளர் வரும்வகையில் வணிகத்தந்திரங்களும் அரசியல் போக்குகளும் அமைந்தன (என்னதான் அரசு தலையிடாத் தாராளவாதம் பேசப்படினும் இந்தத் தேவைகளுக்கு அவ்வப்போது அரசு தேவைப்பட்டிருந்தது; மறுதலையாக மக்கள் நலச் சட்டங்கள் தொடர்பிலும் அரசுத்தலையீடு இருந்ததுண்டு-முதலாளியத்தைப் பாதிக்காத வண்ணம் சமநிலையை ஏற்படுத்தும் வகையில்). இவ்வகையில் சுதந்திரமாய் எவருக்கும் உழைக்க முன்வரும் தொழிலாளர்கள் தோன்றினர்; எந்த உற்பத்திச் சாதனங்களோடு தொடர்பற்று விடுவிக்கப்பட்டவர்கள் என்ற வகையிலும் தொழிலாளர்கள் சுதந்திரர்களாவர். மாறா மூலதனம் ஆகிய இயந்திரங்கள், மாறும் மூலதனமான தொழிலாளர்களது உழைப்பைக் கொண்டு உற்பத்தியாக்கும் சரக்கில் உள்ள உபரிமதிப்பு உண்மையில் தொழிலாளர் உழைப்பின் பேறு என்பதை நிறுவியமையே மார்க்சின் மகத்தான கண்டுபிடிப்பாக அமைந்தது. தொழிலாளர் வாழ்வும் மறு உற்பத்தி பெற (இனம் பெருக்க ஏற்ற குடும்ப அமைப்புப் பேண) அவசியமான அளவில் மட்டும் கூலியை வழங்கி இந்த உபரி மதிப்பு பெறப்படுகிறது.

இந்தச் சுரண்டலுக்கு அமைவாக உழைப்பு நேரம் முக்கியம்பெறும். தொழிலாளிக்கான தேவைக்குரிய பணத்துக்கு மேல் எவ்வளவு மணி (செக்கன் அளவிலுங்கூட) உழைப்பை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதில் முதலாளித்துவத்தின் கவனம் அமைந்திருக்கும். இதன் வெளிப்பாடாக நேரம் பற்றிய உணர்வு முதலாளிய எழுச்சியோடு அதிகரித்து வந்தது; நிமிடம் பற்றிய உணர்வு 19ஆம் நூற்றாண்டிலே கவ

னம்பெற்றது(221). இவ்வகையில் தொழில் நுட்ப விருத்தி மகத்தான சாதனையை ஏற்படுத்தியதென வலியுறுத்தும் மார்க்ஸ், தொழில்நுட்பவாதி எனக் கருத இடமளிக்கிறார் (286). போக்குவரத்து - தொடர்புசாதன விருத்திகளும் இயந்திரப் பெருக்கமும் வாழ்முறையில் பெருமாற்றங்களை ஏற்படுத்தியது(306-7). இந்த விருத்திகளின் பேறாக போதிய ஓய்வை அனைவரும் பெறும்வகையில் வாழ்வாதாரங்கள் பெருகியுள்ளதால் சோசலிசத்துக்கான அடிப்படை எட்டப்பட்டுள்ளது என்பார் மார்க்ஸ் (327).

இந்த உற்பத்திப் பெருக்கத்துக்கான சாதனங்கள் அனைத்தும் சமூக உழைப்பின் பேறு என்பதை நிறுவுவதைத் தொடர்பணியாக்கிக் கொண்டதன் பேறாக சோசலிசத்தின் வருகையை அவரால் முன்மொழிய இயலுமாயிற்று. தொழிலாளர்கள் தமது உழைப்பின் மதிப்பை அல்ல 'உழைப்பு சக்தியின் மதிப்பை' முதலாளியிடம் விற்று தமது வாழ்வாதாரத்துக்கான பணத்தைப் பெறுவர் என்பதிலிருந்து அவரின் நுட்பமான விவாதம் தொடங்குகிறது(352-3). அவர்களது உழைப்புச் சக்திக்கு வழங்கப்பட்ட கூலி அவர்களது அன்றாடத்தேவைக்கும் மறு உற்பத்திக்குமான சரக்குகளைப் பெறுவதற்கே போதுமானதாகும். அந்தவகையில், உழைப்புச் சக்தி எனும் சரக்கு-பணம்-சரக்கு என்ற சுற்றுவட்டமே அவர்களளவில் செயற்பட, முதலாளிகள் உரிய கூலி வழங்காமல் உற்பத்தி செய்த சரக்கிலிருந்து பெறும் உபரி மதிப்பால் மூலதனத்தைப் பெறுவர் (பணம்-சரக்கு-கூடுதல்பணம் என்பது முதலாளியிடமான சுற்றோட்டமாயுள்ளது). இவ்வகையில் மூலதனத் திரட்டலுக்காகவே மூலதனத் திரட்டல்/உற்பத்திக்காகவே உற்பத்தி எனும் செயலொழுங்கு இயங்கியவாறு உள்ளது(378). இதன் உடன் விளைவாக நுகர்வுக்காக நுகர்வு என்பதும் இயக்கம்பெறுகிறது(379). ஆக, மூலதனம் ஒரு பொருளன்று, அது ஒரு நிகழ்முறை- தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருப்பது(383).

பண்ணை அடிமையாக இருந்தபோது குறித்த ஒருவருக்கு உழைப்பவர் என்பதிலிருந்து விடுபட்டு விரும்பிய எவருக்கும் உற்பத்தி சக்தியை விற்கும் வகையில் அனைத்து உற்பத்திச் சாதனங்களிலிருந்தும் தொழிலாளியாக விடுதலை பெறுவது முதலாளியத்துக்கான முன்தேவை; இதற்கெனச் செய்யப்பட்ட சாந்தசொரூப வன்முறைகளை - நில அபகரிப்புகளால் ஒட்டாண்டிகளானவர்களை குற்றச்செயலுக்குரியோரென அடையாளப்படுத்தி சிறையிடல் வரை செய்தமையை- விவரிப்பார் (431). குடியேற்ற நாடுகளிலும் பதுக்குதல்கள் மூலமாக ஏற்படுத்திய செயற்கைப் பஞ்சங்கள் எனும் வன்முறை மூலதனத் திரட்டலுக்கு அவசியமாயிருந்தது என்பார்(434). இவ்வகையில் பழைய சமூகத்திலிருந்து புதிய (முதலாளித்துவ) சமூகம் தோற்றம் கொள்ள வன்முறை எனும் மருத்துவச்சி அவசியமாயிருந்தது - வன்முறை என்பதை எப்போதும் ஆயுதமேந்திய வடிவத்திலேயே காண அவசியமில்லை.

இவ்வாறு உடைமை பறிப்போரிடமிருந்து சமூகம் உடைமைப் பறிப்பை மேற்கொள்ளும் நியாயமான கடமையையே பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக மேற்கொள்ளப்படும் சோசலிச அரசியல் நடவடிக்கை நிறைவு செய்கிறது என்பதை நூலின் பொதுப்போக்குக்கு மீறி உணர்ச்சி பொங்கக் கூறிச்செல்வார் மார்க்ஸ் (437). பிரபுத்துவம் ஒரே புரட்சியில் வீழ்த்தப்படவில்லை; நூற்றாண்டுகளாய் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வடிவப் போராட்டங்களும், இண்டு இடுக்குகளிலான வாய்ப்புகளும் பயன்படுத்தப்பட்டே இறுதியாக வீழ்த்தப்பட்டது. அவ்வாறே பாட்டாளி வர்க்கம் தலைமையேற்றுள்ள வர்க்கப்போராட்டமும் தொடர் முயற்சிகளுக்கு உட்பட்டதே(494). 'வர்க்கப் போராட்டம் என்ற கருத்தே பத்தாம்பசலித்தனமானது' எனக்கூறுவோர் பெருகியுள்ளனர்; 'ஆனால் வர்க்கப்போராட்டம் என்பதை நமது அரசியல் பதாகைகளில் பொறிக்காமல் அதன் பேரிகை முழக்கங்களுக்கு ஏற்ப அணிவகுக்காமல் நாம் முன்னேற முடியாது என்பதைத்தான் 'மூலதனம்' நூலின் கவனமான வாசிப்பு மறுக்கமுடியாத வகையில் நமக்கு உணர்த்துகிறது' எனக்கூறும் டேவிட் ஹார்வி இதன்வாயிலாக மார்க்ஸ் எதிர்வுகூறியவாறு 'முதலாளித்துவமே இல்லாமல்போய் உயரிய நிலையில் உள்ள ஒரு சமூக உற்பத்தி முறைக்கு இடமளிக்கும்' வாய்ப்புக்கு அறைகூவுவார்(491).

மார்க்ஸைக் கண்மூடித்தனமாக வழிபாடுசெய்யும் பாங்கில் இந்த வாசிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதிசயிக்கத்தக்க வகையில் இன்றைய நெருக்கடிகளுக்கு வழிகாட்டும் ஆற்றல் இருந்தபோதிலும் சில விடயங்களில் சில அம்சங்களில் இடைவெளிகள் இருப்பதைக் காட்டத்தவறவில்லை. ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீதான 'வன்முறைச் சுரண்டல்' ஆதித் திரட்டலோடு முடிந்துபோன ஒன்றல்ல. இருபதாம் நூற்றாண்டுகளிலும் தொடர்வன என ரோஸா லக்சம்பேர் முன்வைத்த விமர்சனத்தை முன்னிறுத்தி இன்றுவரையில் தொடர்கிறது என்பார் இந்நூலாசிரியர்(445). ஒடுக்கப்பட்ட தேசங்கள் சார்ந்து பாட்டாளி வர்க்கப் பார்வை மற்றுமொரு கோட்பாட்டு உருவாக்கத்தை மார்க்சிய-லெனினிச அடிப்படையில் மேற்கொள்ள அவசியமான தேடலை ஏற்படுதியுள்ளது இந்நூல். இது முக்கியத்துவமுள்ள அம்சமாகும். மிக அவசியமாகக் கற்றாக வேண்டிய 'மூலதனம்' நூலை கற்பதற்குத் தூண்டும் நுட்பத்தைக் காட்டும் இந்நூலைச் சுவாரசியமாயும், இன்றைய புரிதல்களோடும் வாசிக்க இயலுமாயிருப்பதால் இதன் வழி பயணித்துப் புதிய கோட்பாடுகளையும் வகுப்போம்.

இந்தநூல் இயல்பான தமிழ் முதற் படைப்புப் போல இலக்குவன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள் ளமை பாராட்டுக்குரியது.




மானாட்டம், தங்க மயிலாட்டம் போல இது அணிலாட்டம்




**சுயநிர்ணய...**

**(27ஆம் பக்கம் தொடர்ச்சி...)**

சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் தொழிலாள வர்க்கத்தினருக்கும் இடையே கூட்டணி ஏற்படவேண்டுமென்று நாட்டம் காட்டினார். ஆனால், குணரத்தினமோ சிறுபான்மைத் தேசிய இனங்கள் ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்காக புரட்சி நடைபெற்று முடியும்வரை காத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். சார் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான சிறுபான்மைத் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை முற்போக்கானது என்றுலெனின் வலியுறுத்திக் கூறினார். சிங்கள - பௌத்த வாத அரசுக்கெதிரான (இலங்கையின்) சிறுபான்மை இனங்களின் பிராந்திய சுயாட்சிக்கான கோரிக்கையைக் கூட குணரத்தினம் தவறானது என்கிறார். தேசிய இனப் பிரச்சினை தொடர்பிலும் வர்க்கங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையேயான புரட்சிகரக் கூட்டணியை பலப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் லெனினும் குணரத்தினம் மற்றும் ஜே.வி.பி.யினதும் நோக்குகள் முற்று முழுதாக மாறுபட்டவையாகும். இரு துருவங்களைப் போன்றவை.

சுயநிர்ணய உரிமையைப் பொறுத்தவரை வெளியக, உள்ளக உரிமைகள் என்று எதுவுமிருக்க முடியாது. நான் மேலே விளக்கிக் கூறியதைப் போன்று சுயநிர்ணய உரிமை என்றால் சுயநிர்ணய உரிமைதான். அத்துடன் அதற்கு முற்றுப்புள்ளியே. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் சில அறைவேக்காட்டு தமிழ் புத்திஜீவிகளும் உள்ளக சுயநிர்ணயம், என்று அழைப்பது உண்மையில் சமஷ்டியும் பிராந்திய சுயாட்சியும் அவற்றைப் போன்ற ஏற்பாடுகளுமே யாகும். அவை ஒருபோதுமே சுயநிர்ணய உரிமைக்குரிய விடயங்கள் இல்லை. அவை இணைந்து நிர்ணயம் செய்யப்படுபவை (co -determination) யாகும். அத்தகையதொரு ஏற்பாட்டைச் செய்வதற்கு X உம் Y உம் (அல்லது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள்) கூட்டாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். உள்ளக சுயநிர்ணய உரிமை என்று அழைப்பது வெறும் அபத்தமாகும். அத்தகையதொரு விடயம் இல்லவே இல்லை.

இத்தகைய விசித்திரமான சொற்பதம் ஒன்றைப் பயன்படுத்துகின்ற நிலைக்கு இவர்கள் ஏன் சென்றார்களோ? நான் இவர்களுக்காக அனுதாபப்படுகிறேன். விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களாக இருந்த சில தமிழ் புத்திஜீவிகள் இன்னமும் கூட புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளின் எஞ்சிய பிரிவினருடன் நெருக்கமாக இருந்துவருகின்றனர். சுயநிர்ணய உரிமை என்ற பதத்தை அவர்கள் எளிதில் கைவிடுவதற்குத் துணிச்சல் கொள்ளமாட்டார்கள். அதேவேளை, அவர்களால் பெறமுடியுமாக இருந்தால் நியாயபூர்வமான அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் சுயாட்சியையும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் யதார்த்த பூர்வ அரசியலில் (உள்ளக இணக்கத்தீர்வு முயற்சிகளில்) ஈடுபடுகின்ற அதே வேளை, திரிவுபடுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமைக் கோஷங்களிலும் தொங்கிக் கொண்டு இடைவெளியை நிரப்பப் பார்க்கிறார்கள். நடைமுறை அரசியல் செயற்களத்தில் அவர்களுடன் நான் கடுமையாக வாதிட மாட்டேன். ஆனால், தத்துவார்த்தக் களத்தில் எந்தத் தவறுமே திருத்தப்படாமல் விடப்படக்கூடாது.

## கடைசிப் பக்கம்...

*(64ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

வசதிகள் பெருப்பித்துக்காட்டப்பட்டன. 60களுக்குப் பின்னால் அரசியல் உரிமைகளை இம்மக்கள் பெறத் தொடங்கியதோடு, இவர்களது அபிவிருத்தி குறித்த கோரிக்கைகள் வலுப்பெறத் தொடங்கின. கம்பனிகளின் கட்டுப்பாட்டிலிருந்து, அரசாங்கத்திடமிருந்து பெறவேண்டிய உரித்துகளைக் கோரத் தொடங்கினர். அரசியல் உரிமை பெறத் தொடங்கியதோடு, அபிவிருத்தி பற்றிய பரிமாணத்திலும் புதிய சேர்க்கைகளை இங்கு கவனிக்க முடிகின்றது. ஒரு சமூகம் வளர்ச்சிப் பாதையில் வேக நடை போடுகையிலே அபிவிருத்தியின் பல்வேறு பரிமாணங்கள் இனங் காணப்படுகின்றன.

மலையக சமூகம் வெறும் தொழிலாளர் சமூகமாக தோட்ட நிர்வாகத்திற்கு உட்பட்டு ஒரு கட்டுண்ட நிலையில் மேல்நோக்கிய சமூக அசைவிற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்த நிலை தற்போது மாறிவருகின்றது. மேல் நோக்கிய சமூக அசைவோடு புவியியல் ரீதியான சமூக அசைவும் வேகமாக இடம்பெறுவதும் தற்போது அவதானிக்கப்பட்டு வருகின்றது. இந்த இரண்டின் விளைவு, இந்த சமுதாயத்தின் நிலையான இருப்பிற்கும் அடையாளத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்துமோ என்ற கவலையும் கூடவே ஏற்பட்டு வருகின்றது. இந்த அச்சுறுத்தலுக்கு பின்னணியில் இருப்பது அடிப்படையில் வீட்டு உரிமையாகும். தொழிலாளர்களுக்காக தோட்டங்களில் வாழ்கின்றவர்களுக்கு வீடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒரு குடும்பத்தில் ஒருவரேனும் தோட்டத் தொழில் செய்பவர்களாக இருக்கும்வரை அந்த லயன் அறைகளுக்கு அவர்கள் சொந்தம் கொண்டாடலாம். பிள்ளைகள் படித்து தொழில் நிமித்தம் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து (மேல் நோக்கிய மற்றும் புவியியல் ரீதியான சமூக அசைவு) ஓய்வூதியம் பெறும் பெற்றோர்களையும் தங்களோடு அழைத்துக் கொண்டாரெனில் அந்தத் தோட்டத்திலே பூர்வீகமாக வாழ்ந்த அந்த இருப்பை இழக்கின்றனர். இந்த நிகழ்ச்சிப் போக்கு வலுவடைந்து பாரிய அளவில் இடம்பெறுமாகில் ஒரு பிரதேசத்தில் கணிசமாக வாழ்கின்ற ஒரு சமூகம் பரவலாக்கப்பட்டு அடையாளத்தையே இழக்கின்ற நிலை உருவாகலாம். இருப்பும் அடையாளமும் நிலைபேறாக அமைய வீட்டுரிமை முக்கியம்.

வீட்டுரிமை கிடைக்குமாயிருப்பின் தேயிலைத் தொழிலுக்கு அது அபாயம் என்ற ஒரு முரண்நிலையும் அவதானிக்கப்படுகின்றது. உழைப்புச் செறிவான தேயிலைத் தொழிலின் நிலைபேற்றுத்தன்மை தடங்களற்ற தொழிலாளர்களின் நிரம்பலில் தங்கியுள்ளது என்ற பொருளாதார உண்மை வீடுகளையும் மேலும் பல வசதிகளையும் இலவசமாக வழங்கி அவர்களை ஒரு கட்டுண்ட (captive) சமூகமாக ஆக்கிய வரலாறே தேயிலையின் நூற்றைம்பது ஆண்டுகளில் பதியப்பட்ட ஒன்றாக உள்ளது. இதிலிருந்து மீளுவதற்கு உரிய மாற்று வழிகள் யாவை? வீடுகளை சொந்தமாக்கி சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய உறுதியோடு சுதந்திரத் தொழிலாளர்களாக (free labour) இவர்கள் மாறுவார்களெனில் இருப்பும் அடையாளமும் பேணப்படக்கூடிய வாய்ப்புகள் உருவாகும். ஆனால் இதற்கு எதிரான வாதமும் முன்வைக்கப்படுகிறது.


தோட்ட சமுதாயத்தின் புவியியல் பரம்பல் சில மாவட்டங்களில் செறிவாகவும் சில மாவட்டங்களில் ஐதாகவும் இருப்பதும் பெரும்பான்மை இனத்தாரோடு நெருங்கிவாழுகின்ற சூழலில் தோட்டக்காணிகளை வெளிவழங்கல் (outsourcing) அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களிடமிருந்து உற்பத்தியை (தேயிலைக் கொழுந்தை) நிச்சயிக்கப்பட்ட விலையில் பெற்றுக் கொள்கின்ற மாதிரியானது இறுதியில் தோட்டத்தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துவிடும். காரணம், (1.) தொழிலாளர்கள் சிறு நிலவுரிமையாளர்களைப் போல் 4 அல்லது 5 ஏக்கர் நிலத்தைப் பராமரிக்க அனுபவமும் சக்தியும் அற்றவர்கள். உரமிடுதல் மருந்தடித்தல் போன்ற இன்ன பிற நடவடிக்கைகள் செலவுமிகுந்தவை. (2.) தற்போதைய சிறுநில உடைமையாளர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவர்கள் நிதிவசதியோடு கூலித் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி விளைவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். (3.) பெரும்பான்மை இனத்தவர்களே சிறு நில உடைமையாளர்களாக இருப்பதால் அவர்களது அருகிலே தோட்டநிலத்தை குத்தகை பெறும் தொழிலாளர்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு மீண்டும் குத்தகைக்கு கையளித்துவிட்டு அவர்களிடமே கொத்தடிமையாகிவிடுவர். (4.)உத்தரவாதப்படுத்தப்பட்ட கூலிக்குப் பதிலாக சந்தை நிலைவரங்களுக்கேற்ப தளம்பலுக்குள்ளாகி அது கீழ் நோக்கிச் செல்லக்கூடிய அபாயம் ஏற்படலாம். (5.)இதுவரை தொழிலாளர்களாக கம்பனியிடமிருந்து பெற்று வந்த சலுகைகள், ஊழிய சேமலாபநிதி உட்பட இழக்க நேரிடும். (6.) தொழிலாளர்களாக இருந்தமையால் அவர்களது நலன்களை நீண்டகாலமாக பாதுகாத்த தொழிற் சங்கங்கள் சிறு நில சொந்தக்காரர்களாக மாறும்போது தங்களது பலத்தையும் வகிபாகத்தையும் இழக்க நேரிடும்.

இத்தகைய எதிர்வாதங்களை முன்வைப்போர் தொழிலாளர்களாக இருந்து நிச்சயிக்கப்பட்ட கூலி, தொழிற் சங்க பலம், கம்பனிகள் வழங்குகின்ற சலுகைகள் மட்டுப்படுத்தப்பட்ட வீட்டுரிமையோடு அவர்களது அபிவிருத்தி தொடர வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இத்தகைய நிலைமையில் அபிவிருத்தியில் துரித வேகத்தைப் பெற்று மலையக சமூகம் ஒரு முழுமையான அபிவிருத்தி நிலையை அடைய முடியுமா? இக் கேள்விகள் குறித்த தீர்க்கமானதும் ஆழமானதுமான விவாதம் சம்பந்தப்பட்ட உரித்தாளர்களால் தொடங்கப்பட வேண்டும்.

## கடைசிப் பக்கம்

# அபிவிருத்திப் பாதையின் இடர்மிகு திருப்புமுனையில் மலையக சமுதாயம்

வெறும் தொழிலாளர் சமூகமாக தோட்ட நிருவாகத்திற்கு உட்பட்டு கட்டுண்ட நிலையில் மேல் நோக்கிய சமூக அசைவிற்கான சந்தர்ப்பங்கள் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைவாக இருந்த நிலை தற்போது மாறி வருகின்றது


எம்.வாமதேவன்

அபிவிருத்தியின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய குரல்கள் இன்று பல்வேறு மட்டங்களில் பலத்து ஒலிக்கின்றன. உயர் அரசியல்வாதிகள் தொட்டு பாமர மக்கள் வரை பல்வேறு உரித்தாளர்கள் மத்தியில் இக்கருத்துப் பற்றி கலந்துரையாடல்கள் மற்றும் காரசாரமான விவாதங்கள் இடம்பெறுகின்றன. இன்றைய நாட்டின் தேசிய பிரச்சினை தீர்வுக்கு அபிவிருத்தியே போதும் வேறு தீர்வுகள் தேவையில்லை என்ற வாதம் ஒரு புறம், உரிமைகள் முழுமையாக அனுபவிக்கப்படாத நிலையில் அத்தகைய அபிவிருத்தியும் அர்த்தமுள்ளதாக அமையாது என்ற நிலைப்பாடும் தேசிய மட்டத்தில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அபிவிருத்திப் பாதையில் வேகநடைபோடுவதாகக் கூறப்படும் மலையகத்தில் கொன்கிறீட் பாதைகள் அபிவிருத்தியின் பிரதான குறிகாட்டி போல அழுத்தம் கொடுக்கப்பட்டு செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இங்கு எழும்புகின்ற கேள்வி இத்தகைய சமூகபொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் (பாதைகள், மின்சாரம், கல்வி, சுகாதாரம்) ஊடாக மாத்திரம் அபிவிருத்தியடைந்துகொள்ள முடியுமா?

அபிவிருத்தி என்பது ஒரு முழுமையான தோற்றப்பாடாகும். சமூகம், பொருளாதாரம், அரசியல், கலாசாரம் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தியடைந்த சமூகம் என்று சொல்கையில் அது எல்லா அம்சங்களிலும் ஒரு உயர்ந்த நிலையை கீட்டிக்காட்டும் அதனுடைய குறிகாட்டிகள் பல. வறுமையில்லாத நிலை, வாழ்க்கைத்தர உயர்வு, அனைவருக்கும் வேலைவாய்ப்பு, நல்லாட்சி, நீண்ட ஆயுள், எதிர்பார்ப்பு என்பவை அவற்றுள் பிரதானமானவை. உலக நாடுகள் இவற்றை அடைந்து கொள்வதில் பல்வேறு கட்டங்களில் உள்ளன. அபிவிருத்தியடையும் நாடுகள் கீழ் மட்டத்தில் அமைய அபிவிருத்தியடைந்த நாடுகள் உயர்நிலையில் காணப்படுகின்றன. நாடுகளுக்குள் பல்வேறு பிரதேசங்கள் மற்றும் சமூகக் குழுக்களிடையே அபிவிருத்திக் குறிகாட்டிகள் குறித்து பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை மலையக தோட்ட சமுதாயம் அபிவிருத்தியின் அனைத்து குறிகாட்டிகளைப் பொறுத்தும் கீழான நிலையில் காணப்படுகின்றது. வரலாறு, அரசியல், பொருளாதாரம், சமூக கலாசார காரணிகள் இந்த நிலைக்கு பொறுப்புக் கூறுகின்றன. இருப்பினும் தோட்டக் கம்பனிகளின் கீழ் இவர்களுக்கு இலவச வீடு, சுகாதாரம், கல்வி வசதிகள், குறைந்த விலையில் உணவு போன்றவைகள் வழங்கப்பட்டு இவர்களுக்கு குறைந்தபட்ச வாழ்வுநிலை பேணப்பட்ட நிலையில் 60,70களுக்கு முற்பட்ட காலங்களில் இவர்கள் உயர் நிலையில் வைத்து எண்ணப்பட்டனர். அரசியல் குடியுரிமையற்ற நிலையில் தொழிலாளர்களாக மாத்திரம் கருதப்பட்ட நிலையில் இவர்களுக்கு கம்பனியும் அரசாங்கமும் அளித்த

(63ஆம் பக்கம் பார்க்க...)

EXPRESS NEWSPAPRES (CEY) (PVT) LIMITED




NEWS ALERTS

வீரகேசரியின் விறுவிறுப்பான செய்திகள்...

உடனுக்குடன் உங்கள் கையடக்கத்தொலைபேசியில் தெரிந்துகொள்ளுங்கள்

**டயலொக் : reg (space) virakesari என type செய்து**

**77007 என்ற**

**இலக்கத்துக்கு அனுப்புங்கள்.**

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. மாதாந்த கட்டணமாக ரூபா. 30/- + வரி அறவிடப்படும்.




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.